ரசு

50 காசு.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு — மதுரை 1981
திருக்குறள்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

# தமிழகத்தின் அறிவுக்கோட்டம்!

## பேரறிஞர் அண்ணா

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தது இம் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்.

இங்கு நின்றிடும் எவருக்கும், அன்றொரு நாள், அறிவாளர் அரண் அளிக்க அரசாண்ட பாண்டியப் பெருமன்னர், தமிழ் வளர்த்து, தமிழர்தம் தனிச் சிறப்பினைக் காத்து, புகழ்க் கொடி நாட்டி, தரணி மெச்சக் கோலோச்சிவந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள் எழத்தான் செய்யும்.

இன்று, நான் இங்கு நின்று, பட்டச் சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும் பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகின்றேன்; இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி, அறிவுப் புனலாடி, அகமகிழ்ந்திருந்தனர் என்பதனை எண்ணுகின்றேன்; இன்பத் தேன்சுவை நுகர்கின்றேன்.

மனக்கண்ணால் காணுகின்றேன்; முதுபெரும் புலவர்கள் அவைநோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், மூதறிஞர், காணீர் தமிழ் நெறியை, தாரணியோர் மெச்சி ஏற்றிடத் தக்கதோர் நன்னெறியை, ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை என்றுரைத்தவண்ணம், திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

தத்தமது ஏடுகளை, வித்தகர் போற்றிடத்தக்கவென விளக்கி, புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெலாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு, இங்கிருந்தன அற்றையநாளில்!

இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார்; நந்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது. அச்சம் தவிர்த்திடுக! நவநிதியத் தந்திடினும் நத்திக் கிடந்திட இசையாதீர்! வாய்மைதனைக் காத்திடும் வன்மைதனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந் தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம். இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அரு மரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம், ஏறுநடை போட்டிடுக! ஏற்றமிகு நிலையதனை இந்நாடு பெற்றிட உமதாற்றல் பயன்படட்டும் என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறி நிற்கின்றார்கள்; காண இயலவில்லை, கேட்கின்றோம் அவ்வுரையை.

பாண்டியநாடதற்குப் பாங்களித்த மாமதுரை, தமிழ் மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை, தேமதுரத்தமிழோசை திக்கெல்லாம் எழச்செய்த திருமதுரை வீரப் போராற்றலால் மட்டுமின்றி, அறிவுக்கணை தொடுத்த மாண்பினாலும், பெருமைதனைப் பெற்ற வெற்றிக் கோட்டம். ''அந்த நாளும் வந்திடாதோ!'' என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலைபெறுவர் மாமதுரைப்பதியின் வரலாற்றுச் சிறப்பறியின். ஆம்! ஆயின், ஏக்கம் நமக்கெதற்கு? அந்நாட் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம், எந்நாளும் அச்சிறப்பு இருந்திடச் செய்திடலாம். இவரெல்லாம் அதற்கே தமை ஒப்படைத்துள்ளார்கள், இவர் ஆற்றல் துணைகொண்டு, தமிழ் மரபும் தமிழ் மாண்பும் என்றும் ஒளிமயமாய்த் திகழ்ந்திடச் செய்திடலாம் என்றோர் உறுதியினைப் பெறுகின்றேன்;

(மதுரைப் பல்கலைக் கழக முதலாவது பட்டமளிப்பு விழாப் பேருரையிலிருந்து 7-9-1967)

தமிழரசு
மலர்: 11 இதழ்: 13
1-1-1981

# அன்னைத் தமிழுக்கே அரியாசனம்

**பேரறிஞர் அண்ணா**

நமது தமிழ் மொழி தொன்மைமிக்கது. மென்மை மிக்கது. வளம் பெற்றது. வலிமை பெற்றது. வலிவும், பொலிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைத்தது தமிழ். பல மொழிகளுக்கு தாயகமான அத்தகைய தமிழை, தமிழின் சிறப்பை பல பகுதிகளிலும் உள்ளோர் ஓரளவு அறிந்துள்ளார்கள். பெரும் அளவு, முழு அளவு தமிழின் சிறப்பை, மாண்பை உலகம் ஒப்புக் கொள்ளும் அளவுக்கு ஆவன செய்ய இந்த மாநாடும், மாநாட்டில் நடக்கும் ஆராய்ச்சியும் உதவும் என நம்புகிறேன். இத்தமிழ் ஆராய்ச்சியால் புதிய கட்டம், நல்ல கட்டம் ஏற்படுத்தப்படும் என நம்பலாம். இந்த ஆராய்ச்சியின் பயன், பல காலமும் தமிழ் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தமிழர் வாழ்வுக்கும் வழி கோலும் என்பதில் ஐயமில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு காமராஜ் பேசுகையில் முதல் மாநாட்டையே இங்கே நடத்தியிருக்க வேண்டும் என்றார். உண்மை தான். ஏனோ அந்த வாய்ப்பு கிட்டாமல் போய்விட்டது. இரண்டாவது மாநாடு இங்கு இப்போது நடக்கிறது. மலேசியாவில் நடந்த முதல் மாநாட்டில் 20 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2-வது மாநாட்டிற்கு 30-க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் கலந்து கொண்டுள்ளனர். ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்தெல்லாம் ஆராய்ச்சி வல்லுநர்கள் சென்னை வந்துள்ளனர்.

இத்தனை நாடுகளுக்கும் அறிமுகமாகியுள்ள தமிழ்மொழி இந்தியாவுக்குள்ளேயே இன்னும் பல பகுதிகளில் இடம் பெற முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். செக்கோஸ்லோவேகியாவில் தமிழ் மொழி வியந்து பாராட்டப்படுகிறது. அமெரிக்கர்கள் அறிந்து போற்றுகின்றனர். பிரிட்டிஷ், அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது என்றெல்லாம் உணரும்போது, உணர்ச்சியால் விம்மும் நமது உள்ளம் நம்மை எங்கேயெல்லாமோ இட்டுச் செல்கிறது. இன்றுள்ள நிலையை எண்ணும்போதுதான், இருக்கின்ற இடத்திற்கு வருகிறோம். தமிழர் தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் வரலாற்றை அறிந்து ஆற்றலுடன் அறிவுடன் ஒன்றுபட்டு பெரும் முயற்சி செய்தால், நிச்சயம் அந்த இடத்திற்கு நாம் செல்வோம்.

உலகில் மொழி அறிவு தோன்றியிராத காலத்தில், மொழி இலக்கியம், மொழி இலக்கணம் பெற்றிருந்தது தமிழ். எட்டுத் தொகை என்றும் பத்துப் பாட்டு என்றும், பதினெண் கீழ்க் கணக்கென்றும் பெற்றிருந்தோம். ''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் குறளுக்குச் சொந்தக்காரர்களாக நாம் இருந்தோம். அத்தகைய தமிழுக்கு புதிய வலிவும் பொலிவும் இந்த மாநாட்டினால் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டில் தமிழ்மாநாட்டில் நடந்த, நடக்கின்ற அரிய நிகழ்ச்சிகளைக் கண்டும் தமிழ் ஆராய்ச்சி, கருத்தரங்கு உரைகளின் சிறப்பைக் கேட்டும் புதுப்பயன் பெயலாம்.

நாம் அடைந்துள்ள இந்த அகமகிழ்ச்சி மற்றவர்கள் கருதுவதுபோல் இல்லாமல் தமிழ் வளம்பெற, தமிழ் வளர்ச்சியுற வேண்டிய வழியினை, வழி வகையினைக் காணப்பயன்படுத்தப்படும் என உறுதி கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது தமிழ்மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும், முடிவுகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்வோம் என்று உறுதியாகத் தெரிவித்துக் சொள்வோம்!

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்

(ரூபாய் கோடியில)

| | 1977—78 | 1978—79 | 1979—80 | 1980—81 |
|---|---|---|---|---|
| தக் கூட்டுறவுக் கடன்கள் | 139.41 | 113.89 | 51.55 | 30.53 |
| பகால மத்தியகால மற்றும் கடன்கள்) | | | | |
| றுவிவசாயிகளுக்கு வழங்கியது | 64.63 | 55.73 | 23.44 | 14.78 |
| | 47 | 49 | 45 | 48 |
| யிகளுக்கு வழங்கப்பட்டது | 74.78 | 58.16 | 28.11 | 15.75 |
| | 53 | 51 | 55 | 52 |
| சிறுவிவசாயிகள் எண் (லட்சத்தில்) | ... | ... | 1.96 | 1.00 |
| இதர விவசாயிகள் எண் (லட்சத்தில்) | ... | ... | 2.31 | 0.70 |
| | | [1.7.80 முதல் | 31.12.80 | வரை] |
| யிகள் திருப்பிச் செலுத்திய | ... | ... | ... | 32.64 |
| யிகள் திருப்பிச் செலுத்திய | ... | ... | ... | 9.54 |
| | ... | ... | ... | 42.18 |



## ங்கப்பட்ட நகைக்கடன்

(ரூபாய் கோடியில்)

| | 1977—78 | 1978—79 | 1979—80 | 1980—81 |
|---|---|---|---|---|
| வு வங்கிகள் ... | 10.44 | 15.57 | 21.85 | 20.07 |
| பிப்புக் கூட்டுறவுச் ... | 12.92 | 19.81 | 25.91 | |
| க் கூட்டுறவு வங்கி ... | 0.54 | 1.80 | 2.59 | |
| ங்கிகள் ... | 26.87 | 41.99 | 61.07 | |
| ... | 50.77 | 79.17 | 111.42 | |

## தமிழக அரசு விவசாயிக
## சலுகைகள் விவரம்

| | | பயனடைந் விவசாயிக எண்ணிக் (இலட்சத்தி |
|---|---|---|
| 1. | அரசு ஆணை 330 கூட்டுறவுத்துறை நாள். 30-5-79-ன்படி. வழங்கப்பட்ட வட்டிச் சலுகைகள் | |
| அ. | 30-6-78-ல் நிலுவை நிற்கும் சிறு விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளின் கூட்டுறவுச் சங்க மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்தியக் கால மாற்றுக் கடன்களின் மீதான சாதாரண வட்டிச் சலுகைகள். | 1.9 |
| ஆ. | 30-6-78-ல் நிலுவை நிற்கும் அனைத்து விவசாயக் கடன்களுக்காகச் சிறு விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளுக்கு வழங்கிய அபராத வட்டிச் சலுகைகள் | 3.04 |
| இ. | நீண்டகாலக் கடன் சலுகைகளுக்காகச் சிறுவிவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளுக்கு வழங்கிய அபராத வட்டிச் சலுகைகள் ... | 0.26 |
| 2. | அரசு ஆணை 541 உணவு மற்றும் கூட்டுறவுத் துறை நாள் 17-10-80-ன்படி சிறுவிவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டு 31-3-80-ல் நிலுவையிலுள்ள மத்தியகால மாற்றுக்கடன் மற்றும் தவணை நீட்டித்த மத்தியகால மாற்றுக் கடன்கள் தள்ளுபடி செய்ய வழங்கிய சலுகைகள் ... | 4.52 |

1961லிருந்து 31-3-1977 வரை, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் வீட்டு வசதிக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 8994.02 இலட்சம். கட்டப்பட்ட வீடுகள் 40,327. 1-4-77 முதல் 31-3-81 வரை இதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 8903.68 இலட்சம். கட்டப் பட்ட வீடுகள் 22,459.

மின்சாரத்தைப் பயன்படுத்தும் விவசாயப் பயனீட்டாளர்களின் மீட்டர் கட்டணம் ரூ. 4லிருந்து 2 ரூபாயாக குறைக்கப்பட்டது.

மில் மூடப்பட்டு வேலையில்லாமல் அவதியுறும் சென்னை பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக் மில் தொழிலாளர்கள் சுமார் 13 ஆயிரம் பேருக்கு 'முதலமைச்சர் நிவாரண நிதி' யிலிருந்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

80 கோடி ரூபாய் செலவில் திருச்சி மாவட்டத்தில் புகலூ க்கு அருகில் காகித ஆலை ஒன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### அரசின் ஆக்கப்பணிகளில் சில :

கு
கடன்களு
பிறகு சி
தியுள்ள
அபராத
சாயிகள்
அபராத
களிடமிரு
கூட்டுற
வேண்டி
வரவு
களுக்கே

அரசுப் போக்கு
களின் ஊதியம்
130 ரூபாய் வ

வருவாய்
அதற்குப்
துறைகள் ஒ
கீழ் உருவா

இந்த
கட்டு
இதழ்

கும்; அறிவுச செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்.

ஆனால் தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள்.

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி இத்தகைய அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் நாம் அந்த மொழிக்குச் சொந்தக்காரர் என நினைக்கும்போது, அந்தமொழி மீது பற்றுப் பாசம் ஏற்படாமலா இருக்கும்?

அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது-எந்த நோக்குடனாவது எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால், அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதானிருக்கிறது. பக்குவமாகக் கடக்க வேண்டுமென்றால், நல்ல நாவாயின் மூலம்-கப்பலின் மூலம் கடக்கலாம்.

அதுபோல, தமிழர்களை அணைத்துக் கொண்டு சென்றால், அவர்களை விடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றினாலும்-அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க உள்ளே பேசிவிட்டு வெளியே வந்தாலும் எந்த நாட்டின் மீது யார் படையெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்.

ஆனால் உண்மையான ஒற்றுமை உணர்வினை 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொன் மொழியில் வடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழரின் பெருந்தன்மையை எண்ணி எண்ணி நெஞ்சம் விம்முகிறது.

'யாதும் ஊரே-யாவரும் கேளிர்' என்று பாடிய புலவர் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா'-என்றும் அடுத்த அடியில் பாடியிருக்கிறார்.

நல்லது வரவேண்டுமா? அது நாம்தான் செய்து கொள்ளவேண்டும். கெட்டது வர வேண்டுமா? நாம் தான் வரவழைத்துக் கொள்ளவேண்டும்! எனவே, தீது வருமோ என்று ஐயப்பாடு கொள்ள வேண்டாம்! தமிழருக்குத் தீது பிறர் தருவதால் அல்ல-நாமே தீது தேடிக்கொண்டாலொழிய, தமிழர்களுக்குத் தீது ஒருபோதும் வராது.

தமிழ் மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும்உரியதல்ல; எங்களுக்கும் அதுதான் மொழி, அதுதான் இணைப்பு மொழி, அதுதான் பொது மொழி, அதுதான் ஆட்சி மொழி என்று கூறும் காலம் வரும்.

அந்தக் காலம் அவசர நடையால் வருவதல்ல! அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும்வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ள வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் மறையிலும், தமிழ் நெறியிலும், காலம்-இடம்-வகை-பொருள் அறிந்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்தக்கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம்!

[1968-ல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் துவக்க விழாவில் ஆற்றிய உரை]

3வது அட்டை சொல்லும் செய்தி:

## தமிழ்நாட்டின் 6வது திட்டம்

தமிழகத்தின் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு திட்டக்குழு அங்கீகாரம் அளித்திருக்கிறது. தமிழ்நாட்டின் 6-வது ஐந்தாண்டுத்திட்ட அளவு ரூ. 3,150 கோடி என இறுதியாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை இறுதியாக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். மாண்புமிகு நிதியமைச்சர் திரு நெடுஞ்செழியன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன், தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி மாண்புமிகுதிரு எஸ். முத்துசாமி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன், இரண்டாவது செயலாளர் திரு. கே. திரவியம் ஆகியோர் டெல்லியில் மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி, மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு மத்திய திட்ட அமைச்சர் திரு. திவாரி மற்றும் மத்திய அரசின் உயர் அலுவலர்களுடன் விவாதித்தனர்.

தமிழ்நாட்டில் ஆறாவது திட்டத்துக்கு 3150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய மத்திய திட்டக்குழு ஒப்புக் கொண்டுள்ளது. மாநில அரசின் மீது மத்திய அரசு கொண்டுள்ள ஒத்துழைப்பு மனப்பான்மையை இது காட்டுகிறது.

தமிழக அரசு எதிர்பார்த்த அனைத்துத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீட்டினைச் செய்ய மத்திய அரசால் இயலவில்லை என்றாலும்கூட, முன்பு அறிவித்ததைவிட கூடுதலாக தற்போது ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழக மக்களுக்கு நன்மை கிடைக்கும் 'சென்னைக்கு காவிரி நீர்' போன்ற பல்வேறு திட்டங்களைத் தீட்ட உதவியிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டெல்லி பயணம் வெற்றிப் பயணமாக அமைந்தது என்று சொன்னால், அது மிகையாகாது.

# எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்..



## பேரறிஞர் அண்ணா

பெரும் புலவர்களை வர வேற்றுப் பெருமைப் படுத்துவது என்பது தமிழகத்திலுள்ள பழம் மரபு ஆகும். பழங்காலத்தில் மன்னனின் மணி மண்டபத் திலோ அரசவையிலோ நடை பெறும் பல்வேறு விழாக்களிலே வெளியிலிருந்து வரும் புலவர் களை வரவேற்பதுதான் மிகச் சிறந்த விழாவாகக் கருதப்படும்.

வெளியிலிருந்து வந்த புலவர் களை அரசவைக்கு உலாவாக அழைத்து வருவார்கள். அரசவை யிலே ஏற்கனவேயுள்ள புலவர் களுடன் அவர்கள் உரையாடி மகிழ்வர்.

தமிழ்நாட்டில் தமிழர்கள் தமிழ் மொழியைத் தங்கள் எண் ணங்களை வெளியிடும் கருவியாக மட்டும் நினைக்கவில்லை. தங் கள் மொழியையும் - வாழ்வை யும் ஒன்றாக இணைத்துக் கொண் டார்கள்; மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழிநடத்தும் துணைவன்; வழி காட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண் பன் என்று நினைக்கிறார்கள். அதனால் தான் தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது- ஆபத்து வருமோ என்று ஐயம் தோன்றும்போது ஆபத்து வரக் கூடுமோ என்ற சந்தேகம் வரும் போது தமிழர்கள் ஆர்த்தெழு கிறார்கள்.

தமிழார்வம் பெருகிப் புது புதுக் கவிஞர்கள் - புலவர்கள் புதுப்புதுப் பொருளைஆராய்ந்து வெளியிடுகிறார்கள். நல்ல உரை நடையாசிரியர்கள் - மொழி பெயர்ப்பாளர்கள் - பேச்சாளர் கள் தொகை ஓங்கி வளர்ந்தது; ஓங்கி வளர்ந்தபடி இருக்கிறது! எதற்குமே ஆபத்து என்றால் தான் அதற்குப் பாதுகாப்பும்- உணர்ச்சியும் தோன்றுகிறது!

தமிழ்க் கவிதைகளை - தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகை யில்;

ஒன்று: நூலிலுள்ள அருமை பெருமை - நூல் நயம் -இலக் கணச் சுவை கண்டு படித்து இன் பம் பெறுவது.

இரண்டு: அந்த இலக்கியத் தைப் பிறநாட்டு இலக்கியங்களு டன் ஒப்பிட்டு எந்தெந்த வகை யில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட்டாரும் உணரச் செய் வது.

மூன்று: அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

ஏடுகளிலுள்ள நயம் எண்ணி மகிழ்வது என்றால் - அது புலவர் குழுவோடு நின்றுவிடும்.

பிறநாட்டார் நமது ஏடுகளை அறிந்து கொள்வதற்கு என்றால்- அது கருத்தரங்கோடு நின்று விடும்!

சமுதாயத்திற்கு என்ன பயன் என்று ஆராயும் வழியில் தமிழ் நெறியோடு புலவர்கள் தமிழ் மக்களை உடனிருந்து அழைத்துச் செல்ல வேண்டும்!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற திருக்குறள் உள்ளபோது நாலுவர்ணம் நமக்குள் புகுந்த மார்க்கம் என்ன?

அந்தக்கொள்கை வந்தபோது எதிர்த்தவர் எத்தனைப் பேர்? வந்தது வரட்டும் என்று இருந்தனரா? இலக்கியத்தில்-ஒரு வரிக்கும் இன்னொரு வரிக்கும் இடையேயுள்ள உட்பொருளை எடுத்து விளக்குவது என்பது போல் புலவர் பெருமக்கள் இந்த உட்பொருளை எடுத்து விளக்கி னால் பயன்கிட்டும்!

உள்ளமெல்லாம் தமிழ் நிறைந் திருக்கும் வேளை - ஊனும் உயி ரும் தமிழோடு கலந்திருக்கும் வேளை - எதைப்பற்றி பேசினா லும் தமிழைப்பற்றியே பேசிடும் வேளை - எதையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வேளை இந்த வேளையில் நான் ஆற்றும் பேருரை - பேருக்குத் தான் உரையாக அமையுமே யல்லாது பேருரையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

இங்கு பூம்புகாரில் 10 நாட் களாக நாம் கண்ட காட்சி- கேட்ட கருத்துக்கள் - உள்ளத் தில் பொங்கிய எழுச்சியைப் பார்த்த நாம் - நாளைய தினம் இதே உற்சாகத்தோடும்-உள்ள எழுச்சியோடும் இங்கு காணப்

**தமிழ் கற்ற—தமிழைப் பரப்புகிற—புலவர்கள் ஏழ்மையில் வாழ்ந்து தான் தீரவேண்டும் என்ற சமுதாய அமைப்பு இருக்குமானால் அதை மாற்றி அமைக்க இந்த அரசு பாடுபடும். தமிழ் கற்ற புலவர்களின் குடும்பமும்–சுற்றுச் சார்பும்–மகிழ்ச்சியோடு இருக்க நாங்கள் பாடுபடுவோம்.**

**— மாண்புமிகு முதல்வர்**

போகிறோமா? என்றால் கூற முடியாது.

ஏதாவது ஒரு முறையில் இந்த மாநாடு தொடர்ந்து நடக்காதா? பத்து நாள் நிலவிய தமிழ் நாதம் நிரந்தர நாதமாக இருக்காதா? -இந்த மாநாடு போல் எல்லா ஊர்களிலும் மாநாடு நடத்தக் கூடாதா? தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் தமிழ் எழுச்சி எழச்செய்யக் கூடாதா என்று அனைவரும் நினைக்கத் தகும் அளவில் பூம்புகார் மாநாடு அமைந்தது.

மொழிக்காக ஒரு மாநாடு கூட்ட முடியும்; அதற்கு லட்சக் கணக்கில் மக்கள் வருவார்கள்; மணிக்கணக்காக - நாள் கணக்காக உட்கார்ந்திருப்பார்கள் என்று நாங்கள் அவ்வளவு அதிகமாக எதிர் பார்க்கவில்லை. ஆனால் தமிழ் மொழிப் பற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் காட்டிவிட்டார்கள். மக்களின் இந்த ஆர்வத்தைக் கண்ட வெளிநாட்டார் தத்தமது நாட்டிற்குச் சென்று கூறப்போகிறார்கள்.

எந்தத் தமிழைப் பற்றி ஆராய தமிழகம் சென்றோமோ-அந்தத் தமிழகத்திலுள்ள மக்கள்-எங்களுக்கு முன்பே நெடுங்காலம் தொட்டு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியால் அகமகிழ்ந்து அந்தத் தமிழ்மொழியை ஆவியிலும் மேலாக நேசிக்கிறார்கள். தங்களுக்கு இன்பமளிக்கும் எல்லாச் சாதனங்களிலும் உயர்ந்ததாக நினைக்கிறார்கள். தமிழ் மொழியின் மாண்பை எண்ணி எண்ணி மகிழ்கிறார்கள். அந்தத் தமிழுக்கு எந்தப் பக்கமிருந்து எவரிடமிருந்து எந்த வகையான ஊறு வந்தாலும் - ஊறுவரும் என்று ஐயப்பட்டாலும் தமது இன்னுயிரைத் தந்தேனும் தமிழைக் காப்போம்-என்று அந்த வெளிநாட்டு வித்தகர்கள் தமது நாடுகளான ருஷ்யாவிலும், ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், இந்தோனேசியாவிலும், மோரீஸ் தீவிலும், பிஜித் தீவிலும் பேச இருக்கிறார்கள். பேச வாய்ப்பும்-உரிமையும் உள்ள இடத்திலெல்லாம் பேச இருக்கிறார்கள்.

பூம்புகார் மாநாட்டில் எந்த வகையில் -எந்த முறையில்-யார் பங்கு கொண்டிருந்தாலும்-வாழ்நாளிலேயே எண்ணிப் பெருமிதம் அடையும் நாளாக இந்தப் பத்து நாட்களும் அமையும்.

இந்த மாநாட்டு மேடையில் சேரன் ஒருநாள் நின்றிருப்பான்; சோழன் இன்னொரு நாள் உலவியிருப்பான்; பாண்டியன் மற்றொரு நாள் தோன்றியிருப்பான் இளங்கோவடிகள் வந்திருப்பார். இலக்கண ஆய்வாளர்கள் வருகை புரிந்திருப்பார்கள்!

வானத்தில் பால் நிலவு காய்கின்ற வேளை-அந்த நிலவொளி பட்டதால் கவிதா உணர்ச்சி உள்ளத்தில் பொங்கி எழுகிறது! யாப்புத் தெரியாவிடினும் பால் நிலவொளி மேனியில் பட்டு இன்பம் பெருக்கிய காரணத்தினால்-அந்தப் பசுமை நினைவு மாறாத காரணத்தால் ஒளி குன்றி அணைந்திட இல்லத்தில் இருள் சூழ்ந்தால் உள்ளம் என்ன பாடுபடும்?

வெளியிலே நிலவொளி; உள்ளே இருள்; வெளியே உணர்ச்சிப் பெருக்கு - உள்ளே மனம் உடைந்த நிலை! தத்தளிப்பு! தவிப்பு!

பத்து நாட்களும் தமிழ் பெருமக்கள் தந்த விளக்கங்கேட்டு வான் நிலவு ஒளியில் தோன்றிய பெருமித உணர்ச்சியை அடைகிறோம்.

நிகழ்காலம் பற்றி நினைக்கும் போது விளக்கணைந்த வீடுபோல் நம்முள்ளம் மாறுகிறது.

உன்னதத் தமிழைப் பெற்ற மக்களை வாழ்த்துவதா? அத்தகைய தமிழ் இருந்தும் வாழ்வில் வளமடைய முடியாத நிலை குறித்து வருந்துவதா? எனத் தெரியவில்லை.

ஐம்பெருங் காப்பியங்களும் காவியங்களும் படைத்த தமிழ் மொழியின் அருமை பெருமையை நினைத்து மகிழ்வதா? தமிழ் மொழியைவிட வேறு மொழி சிறந்தது எனக் கூறும் சிலரும், இருப்பது கண்டு வருந்துவதா?- எனத் தெரியவில்லை.

தமிழ்ச் சமுதாயம் தமிழ் மொழியின் அடிப்படையில்தான் இயங்குகிறது! இதை உணர்ந்திருந்தாலும் எடுத்துச் சொல்ல முடியாமல் -எடுத்துச் சொல்லும் வகையறியாது நாம் இருக்கலாம்! ஆனால் தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ முடியும், தமிழர் வாழ்ந்தால்தான் தமிழ்ச் சமுதாயம் வாழமுடியும் என்று நாம் உள்ளூர உணர்ந்திருக்கிறோம்.

அதனால்தான் மொழிக்காக ஒரு மாநாடு என்றால் தமிழாசிரியர் மட்டும் - புலவர் மட்டும்-கற்றறிந்த கவிவாணர் மட்டும் இந்த மாநாட்டுக்கு வரவில்லை. தமிழர் அனைவரும் வந்திருக்கிறார்கள்.

அவர்களே ஒரு கவிதையாக விளங்குகிறார்கள்; அவர்கள் பேச்சிலே ஒரு பாட்டொலி; அவர்கள் மூச்சிலே தமிழ் எழுச்சி; அவர்கள் நடமாடும்போது வீரத் தமிழகமே நடமாடுவது போன்ற ஓர் உணர்வு இங்கே தோன்றுகிறது!

இங்கே ஆடவரும் வந்திருக்கிறார்கள்; ஆரணங்குகளும் வந்திருக்கிறார்கள்; இளைஞர்களும் முதியவர்களும் வந்திருக்கிறார்கள். தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுத்த வெற்றியான குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள்.

தமிழின்பத்தைத் தாங்கள் செவிமடுப்பதோடு -தங்கள் குழந்தைகளுக்கு கருத்து விளங்கினாலும் விளங்காவிடினும் தமிழ் ஓசை இன்பம் அந்தக் குழந்தைகளின் செவி வழி புகுந்து ரத்தத்தோடு ரத்தமாய்- மழலையோடு மழலையாய் மாறட்டும் என்ற நினைப்பில் இடுப்பில் குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள் தாய்மார்கள்!

அரும்பும் மலரும் பூத்திடும் பூங்காவை ஓவியமாகத் தீட்ட நினைக்கலாம் ஓர் ஓவியன்; அதைக் கவிதையாக்கிடத் துணியலாம் கவி பாடக் கற்றவன்!

நான் ஓவியனல்லன் - அதைக் கற்றுத் தோற்றவன். கவிபாடிட நினைப்பிருந்தும் நேரமில்லாதவன், எனினும் உள்ளத்தில் பதிந்ததை என்றும் மறவாமல் நினைவில் வைத்திருப்பவன்!

பூம்புகார் என்ற நகரையும்-இந்த நகரில் அந்நாளில் அமைந்த கட்டிடம்போல் பழங்கால கோட்

"வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ்மொழி
வான கத்தை நானி லத்தில்
வரவ ழைக்கும் தமிழ்மொழி"
*
*
தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை வழியாகும்;
அன்பே அவனுடை மொழியாகும்.
*
*
*
அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வாளொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியே
*
*
*
தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத் துறக்காதே
"அமிழ்தம் தமிழ் மொழி" ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்.

—நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை.

டையையும் - இங்கு ஒளிவிடும் ஒளிவிளக்குகளையும் - அந்த ஒளிவிளக்குகளையும் விஞ்சும் வகையில் மக்கள் கண்களிலிருந்து ஒளி கிளம்பி அந்த ஒளி விரவி-பரவி நிற்கும் காட்சியும் என் மனத்தை விட்டு என்றும் நீங்காது, இந்த உணர்ச்சி எனக்கு மட்டுமல்ல; உங்களுக்கும் இருக்கும்.

தமிழ் உணர்வு உள்ளத்தில் உள்ள காரணத்தால் கட்டாயம் கவிதை வரும். அதைக் கவிதை அல்ல என்று கூறுவார்கள் புலவர்கள். ஆனால் நான் கவிதை அல்ல என்று கூறமாட்டேன். இலக்கணத்தை அடிப்படையாக வைத்து அதைக் கவிதை அல்ல என்று புலவர்கள் கூறலாம், நான் உணர்ச்சியை வைத்து அதைக் கவிதை என்கிறேன்.

இன்னும் சொன்னால் -மக்கள் பார்வையே ஒரு கவிதை; மக்கள் பேச்சே ஒரு கவிதை; மக்கள் கையொலியே ஒரு கவிதை; மக்கள் வாழ்த்தொலியே ஒரு கவிதை. இங்கே எங்கும் நிறைந்திருக்கும் நாதமே ஒரு கவிதை.

இதைப்பற்றி எந்தக் கவிஞன் முழுதும் பாடிட முடியும்! அன்றலர்ந்த மலரைத்தான் கவிஞன் பாடிட முடியும், 10 நாட்களும் மலர்ந்திருக்கும் மக்களின் முகம் மலர்களைப் பற்றி எந்தக் கவிஞன் பாடிட முடியும்?

ஒரு வெண்ணிலவைத்தான் கவிஞன் பாடிட முடியும்? கறையேதுமில்லாத லட்சக்கணக்கான வெண்ணிலவுகளை எந்தக் கவிஞன் பாடிட முடியும்? மக்களே கவிதையாகிவிட்ட பிறகு யார் மக்களைக் கவிதையில் வடிக்க முடியும்?

முன்பு மாநிலம் ஆண்ட தமிழர் மீண்டும் அரசாளும் நாள் வருமா? எனக்கேட்ட பாரதிதாசன், "தமிழர் அரசு வரும் என்று தித்திப்பான சேதியைக் கூறினார்.

தமிழர்கள் தங்கள் அரசைப் பெற்றிருக்கிறார்களா? என்பது விரிவாக விவாதிக்க வேண்டிய விஷயம்.

முன்பிருந்த மன்னர்கள்-அலைகடலை வென்றார்கள்'. நமது வணிகர்கள் நாவாய்களில் ஏறிக்கொண்டு மோரீஸ் தீவுக்கும் பீஜித் தீவிற்கும்-மடகாஸ்கருக்கும் சென்று தமிழ்மணம் பரப்பினர் என்று இப்போது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இந்தச் செய்தியை நமது பழம்பெரும் கதைகள் வெகுநாட்களுக்கு முன்பே கூறியிருக்கின்றன. தாரணி மெச்ச வாழ்ந்தோம் ஒரு நாள்;

வானத்தில் பறக்கும் புள்ளினம்-வேறு பக்கம் பறந்துகொண்டிருப்பினும் இனிய கானத்தில் ஈர்க்கப்பட்டு கப்பல் இருக்கும் திசை நோக்கி வரும். கப்பல் மீது புள்ளினம் சிறகடித்துப் பறப்பது - கப்பலுக்கு வானக் குடை விரித்தது போல் அக்காட்சி அமைய வேண்டும். தமிழரின் இசையை அந்தப் புள்ளினம் கேட்டு அவை பாட-புள்ளினத்தின் பாட்டை இவர்கள் பாட வேண்டும்.

''பறவைகளாகிய எங்களுக்குத் தூய உள்ளம். ஆகவே நாங்களும் தமிழினம்தான். உயர உயரப் போகிறோம் - இதுதான் தமிழின் மாண்பு. ஆகவே நாங்களும் தமிழினம் என்று கூறிட வேண்டும் அந்தப் பறவைகள்!

இந்த நாளை எண்ணித்தான் பார்க்கிறோம். எண்ணியது நடக்கும் நாம் திண்ணியராகப் பெற்றால் - என்று வள்ளுவர் கூறுகிறார்.

உலகத்தில் நாம் எண்ணியது நடக்கும் - நாம் திண்ணியராகப் பெற்றால்!

தயங்காதே தமிழா! மயங்காதே தமிழா! என்ற பாடல்களோடு தமிழர் திண்ணியராகவும் வேண்டும்! அவ்விதம் திண்ணியரானால் உலகில் அவர் எடுக்கின்ற காரியங்கள் அனைத்தும் முடியும் என்ற நம்பிக்கை - நாதம் நிறைந்த பாடத்தைப் பெற்றால் நம்மை உலகிற்கு யாரும் அறிவிக்கும் நாளும் வரும்!

**[1968ல் நடைபெற்ற 2-வது உலகத்தமிழ் மாநாட்டின்போது பூம்புகாரில்-(சென்னைத் தீவுத் திடல்) ஆற்றிய நிறைவு விழாச் சொற்பொழிவிலிருந்து]**

# உலகத் தமிழ் மாநாடுகள்

— அ.ம. விநாயகம்

சிறுபாணாற்றுப் படையிலே குறிப்பிடப்பட்டிருப்பது போலத் 'தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்' மதுரையில் அவனிபோற்ற நடைபெறுகிறது ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு. இந்த நேரத்தில் இதற்கு முன்னாலே நடைபெற்ற நான்கு உலகத் தமிழ் மாநாடுகள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளுவது பயனுள்ளதாக இருக்கும்.

*1913*-ல் ஈழ நாட்டிலே பிறந்த தனி நாயக அடிகள் இன்பத் தமிழில் பெரிதும் ஈடுபாடுகொண்டிருந்தார். தமிழ் வளர்ச்சியிலே பேரார்வம் உடையவரான அவர் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்னும் முத்திங்கள் ஆங்கில இதழ் ஒன்றைத் தொடங்கிய சிறப்பினர் மட்டுமல்ல; *1964*ல், 'உலகத் தமிழ்ஆராய்ச்சி மன்றம் (International Associaiion for Tamil Research) உருவாகமுழு முதற்காரணமாக இருந்த பெருமையினரும் ஆவார்.

அம்மன்றத்தின் பொறுப்பைத் தனிநாயக அடிகள் ஏற்ற பின்னாலே, *1966* ஏப்ரலில், உலகு தழுவிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றது. இதுதான் முதலாவது உலகத் தமிழ் மாநாடு என்ற பெரும் புகழ் பெற்றது.

பிரஞ்சு நாட்டவரான பேராசிரியர் பில்லியோசா, அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் ஏமநா, இங்கிலாந்து நாட்டவரான பேராசிரியர் பரோ, ஹாலந்து நாட்டினரான பேராசிரியர் கூப்பர், செக்கோசுலோவேகியாவைச் சேர்ந்த பேராசிரியர் கமில்சுவலபில் ஆகியோர் முக்கிய அங்கம் வகித்த 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' நடத்திய அந்த முதலாவது உலகத் தமிழ் மாநாடு ஒரு கருத்தரங்கு என்கிற அளவிலேயே நடைபெற்றது.

## இரண்டாவது தமிழ் மாநாடு

'தமிழென்னில் எம்முயிர்ப் பொருளாம் இன்பத் தமிழ்குன்று மேல் தமிழ் நாடெங்கும் இருளாம்' என்ற உயர்ந்த கருத்துலாவும் தமிழ் மண்ணின் தலைநகராம் சென்னை மாநகரிலே நடைபெற்றது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு.

*1968*-ல், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து நடாத்திய பெருஞ்சிறப்புடைய மாநாடு இது.

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்ற அளவில் அமைந்த பிரம்மாண்டமான ஊர்வலம்! 'பூம்புகார்' நகரெனச் சென்னையிலே அமைக்கப்பட்ட தீவுத்திடல் அரங்கிலே நாள்தோறும் நற்றமிழ்த் தேன்மழை! பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே பழகு தமிழ்க் கருத்தரங்கம்!

இப்படி, *1968*ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 3ஆம் நாள் முதல் 11ஆம் நாள் வரை நன்முறையில் நடந்தேறியது கருத்தரங்கம் கவியரங்கம் எனஇன்பத் தமிழ்மணந்த இரண்டாவது மாநாடு!

கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி யாவும் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி நடத்தப்



பெற்று, வெற்றி பெற்றார்க்குப் பரிசுகள் பல வழங்கப்பட்டன !

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகீர் உசேன் துவக்கி வைத்தார். பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களின் அரிய உரையோடு அம் மாநாடு நிறைவுற்றது.

**மூன்றாவது தமிழ் மாநாடு!**

மூன்றாவது உலகத்தமிழ் மாநாடு பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீசில் 1970ஆம் ஆண்டு ஜூலை 15 முதல் 18ஆம் நாள் வரை நடைபெற்றது.

பேராசிரியர் பில்லியோசா தலைமையில் நடைபெற்ற அம் மாநாட்டில் 39 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். தமிழகத்திலிருந்து 18 பேர் கொண்ட குழு ஒன்று அம்மாநாட்டிலே கலந்து கொள்ளச் சென்றது.

தமிழ்மொழி இயல் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்காகத் தோன்றியதும், யுனஸ்கோ உதவி பெற்றதுமான பன்னாட்டுத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஓர் உயர் பணியாகவே இந்த மூன்றாவது உலகத் தமிழ் மாநாடும் நடத்தப் பெற்றது. ஓர் இந்திய மொழி ஆராய்ச்சித் தொடர்பாக, மேற்கு நாடு ஒன்றிலே உலகத் தமிழ் மாநாடு கூடியது இதுவே முதன் முறையாகும்!

**நான்காவது தமிழ் மாநாடு!**

நான்காவது உலகத் தமிழ் மாநாடு 1973ஆம் ஆண்டு சனவரித் திங்களில், இலங்கையிலே நடைபெற்றது.

தமிழறிஞர் பலரும் இதில் பங்கேற்றார்கள். தமிழினத்தின் தன்மானக் குரல் ஒலித்தது இந்த மாநாட்டில்.

2வது உலகத்தமிழ்மாநாட்டு ஊர்வலக்காட்சி



# தமிழர் கண்ட நால்வகை நிலம்....

இயற்கையொடு அளவளாவும் இனிய இயல்பு வாய்ந்தவர்கள் பழந்தமிழ் மக்கள். வானோங்கி வளர்ந்த மலையும், நிலனோக்கி வீழும் அருவியும் அவர்தம் நெஞ்சை அள்ளின; பன்னீராண்டிற்சொருமுறை மலர்ந்து பல சாதம் நறுமணம் வீசும் கருங்கோற் குறிஞ்சிமலர் அவர்தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

மந்தியும் அறியா மரம்புயில் அடுக்கத்தை அடுத்து வெயில் நுழைபறியாக் குயில் நுழைப் பொதும்பரில் புகுந்து வீசுகின்ற தென்றலிலும் வீங்கிள வேனிலிலும் தோய்ந்து இன்புற்றனர். மணங்கமழும் மல்லியும், முல்லையும், தமிழர்தம் மனத்தைக் கவர்ந்தன.

சான்றோர் கவியெனப் பாயும் ஆற்று வளம் மிக்க இடங்களில் மருத மரங்கள் விண்ணளாவ ஓங்கி வளர்ந்து நின்றன. ஆற்று வெள்ளத்தால் குளங்களும், ஏரிகளும், தடாகங்களும் நிறைந்து பொலிந்தன; காமர் கயல்புரளக் காவி முகை நெகிழத் தாமரையின் சேந்தேன் தளையவிழ்த்துப் பாயச் செந்நெலும் கன்னலும் செழித்து நின்றன. உழவரோதையும் மதகோதையும் ஊரில் இடையறாது ஒலித்தன; நாகரிகம் நாட்டிலே பரவி, ஆடலும் பாடலும் களியாடலும் சிறந்து மருதம் திகழ்ந்தது. கூடலும் ஊடலும் இந்நிலத்தே மாறி மாறி மகிழ்ச்சி யூட்டின.

நீல அலை கொழித்து நித்திலங்களைக் கரையொதுக்கிக் கோல அழகுக் காட்சிகளைக் காட்டி, நிற்கும் எல்லையறியாப் பெருங்கடல் தமிழர் இதயத்தை ஓலமிட்டுக் கொண்டிருந்தது; கருங்கடல் கடந்து பொருள்தேடச் சென்ற தலைவனை நினைந்து, நீல வண்ணமுடைய நெய்தல் மலரனைய தலைவியின் கண்கள் நீரைச் சொரிந்தன. காதலாகிக் கசிந்து மல்கிய அவர்தம் கண்ணீர் கடல் நீரோடு கூடிக் கலந்தது; அவர்தம் விம்மல் வெளியே கேளாவாறு நீல நெடுங்கடல் பாடி நின்றது. குறிஞ்சியில் கூடியவர் முல்லையில் கற்பு நெறி நின்று, மருதத்தில் ஊடிக்கூடி நெய்தலில் இரங்கி நின்றனர். மனித வாழ்வின் தத்துவத்தை நான்கு நிலங்களின் வாயிலாக நயமுற வடித்துக் காட்டினர் பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள்.

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

| | நூல் | ஆசிரியர் | செய்யுள் எண் |
|---|---|---|---|
| 1 | நாலடியார் | சைன முனிவர் | 400 |
| 2 | நான்மணிக்கடிகை | விளம்பி நாகனார் | 100 |
| 3 | இன்னா நாற்பது | கபிலர் | 40 |
| 4 | இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | 40 |
| 5 | கார் நாற்பது | மதுரை கண்ணங் கூத்தனார் | 40 |
| 6 | களவழி நாற்பது | பொய்கையார் | 40 |
| 7 | ஐந்திணை யைம்பது | மாறன் பொறையனார் | 50 |
| 8 | ஐந்திணையெழுபது | மூவாதியார் | 70 |
| 9 | திணைமொழி யைம்பது | சாத்தந்தையார் மகனார் கண்ணம்பூதனார் | 50 |
| 10 | திணைமாலை நூற்றைம்பது | மதுரை தமிழாசிரியர் மாக்கயனார் மாணாக்கர் கணிமேதாவியார் | 150 |
| 11 | கைந்நிலை | மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர்க்காவிதியார் மகனார் புல்லங்காடனார் | 60 |
| 12 | முப்பால் | திருவள்ளுவர் | 1330 |
| 13 | திரிகடுகம் | நல்லாதனார் | 100 |
| 14 | ஆசாரக்கோவை | பெருவாயின்முள்ளியார் | 100 |
| 15 | பழமொழி | முன்றுறையரையனார் | 400 |
| 16 | சிறுபஞ்சமூலம் | மாக்காயன் மாணாக்கன் மாக்காரியாசான் | 100 |
| 17 | முதுமொழிக்காஞ்சி | மதுரை கூடலூர்கிழார் | 100 |
| 18 | ஏலாதி | மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் | 80 |

—ஆதாரம்: 'இலக்கியமணி மாலை' பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

7

33

15

16

38

48

12

44

# சங்கத் தமிழ் வளர்த்த சான்றோர்கள்

அருந்தமிழ் வளர்த்த சான்றோர்களின் பிறந்த நாள்—மறைவு நாள் ஆகியவற்றை தொகுத்துத் தருதல் பயன் நல்கும் செயல் எனக் கருதி அம் முயற்சியில் இறங்கியுள்ளோம். இது முழுமையான பட்டியல் அல்ல எங்கள் முயற்சியின் அறிமுகமே! எனவே பட்டியல் தொடரும்.

| பெயர் | பிறந்தநாள் | மறைவு எய்திய நாள். |
|---|---|---|
| 1. பெரும்புலவர் மீனாட்சிசுந்தரனார் | 6—4—1815 | 1—2—1876 |
| 2. ஆறுமுகநாவலர் | 18—12—1822 | 4—12—1889 |
| 3. வேதநாயகம் பிள்ளை | 11-10-1826 | 21—7—1886 |
| 4. எச். ஏ. கிருஷ்ண பிள்ளை | 23—4—1827 | 3—2—1900 |
| 5. சி. வை. தாமோதரம் பிள்ளை | 12—9—1832 | 1—1—1901 |
| 6. உ. வே. சாமிநாதையர் | 19—2—1855 | 28—4—1942 |
| 7. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை | 5—4—1855 | 25—4—1897 |
| 8. எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை | 24—5—1866 | 16—6—1947 |
| 9. அரசஞ் சண்முகனார் | 15—9—1868 | 10—1—1915 |
| 10. சூரியநாராயண சாஸ்திரி (பரிதிமாற் கலைஞர்) | 6—7—1870 | 2—11—1903 |
| 11. ரா ராகவய்யங்கார் | 20—9—1870 | 11—7—1946 |
| 12. அ. மாதவய்யா | 11—8—1870 | 23—10—1925 |
| 13. பா வே மாணிக்க நாயகர் | 25—2—1871 | 30—12—1931 |
| 14. வ. உ. சிதம்பரனார் | 5—9—1872 | 18—11—1936 |
| 15. ஞானியார் அடிகள் | 17—5—1873 | 31—1—1942 |
| 16. செய்குத்தம்பிப் பாவலர் | 31—7—1874 | 13—2—1950 |
| 17. கா. நமச்சிவாயர் | 10—2—1876 | 13—3—1936 |
| 18. மறைமலை அடிகள் | 15—7—1876 | 15—9—1950 |
| 19. தேசிகவினாயகம் பிள்ளை | 27—7—1876 | 26—9—1954 |
| 20. ஆனந்த குமாரசாமி | 22—8—1877 | 9—9—1977 |
| 21. சி. கே. சுப்பிரமணிய முதலியார் | 20—2—1878 | 24—1—1961 |
| 22. நாவலர் சோமசுந்தரபாரதியார் | 27—7—1879 | 14—12—1959 |
| 23. தந்தை பெரியார் | 17—9—1879 | 24—12—1973 |
| 24. வ. வே. சு. அய்யர் | 2—4—1881 | 7—3—1925 |
| 25. பண்டிதமணி கதிரேச செட்டியார் | 16—10—1881 | 24—10—1953 |
| 26. இராஜாஜி | 10—12—1878 | 25—12—1972 |

39

9

1

14

43

8

24

28


19

| | | | |
|---|---|---|---|
| 27. | டி. கே. சிதம்பர நாத முதலியார் | 7— 8—1882 | 16— 2—1954 |
| 28. | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் | 11—12—1882 | 11— 9—1921 |
| 29. | உமாமகேஸ்வரனார் | 7— 5—1883 | 9— 5—1941 |
| 30. | திரு வி. கல்யாண சுந்தரனார் | 26— 8—1883 | 17— 9—1953 |
| 31. | ந. மு. வேங்கடசாமி நாட்டார் | 4— 4—1884 | 23— 3—1944 |
| 32. | ரா. வேங்கடாசலம் பிள்ளை | 18—12—1887 | 16—12—1953 |
| 33. | எஸ். வையாபுரிப் பிள்ளை | 13—10—1888 | 17— 2—1956 |
| 34. | நாமக்கல் வே. ராமலிங்கம் பிள்ளை | 19—10—1888 | 24— 8—1972 |
| 35. | கா. சுப்பிரமணிய பிள்ளை | 5—11—1889 | 30— 4—1945 |
| 36. | பாவேந்தர் பாரதிதாசன் | 29— 4—1891 | 21— 4—1964 |
| 37. | விபுலானந்த அடிகள் | 27— 3—1892 | 19— 7—1947 |
| 38. | சதாசிவப் பண்டாரத்தார் | 15— 8—1892 | 2— 1—1960 |
| 39. | ரா. பி. சேதுப்பிள்ளை | 2— 3—1896 | 25— 4—1961 |
| 40. | மயிலை சீனிவேங்கடசாமி | 16—12—1900 | 8— 5—1980 |
| 41. | நீலாம்பிகை அம்மையார் | 6— 9—1903 | 10—10—1945 |
| 42. | தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் | 8— 1— 1901 | 27— 8— 1980 |
| 43. | மா. ராசமாணிக்கனார் | 12— 3—1907 | 26— 5—1967 |
| 44. | அ. சிதம்பரநாதன் செட்டியார் | 7— 4—1907 | 22— 11— 1967 |
| 45. | அறிஞர் அண்ணா | 15— 9—1909 | 3— 2—1969 |
| 46. | மு. வரதராசனார் | 25— 4—1912 | 10—10—1974 |
| 47. | கல்கி | 9— 9—1899— | 5—12—1954 |
| 48. | இலக்குவனார் | 17—11—1910— | 3— 9—1973 |
| 49. | ப. ஜீவானந்தம் | 21— 6—1906 | 18—1—1963 |

தொகுப்பு : **சிறுவை நச்சினார்க்கினியன்**

46

27

29

13

18

10

35

# பைந்தமிழ் பரப்பும் திருப்பணி

— மாமூலன்

பாரதம் முழுவதும் பைந்தமிழ் பரவிட அரும்பணி ஆற்றிவரும் அமைப்புதான் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம். ( Central Institute of Indian Languages). 1969-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது இந்நிறுவனம். இதனைத் தொடர்ந்து நான்கு வட்டார மொழிகள் மையங்கள் 1970-ல் தொடங்கப்பட்டன.

தென்னகமொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்காகத் தென்னக வட்டார மொழிகள் மையம் மைசூரிலும், அசாம், வங்காளம், ஒரியா ஆகிய மொழிகளுக்காகக் கிழக்கு வட்டார மொழிகள் மையம் புவனேசுவரிலும், மராத்தி, குஜராத்தி, சிந்தி ஆகிய மொழிகளுக்காக மேற்கு வட்டார மொழிகள் மையம் பூனாவிலும் உருவாக்கப்பட்டன. 1973-ல் உருது ஆராய்ச்சி மையம் இமாசலப் பிரதேசம் சோலனிலும் தொடங்கப்பட்டது.

இவை அனைத்தும் இந்திய மொழிகள் நிறுவனத்தின் ஆளுகையில் உள்ளனவாகும். இந்தி மொழி வளர்ச்சிக்காக டில்லியில் இந்தி வளர்ச்சி இயக்ககம் என்ற அமைப்பும் ஆங்கிலம் ஏனைய அயல்நாட்டு மொழி வளர்ச்சிக்கு தனியான நிறுவனம் ஐதராபாத்தில் அமைந்துள்ளன என்பதும் நாம் அறிந்த செய்திதான்.

இந்திய மொழிகள் நிறுவனம் மொத்தத்தில் இந்திய மொழிகள் அனைத்தையும் வளர்க்கும் பணியினைத் தனது இலட்சிய நோக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

## எங்கும் தமிழ் பரவிட

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் தமிழைக் கற்றுக் கொள்ள வழிவகுக்கும் முறையில் திட்டங்களை வகுத்துச் செயலாக்கி வருகிறது இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம்.

இந்தியாவில் எந்தப் பகுதியிலாவது உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராக இருப்பவர்கள் தமிழைக் கற்றுக் கொள்ள இந்திய மொழிகள் நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாசிரியர்கள் பத்துமாதம் மைசூரில் தங்கி தமிழ் மொழியைக் கற்கின்றனர். மொழியியல் அடிப்படையில் பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தமிழ் மொழிப் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. இப்பாடங்கள் பின்னர் தற்கால மொழி கற்பிக்கும் முறையில் தேர்ச்சி பெற்ற மொழியாசிரியர்களால் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய மொழியியல் நிறுவனத்தில் மொழி கற்பிப்பதற்கு அமைந்துள்ள மொழி ஆய்வகத்தில் (Language Laboratory) நவீன முறையில் மொழி கற்பிக்கும் வசதிகள் நிறைந்துள்ளன. இங்கே 'டேப்' மூலம் பாடம் கற்பிக்கப்படுகிறது. 'டேப்' பில் உள்ள பாடங்களை மாணவர்கள் தங்கள் காதுகளில் மாட்டிக் கொண்டிருக்கும் சாதனங்கள் மூலம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். ஐயங்

இந்திய மொழிகள் நிறுவனத்தின் மொழிகள் ஆய்வகம்



# உயரிய பண்பாட்டின் களஞ்சியம்

## மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள்

இந்த உலகத் தமிழ் மாநாட்டுடன் தொடர்பு கொள்வதை ஒரு பேறாக நான் கருதுகிறேன். தென்கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கலாச்சாரத்தின் ஒரு களஞ்சியமாகத் தமிழ் விளங்குகிறது.

இந்த மாநாட்டைத் துவக்கிவைக்கும் படி என்னை அழைத்ததன் மூலம், உண்மையில் நாம் எவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம் என்பதையும், கலாச்சார, ஆன்மிக ஒற்றுமை உணர்வை எவ்வாறு வளர்க்க முடியும் என்பதையும் மேலும் தீவிரமான முறையிலும் புதிதாகவும் நான் தெரிந்து கொள்ளும்படி அழைத்திருக்கிறீர்கள்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளை தமிழ்மொழி இணைத்திருக்கிறது. நம் நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால், தமிழ் ஒரு சர்வதேச மொழியாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும் கலாச்சார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் தமிழ்மொழி பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ்நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரை கடல்களையும் அந்தக் கடலுக்கு அப்பாலுள்ள நிலங்களையும், அது கண்டது.

(சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து 3-1-1968)

களை அகற்றிக் கொள்ள ஆசிரியருடனும் தொடர்பு கொள்ளலாம். மாணவர்களுக்கு தொலைக் காட்சி மூலமும், திரைப்படம் மூலமும் பாடங்களைக் கற்பிக்கும் முறைகளும் இங்குக் கையாளப்படுகின்றன.

இங்குப் பயிற்சி பெறவரும் ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற்றுவரும் சம்பளத் தொகை முழுவதையும் இந்திய மொழிகள் நிறுவனம் அளிக்கின்றது. அத்துடன் உதவித் தொகையாக மாதந் தோறும் ரூ. 150ஐ கூடுதலாக அளிக்கிறது.

பத்து மாதங்களில் தமிழில் பயிற்சி பெற்றுவரும் ஆசிரியர்கள் தேர்ச்சி பெறும் நிலையில் தமிழ் மொழியை நன்றாகப் பேசும் திறனையும் எழுதும் திறனையும் படிக்கும் திறனையும் பெறுகிறார்கள்.

தேர்வு பெற்ற ஆசிரியர்கள் தம் பள்ளிக்குத் திரும்பிச்சென்று தான் கற்ற மொழியை அங்குக் கற்பிக்கின்றனர். ஒரிசா, பீகார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற வட இந்திய மாநிலங்களிலும், ஆந்திரா, கருநாடகம், கேரளம் போன்ற மாநிலங்களிலும் இத்திட்டத்தின் கீழ் பயின்ற ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்து வருகின்றனர்.

இப்படி இந்தியாவின் எங்கோ ஒரு பகுதியில் சிற்றூரில் தமிழ் மொழி பரவி வருகிறது. இந்த அரிய சாதனைக்குக் காரணமாக விளங்குகிறது இந்தியமொழிகள் நிறுவனம்.

### அஞ்சல் வழி சான்றிதழ் கல்வி

கருநாடகம், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், அரியானா, பீகார், இமாசலப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் துணையோடு அஞ்சல் வழி சான்றிதழ் தமிழ்க் கல்வி (Certificate course in Tamil Through correspondence) 1978ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

தமிழொலிகளை இனங்கண்டு கொள்ளும் திறனையும் அவற்றைப் பொருளுள்ள சொற்களில் அமைத்து உச்சரிக்கும் திறனையும் கொடுக்கப்பட்டுள்ள வாக்கிய அமைப்பிலிருந்தும் சொற்களை வரிசைப்படுத்தி அமைக்கப்பட்ட சிறிய தமிழ்ப் பத்திகளின் பொருளுணர்ந்து படிக்கும் திறனையும், சிறிய தலைப்புகளின் கீழ் தமிழில் கட்டுரை எழுதும் திறனையும் வளர்ப்பது இச்சான்றிதழ் தமிழ்க்கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

அஞ்சல் வழிப்பாடங்களைத் தவிர மாணவர் ஆசிரியர் நேரடித் தொடர்பும் (Contact Programme) ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ் மொழியைக் கற்க வேட்கையுடைய பிற மாநிலத்தவர்க்கு இவ்வஞ்சல் வழிச் சான்றிதழ் தமிழ்க் கல்வி பெருமளவில் உதவி வருகிறது.

### தமிழாசிரியர்களின் மொழித் திறன் வளர்க்கும் பணி:

மொழிக் கல்வி மொழித் திறங்களை அடிப்படையாகக்கொண்டு அமைய வேண்டும். இவ்வாறு அமைவதன் மூலமாக மட்டுமே மொழிக் கல்வியின் மூலம் தம் தாய் மொழியைப் பொருளுணர்ந்து கேட்கும் திறனையும் நன்றாகப் பேசும் திறனையும், பிழையற படிக்கும் திறனையும், எழுதும் திறனையும் மாணவர்கள் பெறவியலும். இம் மொழித் திறன்களை வளர்க்கும் வகையிலும் பாடத் திட்டத்தோடு பாடப்புத்தகத்தை இணைக்கும் வகையிலும் மொழியாசிரியர்கள் செயல்படுவது அவசியம்.

இந்நோக்கத்தோடு இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் மொழியாசிரியர்களுக்கு நல்லதொரு மொழிப் பயிற்சி அளித்து வருகிறது.



# முத்தமிழ் வளர்க்கும் முத்தான மன்றம்

முத்தமிழ் வளர்ப்பதில் முனைப்புடன் செயலாற்றும் மன்றம் எது?

ஆண்டுதோறும் பல்துறை கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி பெருமைப்படுத்தும் அமைப்பு எது?

மறைந்த கலைஞர்களுக்கு மட்டுமல்ல, நலிந்த கலைஞர்களுக்கும் மரியாதை செய்கின்ற கலைக்கூடம் எது?

அதுதான், சென்னை அடையாறு, கிரீன்வேஸ் சாலையிலுள்ள 'தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம்.'

**சுவையான கதை!**

ஆய கலைகளை வளர்த்து, அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டி மகிழ்கின்ற மாமன்றம் தான், அரசின் சார்பிலே இயங்கி வருகின்ற இந்த மன்றம்.

இது எப்போது தோன்றியது? இதன் பணிகள் என்னென்ன? வரலாறு என்ன? என்பதெல்லாம் ஒரு சுவையான கதை!

1955-ல் 'மெட்ராஸ் ஸ்டேட் சங்கீத நாடக சங்கம்' என்ற பெயரில் இயங்கி வந்த இது, 1973 அக்டோபர் திங்களில் நடந்த நாடகாசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் நூற்றாண்டு நினைவு விழாவில், 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' என்று பெயர் மாற்றம் பெற்றது.

**கலாச்சார ஒருமைப்பாடு**

இயல், இசை, நாடகம், நடனம், கிராமியக்கலை, திரைப்படம் ஆகிய கலைகளை கூடியவரை பராமரித்துப் போற்றிக் காத்து, அதன் மூலம் நம் நாட்டின் கலாச்சார ஒருமைப்பாட்டைப் பேணி வளர்க்கும் நோக்கோடு தொடங்கப் பெற்றது இம்மன்றம்.

**பி.வி.கிரி**

கடந்த 25 ஆண்டுகளாகச் சீரும் சிறப்புமாகச் செயலாற்றி வரும் இம்மன்றத்துக்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் நிதி உதவி வழங்கி வருகின்றது.

மேலை நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வருகை புரியும் கலைக் குழுக்களின் நிகழ்ச்சிகளுக்கும், பல்வேறு கலை நூல்களைக் கூட்டாக வெளியிட ஆகும் செலவுகளையும் மத்திய அரசு அவ்வப்போது ஏற்றுக் கொள்கிறது.

கலைத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றியுள்ள கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் பாராட்டு விழாக்கள் நடத்துகின்றது இம்மாமன்றம்.

1959-ஆம் ஆண்டிலிருந்து இச்சிறப்பு விழா தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

**கிராமியக் கலைத் துறையில்...**

கிராமியக் கலைத்துறையில் உள்ள கலைஞர்களுக்கும் இம்மன்றம் விருது வழங்கிச் சிறப்பித்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

முத்தமிழில் மட்டுமின்றி நாட்டியம், திரைப்படம், கிராமியக் கலைகள் முதலியவற்றில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கப்படுகின்றன. இதுவரை விருது பெற்ற கலைஞர்களின் எண்ணிக்கையோ 500-க்கு மேலாகும்.

இளங்கலைஞர்கள் பலரை அறிமுகப்படுத்தும் நல்ல திட்டம் ஒன்றையும் வகுத்துச் செயல்பட்டு வருகின்றது இம்மன்றம்.

கர்நாடக இசை, வயலின், மிருதங்கம், கடம், புல்லாங்குழல், அரிகதா காலட்சேபம், நாதசுரம், வீணை, நாட்டியம் ஆகிய துறைகளில் சிறந்துவிளங்கு

கின்ற இளங்கலைஞர்களை ஊக்குவித்து, பல்வேறு சபைகளின் மூலம் உதவி வழங்கி, அவர்களை மக்கள் மன்றத்திலே அறிமுகப்படுத்தப்படுகிறது. இம் மன்றம்.

இசை (வாய்ப்பாட்டு, வயலின் வீணை, மிருதங்கம், கடம், கஞ்சிரா, புல்லாங்குழல், நாதசுரம், நாட்டியம், பயிற்சியளித்துவரும் பல பள்ளிகளின் பராமரிப்புக்காக—இசைக் கருவிகள்,' இசை நூல்கள் வாங்குவதற்காக மான்ய உதவி வழங்குகின்றது. இம் மன்றம். இதனால், பல பயிற்சி நிலையங்கள் ஆண்டுதோறும் பயன் பெற்று வருகின்றன.

**புதிய புதிய நூல்கள்**

முத்தமிழ் மற்றும் கிராமியக் கலைகள் பற்றிய புதிய புதிய நூல்கள் வெளி வருவதற்கும் இம்மன்றம் உதவி அளித்து வருகின்றது. அதன் விளைவாக சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளி வந்துள்ளன.

இசைக்கு மயங்காதார் யார்? இன்னிசை கேட்டு இன்புறாதார் யார்?

இசைப்பேரறிஞர்கள், மேதைகள் ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சிகளை நம்நாட்டு இளம் கலைஞர்கள் மட்டுமல்ல, மேலை நாட்டு ஆராய்ச்சியாளரும் கேட்டு மகிழ்ந்திடும்வண்ணம் நாடாப்பதிவு செய்து வைத்திருக்கிறது இம்மன்றம். இவற்றோடு பழம்பெரும் நாடகங்களான சம்பூர்ண ராமாயணம், ராஜ ராஜ சோழன், பாஞ்சாலி சபதம் ஆகிய நாடகங்களையும் இது பதிவு செய்து பாதுகாத்து வருகின்றது.

பலரை வளர வைப்பதன் மூலம், இம்மன்றம் ஆல்போல் தழைத்து அருகுபோல் வளர்ந்து வருகின்றது. தமிழகம் முழுவதும் குடத்துள் விளக்குபோல உள்ள பல்துறைக்கலைஞர்களைக் குன்றிலிட்ட விளக்குபோல அவர்களை உலகுக்கு அறிமுகப்படுத்துகின்ற அரிய பணியினை ஆற்றி வருகின்றது, இந்த முத்தமிழ் வளர்க்கும் மன்றம்.

**பொற்கிழியும் பரிசும் :**

இதன் சாதனைப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

*புதிய தமிழ் நாடகங்களைத் தயாரிக்கவும், அதனை அரங்கேற்றவும் நாடகக் குழுக்களுக்கு மான்ய உதவி அளித்தல்.

*வறுமையில் வாடும் முதிய கலைஞர்கள் மாத ஓய்வூதியம் பெற, அரசுக்குப் பரிந்துரை செய்து வருகிறது மன்றம். இதனால் தமிழகத்தில் 1000-க்கு மேற்பட்ட கலைஞர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

*1971—72 முதல் மறைந்த கலை மேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப் பெற்றுள்ளன. இதுவரை சுமார் 101 படங்கள் திறந்து வைக்கப் பெற்றுள்ளன.

* 'கலைமாமணி' விருதுபெற்ற நலிவுற்ற கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வீதம் பொற்கிழி வழங்கியுள்ளது. இதுவரை 60 கலைஞர்கள் அவ்வாறு உதவி பெற்றுள்ளார்கள்.

*கலைப்பணியில் சிறந்து விளங்கும் கலை நிறுவனங்களுக்குப் பரிசுகள் வழங்குதல்.

நலிவுற்றுக் கிடக்கும் பொம்மலாட்டக் கலைக்குப் புத்துயிர் அளித்தல்.

*தமிழக அரசின் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் சிலருக்கு ஆண்டுதோறும் உபகாரச் சம்பளம் வழங்குதல்.

இப்படி இதன் பணிகள் தொடர்கின்றன.

**நினைவு விழாக்கள்**

கலைமேதைகளின் நினைவு விழாக்களும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இசை மேதை தியாகராஜ சுவாமிகளின் இரண்டாவது நூற்றாண்டு விழா——

முத்துசாமி தீட்சிதரின் இரண்டாவது நூற்றாண்டு விழா—

அருணகிரி நாதரின் ஆறாவது நூற்றாண்டு விழா—ஆகியவற்றை மன்றம் சிறப்பாகக் கொண்டாடியது.

சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாள் விழா—கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நினைவு நாள்—ஆகியவற்றை மன்றம் தொடர்ந்து கொண்டாடி வருகின்றது.

நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் —மனோன் மணீயம்' சுந்தரம்பிள்ளை—பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முப்பெரும் விழாவாக மன்றம் கொண்டாடியுள்ளது.

கிராமியக் கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கவும், அந்தக் கலை

ஞர்கள் உன்னத நிலையை அடையவும் மன்றம் பலவகையிலும் உதவி வருகின்றது.

வசதியற்ற கிராமியக் கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், உடைகள், கலைப் பொருட்கள் முதலியன வாங்குவதற்கு மன்றம் மான்ய உதவி அளித்து வருகின்றது. அத்துடன், அக்குழுக்களின் கலை நிகழ்ச்சிகளை இது நடத்தி, கலைஞர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும், அளித்து வருகின்றது. அவ்வாறு எட்டு கிராமியக் கலை விழாக்களை இது நடத்தியுள்ளது.

### மேலை நாட்டுக் கலைக் குழுக்கள்:

சிறந்த நாடகக் குழுவுக்கு மட்டுமின்றி வீணைக் குழுவுக்கும் மன்றம் பரிசளித்துப் பாராட்டி வருகின்றது.

முன்னாள் ஆளுநர் திரு விஷ்ணுராம் மேதி அவர்களின் வீணை சுழற் பரிசையும், முன்னாள் ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் நிறுவியுள்ள நாடகத்திற்கான சுழற் கேடயத்தையும் வழங்கிக் கலைஞர்களைக் கௌரவித்து வருகின்றது.

## சொல்லின் அருமை!

ஆங்கில மூலத்திலுள்ள சொற்கள் பலவற்றிற்குத் தமிழில் சம அர்த்தம் உள்ள பல சொற்கள் இருக்கின்றன. ஏறத்தாழ ஒரே பொருளைக் குறிக்கக் கூடிய பல தமிழ்ச் சொற்களை "ஒரு பொருள் பன்மொழி" என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆனால், உண்மையில் அச்சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பிடுவன அல்ல. ஒலி வேறுபாட்டினாலேயே வெவ்வேறு உணர்ச்சியை மனித உள்ளத்தில் கிளறிவிடக் கூடியவை அவை. தமிழ்த் தாய், தன் குழந்தையைப் பார்த்து "என் கண்ணே" என்று கொஞ்சுகிறாள். இவ்வாறு பல நூற்றாண்டுகளாகக் கொஞ்சிக் கொஞ்சி, குலாவிக் கு.ாவி, "கண்" என்ற சொல்லுக்குள்ளே எவ்வளவோ அருமைப்பாடு ஏறி விட்டது. நீண்ட காலப் புழக்கத்தினால் ஏற்பட்டது இந்த அருமைப்பாடு. "Oh, my eye" என்று ஆங்கிலத் தாய் தன் குழந்தையைப் பார்த்துக் கொஞ்சுவது இல்லை. "கண்ணே" என்ற சொல்லை, "Oh my eye" என்று மொழி பெயர்க்கும்போது, "கண்ணே" என்ற சொல்லுக்குள்ளே இருக்கிற அருமைப்பாடு வெளிவருவதும் இல்லை. இப்படியாக ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் அகராதியில் சொல்லப்பட்ட பொருளுக்கும் மீறிய மணமும் நிறமும் இருக்கின்றன. ஒரே பொருள் உள்ளவை போலக் காணப்படும் சொற்களுக்கிடையே கூட, மென்மையான, நுண்ணிய பொருள் வேறுபாடுகள் இழையோடிக் கொண்டிருப்பதை உற்றறியலாம்.

('சட்டச் சொல் அகராதி' என்னும் நூலில், ஜஸ்டிஸ் டாக்டர் எஸ். மகராஜன் அவர்கள் எழுதிய முன்னுரையிலிருந்து..)

இந்திய - தமிழகக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளையே பார்த்துப் பழக்கப்பட்டுப்போன நாம், மேலை நாட்டுக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க வேண்டாமா? அதற்கு மன்றம் வழி வகை செய்கின்றது.

இந்திய அரசின் கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் சோவியத் நாடு, ஜெர்மன், பல்கேரியா, செக்கோஸ்லாவாகியா, ஆஸ்திரேலியா, மங்கோலியா, வியட்நாம், பர்மா, சுவீடன் முதலான மேலை நாட்டுக் கலைக் குழுக்கள் தமிழகத்துக்கு வருகை தரும்போது, அவர்களை அன்புடன் வரவேற்கின்றது.

இந்தக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளைக் குறைந்த கட்டணத்தில் மக்கள் கண்டு களிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்து, மேலை நாடுகளுக்கும் தமிழகத்திற்கும் ஒரு கலைப் பாலமாக விளங்கி வருகின்றது, இம்மாமன்றம், இதேபோல, இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் தமிழகத்தின் கலைக் குழுக்களை அனுப்பி கலைப்பணி புரிந்து, தமிழகத்தின் பெருமையினை நிலைநாட்டி வருகின்றது.

### முத்தான மன்றம்

'பாகவத மேளா' என்னும் பரம்பரை நாட்டிய நாடகங்கள் நலிந்து போகாமல் இருக்கவும், புதிய நாட்டிய நாடகங்களைத் தயாரிக்கவும், தொழில் முறை நாடகக் குழுக்களுக்கும், கலை நிறுவனங்களுக்கும் இம்மன்றம் மான்ய உதவி அளித்துப் போற்றி வருகின்றது.

மாதம் ரூ. 75 அரசின் உதவி மான்யம் பெற்று வரும் வயோதிகக் கலைஞர்களுக்கு 150 ரூபாயாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவில் அறிவித்ததை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

இத்தகு அரிய் பணிகளை ஆற்றி வருகின்ற இம்மன்றம் 10-8-80 அன்று வெள்ளி விழாவைக் கொண்டாடியது.

இந்தியாவிலேயே சிறந்த மன்றம் என்ற நற்பெயரை நிலைநாட்டிக் கொண்டு, நாளும் நற்பணியாற்றி வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், முத்தமிழ் வளர, வாழ முத்துப் போல் ஒளி வீசிக் கொண்டு வருகின்றது என்றால், அது மிகையல்ல.

சனவரித் திங்கள் 4 முதல் 10-ஆம் நாள் வரை, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரை மாநகரத்தில் சிறப்புடன் நடக்கிறது. இந்த மாநாட்டை உலகத் தமிழாராய்ச்சிக் கழகமும், தமிழக அரசும் இணைந்து நடத்துகின்றன.

மாநாடு குறித்த ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த பல்வேறு அமைச்சர்களைத் தலைவர்களாகக் கொண்ட பதினான்கு குழுக்களை அரசு நியமித்துள்ளது. பொதுக் குழுவிற்கும் வரவேற்புக் குழுவிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைவராக உள்ளார். தமிழ் அறிஞர்களையும், தொழில் அதிபர்களையும், எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் குழுக்கள் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளன. இக் குழுக்கள் அனைத்தும், பலமுறை கூடி, மாநாட்டு ஏற்பாடுகளைக் குறித்து விரைவாக விவாதித்து, முடிவுகள் பல எடுத்துள்ளன.

இந்த உலகத் தமிழ் மாநாடு, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு ஆகும். இதுவரை நான்கு மாநாடுகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றுள்ளன:

| | | நடைபெற்ற ஆண்டுகள் |
|---|---|---|
| 1. | கோலாலம்பூர் | ...1966 |
| 2. | சென்னை | ...1968 |
| 3. | பாரீஸ் | ...1970 |
| 4. | யாழ்ப்பாணம் | ...1974 |

மதுரையில் நடக்கவிருக்கும் மாநாட்டில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த தமிழறிஞர்கள் கலந்துகொள்ளகிறார்கள். மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பேராளர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட 700 ஆகும். இவர்களில் 400 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகின்றனர். குறிப்பாக பாரீஸ், லண்டன், அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து தமிழ் மொழி, கலாச்சாரம் குறித்து ஆராய்ச்சிகள் பல புரிந்துள்ள அறிஞர்கள் பலர் வருகின்றனர். இவர்கள் அனைவரும் சனவரி 4-ஆம் தேதியிலிருந்து 10-ஆம் தேதி வரை தமிழ்ப் பண்பாடு, வளர்ச்சி, மொழி, இலக்கியம் குறித்த பல பொருள்களைப் பற்றி விவாதிக்க இருக்கின்றனர்.

இக் கருத்தரங்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெறும். பேராளர்கள் அனைவரும் கூடிப் பேசுவதற்கு வசதியாக, பெரிய பந்தல் ஒன்று அமைக்கப்படும். இது தவிர, பல அறைகளில் பேராளர்கள் தனித் தனியாகப் பிரிந்து, பல்வேறு பொருள் குறித்து விவாதிப்பார்கள். ஆராய்ச்சிக் கருத்தரங்கில் தமிழ் மொழிப் பற்றுள்ள சுமார் 3500 தமிழ் ஆசிரியர்கள் பார்வையாளராகக் கலந்து கொள்வார்கள். பேராளர்கள் செய்கின்ற விவாதங்கள் தான், உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு மையமாக அமையும்.

இது தவிர, பொதுமக்களுக்கும் பயனுள்ள வகையில் பல நிகழ்ச்சிகளைத் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. மாபெரும் ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலம் காமராஜர் சாலையிலிருந்து தொடங்கி மாசி வீதி வழியாக பந்தய மைதானத்தை வந்தடையும். கண்ணைக் கவரும் வண்ணம் சுமார் 25 அலங்கார வண்டிகள் இந்த ஊர்வலத்தில் இடம் பெறும். இவ்வூர்திகளில் தமிழ் இலக்கியக் காட்சிகள் உருவகப்படுத்திக் காண்பிக்கப்படும். இதனை, சிறப்பு விருந்தினர்கள் கண்டு களிக்கத் தனி மேடைகள் அமைக்கப்படும். இந்த மேடைகள் தெற்கு மாசிவீதி-மேலமாசி வீதி சந்திப்பிலும், மேலமாசி வீதி-வடக்கு மாசி வீதி சந்திப்பிலும் தேவர் சிலைக்கு அருகிலும் அமைக்கப்படும்.

ஊர்வலம் மாலை பந்தயத் திடலை அடைந்ததும், அங்கு மாநாட்டுத் துவக்க விழா நடைபெறும். சிறப்பு விருந்தினர்களும் அமைச்சர்களும், பேராளர்களும், இந்த விழாவிலே கலந்து கொள்வர். பொதுமக்கள் பெருந்திரளாக இந்த விழாவிற்கு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெறும். அதே சமயம், பொதுமக்களும், பிற அறிஞர்களும், கலைஞர்களும் பங்குகொள்ளும் வண்ணம் பட்டி மன்றம், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சிகள் நாள்தோறும் பந்தயத் திடலில் நடக்கும். இந்நிகழ்ச்சிகள் காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக நடைபெறும். தமிழறிஞர்களும், கலைஞர்களும் பலர் இதில் கலந்துகொள்வர். 30,000 பேர் அமரக்கூடிய ஒரு பெரிய பந்தல் பந்தயத் திடலில் இதற்கென அமைக்கப்படும். பார்வையாளர்களுக்கு வசதியாக உணவிடங்களும் அமைக்கப்பட்டு எல்லா வசதிகளும் செய்து தரப்படும். சிறப்பு விருந்தினர்களும் இந்தக் கருத்தரங்கில் பங்கு கொண்டு பட்டி மன்ற நிகழ்ச்சிகளையும், கலை நிகழ்ச்சிகளையும், கண்டு களிக்கலாம். மாநாட்டையொட்டிக் கவிதைப் போட்டி ஒன்றை அரசு நடத்துகிறது.

மேலும், மதுரை மாநகர மக்களும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாநாட்டைக் காண வருகின்ற பொதுமக்களும்

கண்டு களிக்கும் எண்ணம் நான்கு இடங்களில் சிறப்பான கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது. இந்தக் கலை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளன:

1. பந்தயத் திடல்
2. இராசா முத்தையா மன்றம் (தமிழிசைச்சங்கம்)
3. மதுரைக் கல்லூரி

இவை தவிர, இன்னும் ஒரு இடத்திலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இவ்விடங்களில், தமிழகத்தின் தலை சிறந்த கலைஞர்கள், கிராமியக் கலை நிகழ்ச்சிகளில், நடன, இசை, நிகழ்ச்சியில் பங்கு கொள்வர். வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் பேராளர்கள் அனைவரும் இராசா முத்தையா மன்றத்திற்குச் அழைத்துச் செல்லப்படுவர்.

பொதுமக்களுக்கு மற்றொரு நிகழ்ச்சி தமுக்கம் மைதானத்தில் அமையவிருக்கும் கண்காட்சியாகும். 15 துறைகளைச் சேர்ந்த அரங்குகள் அமைக்கப்பட்டு, கருத்தைக் கவரும் வண்ணம் இருக்கும், இந்தக் கண்காட்சி, பண்டைத் தமிழருடைய நாகரிகம், கலை, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை மக்களுக்குத் தெற்றென எடுத்துக்காட்டும் விதமாக பலவகைக் காட்சிகள் அமைக்கப்படும். குமரிக்கண்டம் (லெமூரியா) இருந்து மறைந்து நிலையை விளக்கும் திரைப்படக் காட்சி, காந்தி அருங்காட்சியத் திறந்த வெளி அரங்கில் நடைபெறும். உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அமைக்கப்பெறும் இந்தக் கண்காட்சி சித்திரைத் திருவிழா வரை நடைபெற உள்ளது. இதைத் தவிர தமுக்கம் சாலையில் பண்டையக் கால அடிப்படையில் பல்பொருள் அங்காடிகள் நாளங்காடி என்ற பெயரில் அமைக்கப்படும்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை மாநகரில் பல சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. உலகத் தமிழ் மாநாட்டு நினைவாக அழகிய நுழைவாயில்கள் ஐந்து இடங்களிலேயே அமைக்கப்பட்டு வருகின்றன. இடங்கள் வருமாறு:

1. மேலூர்-மதுரை சாலை
2. இராமநாதபுரம் - மதுரை சாலை
3. அருப்புக்கோட்டை-மதுரை சாலை
4. கன்னியாகுமரி-மதுரை சாலை
5. தேனி-மதுரை சாலை

இது தவிர, தமுக்கம் கலை அரங்கில் புத்தெழில் ஊட்டும் வண்ணம் ஒரு அழகிய மூவேந்தர் வாயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மூவேந்தர் வாயில் சேர, சோழ, பாண்டியர் நுழைவாயில்களாக இருக்கும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியம் கட்டி வரும் புதிய தங்கும் விடுதி மாநாட்டின்போது செயல்படத் துவங்கும். மாரியம்மன் தெப்பக்குளம் மண்டபம் பளிங்குக் கற்கள் போட்டு மேம்படுத்தப்படும். குளத்தில் படகுகள் விடப்படும். தண்ணீர் வற்றாமல் இருக்க நிரந்தர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வண்டியூர் கண்மாய் அழகுபடுத்தப்பட்டு, மதுரை மக்களுக்கு பயன்படும் வண்ணம் ஒரு சுற்றுலா இடமாக மாற்றப்படும். படகுகள் விடவும் வாய்ப்புகள் இருக்கும்.

குடிசைவாழ் மக்கள் பகுதி மேம்படுத்தப்பட்டு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மற்றும் சாலை வசதிகள் செய்து தர மதுரை மாநகராட்சி தகுந்த ஏற்பாடுகளைச் செய்து, விரைவாகச் செயல்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் முடிவு பெற்று, மதுரை மாநகரம் மேலும் அழகு பெறும் என்பதில் ஐயம் இல்லை.

ஊர்வல நாளன்றும் மாநாட்டு நாட்களிலும் நகரத்தில் பெருங்கூட்டம் எதிர்பார்க்கப்படுவதால், வருகிற பொதுமக்களுக்கு வசதிக்காகத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். ஆங்காங்கே பள்ளி, கல்லூரி ஆகியவற்றின் திறந்த மைதானங்களிலும், வகுப்பறைகளிலும், அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். தேவையான இடங்களில் குடிநீர், கழிப்பிடவசதிகள் செய்யப்படும். பொதுமக்கள் வசதியாகத் தங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

தேவையான உணவுப்பொருட்களைத் தரமான முறையில் அளிக்க உணவு விடுதி நடத்துவோர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

நகரத்திலும் ஆங்காங்கே கழிப்பிடங்கள் அமைக்கப்படும். நகரத்தைச் சுத்தம் செய்வதற்கு கூடுதலாகப் பல தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

மாநாட்டையொட்டித் தமிழறிஞர்கள், கலை மேதைகள் உலகத்தமிழ் ஆராய்ச்சியாளர்கள் தீட்டிய கட்டுரைகள் கலைப் படைப்புகள் அடங்கிய மலர் ஒன்று வெளியிடப்படுகிறது.

**சிலைகள்:**

மதுரை நகரின் பல்வேறு பகுதிகளில் தமிழறிஞர்கள், மற்றும் தமிழ் வளர்த்த சான்றோர்கள் ஆகியோருக்கு 14. சிலைகள் அமைக்கப்படும். அவையாவன:

1. திருவள்ளுவர்
2. தொல்காப்பியர்
3. இராபர்ட்-டி-நொபிலி
4. பாண்டித்துரைத் தேவர்
5. தேசிக விநாயகம்பிள்ளை
6. உ.வே. சாமிநாத அய்யர்
7. திரு.வி.கல்யாணசுந்தரம்
8. ஆறுமுக நாவலர்
9. சோமசுந்தர பாரதியார்
10. மாயூரம் வேதநாயகம் பிள்ளை
11. தனி நாயகம் அடிகள்
12. வீரமாமுனிவர்
13. திருமலை நாய்க்கர்
14 தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

மாநாட்டில் பங்கு பெறும் பேராளர்களைத் தமிழகத்தின் தலையாய நகரங்கள், பண்பாட்டுச் சிறப்புடைய பகுதிகள், கோயில்கள், சுற்றுலா மையங்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்ல சுற்றுலா ஒன்றை அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதற்கென அனைத்து வசதிகளும் பொருந்திய தனி இரயில் வண்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேராளர்கள் சுற்றுலா செல்லும் எல்லா இடங்களிலும் அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்று, கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து காட்டுவர். விருந்தோம்பலில் தனித்தன்மை வாய்ந்த தமிழகத்தில், அவர்களுக்குச் சிறப்பான முறையில் விருந்தோம்பல் அளிக்கப்படும்.

நான் மாடக் கூடலில் நடைபெறும் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு, மாநிலம் போற்றும் மாநாடாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!

# சிலை வடிவம் பெறும் செம்மல்கள்

## திருவள்ளுவர்

திருக்குறளை எழுதிப் பெரும் புகழ் பெற்றவர். சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்தவர். தமிழ் வளர்ந்த மதுரைக்குப் பெருமை, தமிழ் வளர்த்த இவரால் வந்ததோடு, மதுரையிலும் இவர் வாழ்ந்தார் என்றும் கூறுவர். தொல்காப்பியத்திற்காணாத வழக்குகள் பாட்டிலும் தொகையிலும் அருகி வருபவையாய்த் திருக்குறளில் பயின்று வருவதால் திருக்குறள் சங்க நூல்களுக்குப் பின்னையது என்று கூறுவாரும் உளர். இவரது நூலின் பெயரைக் குறித்துப் பல்வேறு புலவர்கள் பாடிய நூல் 'திருவள்ளுவ மாலை' ஆகும்-

## தொல்காப்பியனார்

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியரான இவர் வடமொழியிலும், தமிழிலும் சிறந்த புலமை பெற்றவரெனலாம். இவரது வரலாறு தெரியாத நிலையில் உள்ளது. தொல்காப்பியம் என்னும் நூலின் பெயரைக் கொண்டே தொல்காப்பியர் என்ற பெயர் வந்திருக்கவேண்டுமென்பர் சிலர்.

## தத்துவ போதக சுவாமி

(Robert De Nobili) (1577-1656)

இத்தாலி தேசத்தைச் சேர்ந்த இவர் 1606ல் தமிழகம் வந்தார். தமிழ்நாட்டு உயர்குல இந்துக்களை கிருத்துவ மதத்தில் திருப்ப வேண்டும் என்றே தமிழ் நாட்டுக்கு வந்தார். இவர் மதுரையில் வாழ்ந்து வந்தார்.

தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். பிறகு, திருச்சி, சேலம் முதலிய இடங்களுக்குச் சென்று 42 ஆண்டுகள் தமிழ் நாட்டில் சமய போதனை செய்து வந்தார். 1956-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள் காலமானார். இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார்.

## பாண்டித்துரைத் தேவர்

முகவை மாவட்டம் அருப்புக்கோட்டைக்கு அருகிலுள்ள பாலவனத்தம் கிராமத்தில் 1867 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21ஆம் நாள் பிறந்தார்.

சதாவதானம் முத்துச்சாமி அய்யங்காரிடம் கம்பராமாயணத்தையும், மதுரை இராமசாமி பிள்ளையிடம் காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம் ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்தார். தமிழறிஞர்களை ஆதரித்தார். தமிழ்ப் புலமையின் காரணமாக பிரபலமாகிவிட்ட பாண்டித்துரைத் தேவர் 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ஆம் நாள் மதுரையில் 4ஆம் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார். வள்ளலாக மட்டுமல்லாது, தமிழ்ப் புலவராகவுமிருந்த பாண்டித்துரைத் தேவர் 'சைவமஞ்சரி', 'துதிமஞ்சரி' போன்ற புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், 1911.ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## கவிமணி தேசிக விநாயகம்

குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தார். நாகர்கோவில், கோட்டாறு, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் தமிழ் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணி செய்தார். கவிதை புனைவதிலும், கல்வெட்டுக்களை ஆராய்ந்து ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் எழுதி வெளியிடுவதிலும் ஈடுபட்டார்.

கவிமணி, வெண்பாக்கள் புனைவதில், ஈடுஇணையற்ற திறன் உடையவர். 'மலரும் மாலை'யும் 'ஆசியஜோதி' போன்ற எண்ணற்ற புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

## உ. வே. சாமிநாதையர்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் கல்வி பயின்று, குடந்தை, சென்னை ஆகிய இடங்களிலுள்ள அரசுக் கல்லூரிகளில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி

''மகாமகோபாத்தியாய்'' ''டாக்டர்'' என்னும் பட்டங்களைப் பெற்று வாழ்ந்தவர்; உ. வே. சாமிநாதையர் யர், நீருக்கும், நெருப்புக்கும் இரை யாகவிருந்த தமிழ் ஏடுகளை தடுத் துக் காப்பாற்றிய தமிழ்த் தாயின் தவப்புதல்வர். ஏட்டுச் சுவடிகளி லிருந்த இலக்கியத்தை அச்சு வாகனத்திலேற்றியவர். எட்டுத் தொகையிலிருந்து ஐந்து நூல்களை யும், பத்துப் பாட்டையும், காப்பிய நூல்களையும் மற்றும் எண்ணற்ற இலக்கிய நூல்களையும் செம்மை யான முறையில் பதிப்பித்தவர். பல உரைநடை நூல்களைப் படைத்த வர்.

## திரு வி. கல்யாணசுந்தரனார்

சென்னை இராயப்பேட்டை திரு. வி. கல்யாணசுந்தர முதலி யார் செந்தமிழத் தென்றல் - இவர் சென்னை இராயப்பேட்டை வெஸ்லிக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராய் இருந்தவர். தமிழ்ப்புலவர் குழாத்துள் அரசியல் இயக்கங்களில், மிகவும் பயின்றவர் இவரே.

இவர் 'தேச பக்தன்' நாளிதழ் ஆசிரியராகவும் ''நவசக்தி'' நாளி தழுக்குத் தலைவராகவும் இருந் தார். இவர் இயற்றிய செவ்விய உரை நூல்கள் ''பெண்ணின் பெருமை'' ''திருக்குறள் விரிவுரை'', ''முருகன் அல்லது அழகு'' முதலி யன. இவரெழுதிய நூல்கள் தமிழறிஞர்கள் பாராட்டத்தக்கன.

## ஆறுமுக நாவலர்

தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறு துணையாய் நின்றவர், ஆறுமுக நாவலர்-யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நல்லூரில் தோன்றிய இவர், தமிழ் நூல்களை முதன் முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித் தவர். திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களை யும் திருவிளையாடல், பெரிய புராணம் போன்ற புராண நூல் களையும் பிழையின்றிப் பதிப்பித்த வர். தமிழுக்கும் சைவத்திற்கும் இவர் ஆற்றிய தொண்டு மறக்க இயலாதது. 1822ல் பிறந்த இவர் 1879ல் மறைந்தார்.

## சோமசுந்தர பாரதியார்

1879-ஆம் ஆண்டு நெல்லை மாவட்ட எட்டையபுரத்தில் பிறந் தார். நாவலர் என்று புகழப் பெற்றவர். தீண்டாமை, சாதிப் பேய்களை விரட்டும் உரத்த சிந்த னையாளராவார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைமைப் பணிபுரிந்தவர். சிறந்த ஆராய்ச்சியாளர். சட்ட வல்லுநர். சென்னையில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவ ராயும் விளங்கியவர்.

தமிழ்ப் பண்பாடு பற்றி ஆய்வு நடத்துபவருக்கும் உதவித்தொகை அளிக்க வேண்டும் என்ற இவரது நோக்கத்துடன் 1963 ஆண்டு கல்வி அறப்பணி தோற்றுவிக்கப்பட்டது.

1959-ஆம் ஆண்டு டிசம்பர், 14ந் தேதி இயற்கை எய்தினார்.

## வேதநாயகனார்

திருச்சி மாவட்டம் இனாம் குளத்தூர் என்னும் குக்கிராமத்தில் விற்பன்னர் வேதநாயகனார் 1826 அக்டோபர் திங்கள் 11ஆம் நாளில் பிறந்தார். தரங்கம்பாடி நீதிமன் றத்தில் முன்சீப ஆனார்.

தமிழ் வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டினார். எண்ணற்ற நூல்களை எழுதிப்பெரும் புகழை ஈட்டியவர். 1889 ஆம் ஆண்டு சூலை 21-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## தனிநாயக அடிகளார்

இலங்கையில் பிறந்து, தமிழகத் தில் தமிழை முறையாகக் கற்று, உலகின் தமிழ்த் தூதராகப் பணி யாற்றியவர் தனிநாயகம். 'தமிழ்த் தூது' 'ஒன்றே உலகம்', திருவள்ளு வர்', தமிழர் தம் மனித இன நலக் கோட்பாடுகள், இலங்கையில் தமிழ்ப்பண்பாடு அன்றும்-இன்றும்- இனியும் ஆகியும் ஏடுகளை எழுதிய ஏற்றமிக்கவர். உலகத் தமிழர் மாநாடுகள் கூடுவதற்கும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் உரு வாவதற்கும் (Tamil Culture) முத் திங்கள் இதழ் வாயிலாகத் தமிழின் புகழ் பரவுவதற்கும் பல்லாற்றாலும் பணியாற்றியவர்.

பண்ப[illegible] உலகியலறியும், புலீட்சர் [illegible] பெறும் சொல் வள மும் ஆக்ஸ்போர்டு அறிஞர் மொழித் திறமும் ஒருங்கே பொருந் தியவர் தனிநாயகம் — என்று பார்பரா செங்கசு பாராட்டியுள் ளார். மலேயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்.

## வீரமாமுனிவர்

இவர் இத்தாலி நாட்டவர். கான் ஸ்டான்சியார் ஜோசப் பெஸ்சி என்னும் பெயருடையவர். தமிழகம் வந்ததும் தைரியநாதர் என்று தன் னுடைய பெயரை மாற்றிக் கொண் டார்.

தமிழின்பால் இவர் கொண்ட ஆர்வத்தால் இவரை ''வீரமாமுனி வர்'' என அன்புடன் அழைத்தனர். பதினொன்று மொழிகள் கற்றுத் தேர்ந்தவர்.

## திருமலை நாயக்கர்

மதுரையில் ஆண்ட நாயக்கர் வமிசத்துப் புகழ்மிகு அரசர் ஆவார். மதுரை திருமலை நாயக்கர் மகால், வண்டியூர் தெப்பக்குளம், புதுமண் டபமும் கட்டிய பெருமை இவருக்கு உண்டு. இவரது வேண்டுகோளுக் கிணங்க குமரகுருபரர் 'நீதி நெறி வெண்பா' பாடியதாகச் சொல்லப் படுகிறது.

## தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 8-1-1901-இல் பிறந்தார். தமிழ்நாடு சட்டமும் பயின்று பட்டங்கள் பல பெற்ற இவர் தமிழுக்காக அயராது தொண்டு புரிந்து வந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் மொழியியல் துறையின் பேரா சிரியராகப் பணியாற்றினார்.

மொழியியல் துறையில் இவர் தமிழுக்குச் செய்த தொண்டு பெரும் புகழுக்குரியது. 'வள்ளு வரும் மகளிரும்' என்ற இரு நல்ல நூல்களை வெளியிட்டுள்ளார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளி யிட்ட இவர் மதுரை பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் பணி புரிந்தார். இவர் 1980ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27-ம் நாளில் மறைந்தார்.

தொகுப்பு: ஆனந்தன்

# தமிழர் கண்ட இசைச் செல்வம்

-பேரறிஞர் அண்ணா

வளைந்து வளைந்தோடும் அந்த அருவி, வெண்மணலைத் தழுவிக் கொண்டு, தழதழத்த குரலில் பாடுவது கேளீர்'. எந்தப் பாட்டு இதற்கு ஈடாகும்?

செடியும் கொடியும், தளிரும் இலையும் மலரும் கனியும் ஆடும் காரணம் அறிவீரோ'. அதோ வீசும் காற்றுடன் கலந்து வரும் இசை கேட்டே, அவை ஆடுகின்றன.'

பச்சிளங்கன்று தாயைக் கூப்பிடும் குரல் கேட்டீரோ? அதிலுள்ள இசை இன்பமே தனியானது.'

போர்வீரன் தனது உடலில் கவசமணிந்து வாளை உறையினின்றும் எடுக்கிறானே, அச்சமயம் கிளம்பும் ஒலி, வீர உள்ளம் படைத்தோர்க்கு இசை.

இம்மட்டுந்தானோ! குழலா இனிது? யாழா இனிது? மக்களின் மழலையே இனிது. ஈடு எதிர் இல்லாத இசையாகும் இது!

இங்ஙனம் மக்கள் இசை இன்பத்தை ஓடும் அருவியில், வீசும் காற்றில், விளையாடும் கன்றின் குரலில், கொஞ்சும் குழந்தையிடம், வீரரின் செயலில், காதலியிடம் காண்பர்' களிப்பர்'.

பொழில்தரு நறுமலரே
புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே
பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே
முரிபுரு வில்லிணையே
யெழுதரு மின்னிடையே
யெனையிடர் செய்தவையே!

பக்கத்திலே காதலி! எதிரே கடல்! யாழை வாசித்துக் கொண்டு மேலே குறிப்பிட்டுள்ள இசையை இனிமையாகப் பாடுகிறான். இளமையும் செல்வமும் பொருந்திய கோவலன், மாதவியின் மனம் மகிழப் பாடுகிறான்.

இசைச் சூழல்கள் எண்ணற்றன இருந்த இடம் இது! ஆங்கு இசை பயின்று இசை நுணுக்கமுணர்ந்து ஏழிசையைப் பாடி வாழ்ந்தவரே தமிழர்.

சிறு வயது முதலே, இசையே தமிழரின் தோழன்.

ஊசல்வரி, கந்துகவரி, ஆற்றுவரி, கானல்வரி முதலியன இன்று தமிழருக்கு வெறும் சொற்றொடர்கள்; முன்னாளில் அவைகள் இனிய இசைகள்:

இசை எனும் சொல்லுக்கே வயப்படுத்துவது—இசைவிப்பது என்பது பொருள். இதனைத் தமிழர் நன்குணர்ந்து பயன்படுத்தி வந்தனர்; மகிழ்ந்தனர்; மகிழ்வித்தனர்.

தினைப் புனத்திலிருந்து ஒரு தீஞ்சுவை மொழியாள் தத்தை எனப்படுவாள் இசை மொழிவாள். அந்த இசை கேட்ட பறவைகள் இசைக்கு வசமாகி மயங்குமாம்.

மலையோரத்தில் குறிஞ்சி பாடக் கேட்ட மழகளிறு உறங்குமாம்; இனிய இசையில் மயங்கி அசுணமா எனும் இசையறி பறவை, எதிரில் தன்னை மறந்து நின்று, பிடிபடுமாம். ஆனினங்கள் அடங்குமாம்; மதங்கொண்ட யானையும் இசைக்கு அடங்கும் என்று கலித்தொகை கூறுகிறது. அது மட்டுமா?

''ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை''

அதாவது, கள்வரும் இசை கேட்டுக் கொடுந்தொழில் மறந்து நின்றனராம்.

ராகம் என்று கூறப்படுவது தமிழரால் பண் என்று குறிக்கப்பட்டு வந்தது. தமிழரின் பண்கள் எண்ணற்று இருந்தன. வடமொழியில்—கரகரப்பிரியா எனக் குறிப்பிடப்படுவதே படுமலைப் பாலைப்பண் என்றும் கல்யாணி எனும் ராகம், அரும்பாலைப் பண் என்றும், முன்னாளில் குறிப்பிடப்பட்டது. அரிகாம்போதிக்குத் தமிழர் அளித்த பெயர் கோடிப் பாலைப் பண்; பைரவிக்கு விளரிப் பாலைப் பண்; தோடிக்குச் செவ்வழிபாலைப் பண்; என இங்ஙனம் ராக இலட்சணங்கள் எவ்வளவோ தமிழில் இருந்தன; மறைந்தன.

கடலைக் கண்டால் ஓர் பாடல்; களிறைக் கண்டால் ஓர் பாடல்; தளிரைக் கண்டு ஓர் பாடல்; தனது காதலியைக் கண்டு ஓர் பாடல் எனத் தமிழர் தமது இன்ப உணர்ச்சியை, இசை வடிவில் எத்துணையோ சிறப்புடன் வெளிப்படுத்தி வாழ்ந்தனர்.

சிந்துவெளியில், 1922ல் நடத்தப்பெற்ற புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பின்னாலே தான் தமிழைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியுமான உண்மை வரலாறுமயக்கத்திற்குஇடமின்றி அறியப்பட்டது. அதைத் தொடர்ந்து நடந்த பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில் மிகமிகப் பழையதொரு காலத்தில் உலகில் ஒரேவகை எழுத்துக்களைக் கொண்ட ஒரு மொழி இருந்தது என்றும், அம்மொழி வேறொன்றல்ல தமிழே என்றும் கருதிடப் பட்டது.

சிந்து வெளி நாகரிகக் காலம் கி.மு.5000 வரையில் எனக் கொள்ளப் படுகின்றது. இதனால் தமிழ் மொழியும் தமிழ் எழுத்தும் ஏழாயிரம் ஆண்டுகளின் முன்னாலேயே திருந்திய நிலையினை அடைந்திருந்தன என்று அறுதியிட்டுக் கூற இடமுண்டு. சிந்துவெளியில் வழங்கிய எழுத்துக்களினின்றே பிராமி எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் தோன்றின.

இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளின் எழுத்துக்களும் பிராமியினின்றும் பிறந்தவை என்றும், பிராமி எழுத்துக்கள் மொகஞ்சதரோ எழுத்தினின்றும் பிறந்தவை என்றும், தமிழில் மாத்திரம் காணப்படும் சிறப்பெழுத்துக்களுக்குப் பழைய பிராமியில் எழுத்துக்கள் இருந்தனவென்றும், ஆகவே பிராமி எழுத்துக்களைத் தமதாக்கிக்கொண்டவர்கள் தமிழரேயாவர் என்றும் ஆராய்ச்சி வல்லார் கூறுகின்றனர்.

## தமிழே! தாயே!

இவ்வளவு பழமையும் தொன்மையும் மிகுந்த தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளர்க்கப்பட்ட பெருமையுடையது என்பதாலே முத்தமிழ் என்று குறிப்பிடப்பட்டது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் தமது தித்திக்கும் கவிதையாலே முத்தமிழை வாழ்த்துவதைப் பாருங்கள்:

'தமிழே வாழ்க தாயே வாழ்க!
எழுத்தே பேச்சே இயலே வாழ்க!
இழைத்த குயிலே இசையே வாழ்க!
தழைத்த மயிலே கூத்தே வாழ்க!
ஒழுக்க வாழ்வின் உயிரே வாழ்க!'

இப்படி வாழ்த்தி வணங்கத்தக்க இன்பத்தமிழில் இயல் பற்றி இயன்றவரையிலே அவரவரும் அறிந்திருக்கக் கூடும். இசைத் தமிழ் வளர்ந்து வந்த விதம் குறித்து வகைபட விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

சங்க காலத்தின் முன்பிருந்தே இசைத் தமிழானது ஏற்றம் கொண்டிருந்தது என்பதனைப் பழந்தமிழ் நூற்களால் அறிகிறோம்.

பண், திறம் என்ற இரண்டு வகைப் பிரிவுகளை உடையதே இசைத் தமிழ். 'மாத்திரைகள். என்று சொல்லப்படும் 22 வகைச் சுருதிகளும்-குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், எனப்படும் ஏழு வகைச் சுரங்களும் தொன்றுதொட்டு இசைத் தமிழின் கூறுகளாகப் பேசப்படுகின்றன.

பழந்தமிழ்ப் பண்கள் மாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என நான்கு வகைப்படும்.

ச, ரி, க, ம, ப, த, நி என்பதல்ல தமிழிசைக்குரிய இலக்கண அலகு. 'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔவெனும் இவ்வேழெழுத்தும் ஏழிசைக் குரியது' என்கிறது திவாகரம்.

தமிழிசையிலே காலப்போக்கில் பல்வேறு மாற்றங்கள் உண்டாயின. கருநாடக இசை' என்ற புதுப்பெயர் பூண்டது தமிழிசை. கருநாடக சங்கீதம் எனப்படும் தென்னாட்டு இசைக்கலை தமிழர் தம் பரம்பரைச் சொத்தாகும். சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னாலிருந்தே இந்த இசைக்கலை புதிய வேகத்தோடும் உரிய கவனத்தோடும் வளர்க்கப்பட்டது தமிழ் மண்ணில்.

## இசையில் தெய்வமணம்

இசையே தெய்வங்களைப் பக்தர்களிடமும் அடியார்களைத் தெய்வங்களிடமும் ஈர்க்கச் செய்வதாக இருந்தது என்பதற்குப் புராண உதாரணங்கள் பல உண்டு. இதோ அவற்றுள் சில. முதலை உண்ட பாலனை மீட்கவும், எலும்பைப் பெண்ணுரு ஆக்கவும், கல்லே தெப்பமாய்க் கடலில் மிதக்கவும், நெடிய பொற்பாடம் திறக்கவும் இன்பததமிழிசை பயன்பட்டதாம்!

பாட்டால் பரமனைத் தொழுவதே சாலச் சிறந்தது எனக் கருதப்பட்டது அந்நாளில். அதனாலேதான் ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' என்று சுந்தரரும்—''யாழின் இசையே! அமுதே! அறிவின் பயனே!' என்று ஆழ்வாரும் இசையே கடவுளெனக் கண்டு பாடினர்!

தேவர்களும் இசையாசிரியர்களாகப் போற்றப்பட்டனர். இசையை ஈசுவரார்ப்பணம் செய்வதே பெருமை யுடையது என்று கருதப்பட்டதால், அந்நாளைய இசைநிகழ்ச்சிகள் யாவும் ஆலயங்களிலேயே நிகழ்த்திடப் பெற்றன. கோயில்களிலேயே நியமிக்கப்பட்டிருந்த இசைப்புலவர்கள் ஒவ்வோர் காலபூஜையின் போதும் தக்க இசைப் பாக்களைப் பாடுவாராயினர்.

தஞ்சை முதலிய இடங்களில் உள்ள சிவாலயங்களில் தேவாரம் ஓதிடவென அந்நாளில் தகுந்த இசைவாணர்கள் அரசர்களாலேயே நியமிக்கப்பட்டிருந்தனர். 'பிடாரர்'கள் என அவர்களைக் குறிப்பிடுகின்றன சாசனங்கள்.

இந்தப் பாடல் இந்த இசையிலேதான் பாடப்படவேண்டும்என்ற கட்டுப்பாடு உண்டு. பரிபாடல் என்னும் பழைய சங்கநூலில்உள்ள ஒவ்வொரு பாடலும் இசையமைப்பை உடையது. அப் பாடல்களுக்கு அந்நாளைய புலவர்கள் தனித்தனியே இராகங்களை அமைத்திருக்கிறார்கள்.

## காப்பிய இசைவளம்

பழந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திலே இசைத்தமிழ் பற்றிய விளக்கங்கள் பல காணப்படுகின்றன. கானல் வரியே கானவரிதான்!

காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்தவர்கள் ஆடியும் பாடியும் களித்திருந்தனர் என்பதைப் 'பாடல் ஓர்ந்தும் நாடகம் நயந்தும்' என்னும் பட்டினப்பாலை அடிகளால் உணரலாம்.

இசை என்பது வாயினால் பாடுவது மட்டுமே அல்ல; கருவியினால் இசைப்பதும் இசையே ஆகும். பல்லாண்டுக் காலமாக குழல், யாழ், முழவு என்னும் மூவகை இசைக் கருவிகள் பெரும் சிறப்புடையனவாகப் போற்றப்படுகின்றன. துளைக் கருவி வகைசார்ந்தது குழல். நரம்புக் கருவி வகை சார்ந்தது யாழ். தோல் கருவி வகை சார்ந்தது முழவு.

வங்கியம், ஏழில் என்பவை அந்தக் காலத்திய நாதசுரத்தின் பெயர்களாகும். வேங்கை போன்ற மரங்களால் அவை செய்யப்பட்டன.

இப்போது நாம் காணும் வீணைக்கு முன் பிறந்ததே யாழ். சகோட யாழ், செங்கோட்டி யாழ், மகர யாழ், வில் யாழ் என பலவகைப் பட்டன அவை. ஏழு நரம்புகளுடைய சிறு யாழிலிருந்து ஆயிரம் நரம்புகள் கொண்ட பேரியாழ் வரையான அந்த யாழ் வகைகள் பண்டைத் தமிழர்கள் இசைத்து மகிழ்ந்தவைகளாகும்.

வியாசர் நான் மறையைச் செய்வதற்கு முன்னாலேயே தோன்றியது எனக்கூறப்படுவதும்;'ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தாரென்க' என்று நச்சினார்க்கினியரின் உரையில் கூறப்படுவதுமான தொல்காப்பியத்திலேயே முத்தமிழ் குறித்தும் கூறப்பட்டிருக்கிறது.

அந்த நூல் பிறந்த நாளிலேயே இசைத் தமிழ் ஏற்றம் பெற்றிருந்திருக்கிறது. இசை வல்ல புலவர்கள், பாணர்கள், பொருநர் எல்லாம் இருந்துள்ளனர். இசைத் தமிழ்த் தனி நூல்கள் இருந்தது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'நல்லிசைப் புலவர்' (1259).....
'கூத்தரும் பாணரும் பொருநரும்
விறலியும் (1037)
'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை
நீடலும்
உளவென மொழிய இசையொடு
சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்' (33)

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

இலக்குமணப் பிள்ளை

வேதநாயகம் பிள்ளை

பாரதியார்

—என்ற தொல்காப்பிய அடிகளைத் தான் நோக்குங்களேன்!

சிற்றிசை, பேரிசை, இசை நூல், இசை நுணுக்கம், இசை விளக்கம், பஞ்சமா பாரதீயம், பண் அமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக்கூறு, பாடற் பண்பு, தாளவகையோத்து, தாளசமுத்திரம், கருவி இலக்கணம், ஆளத்தி அமைப்பு-எனப் பலவகை இசைநூற்கள் தமிழிலே இருந்து அழிந்து பட்டிருக்கின்றன!

இவ்வாறு பழம் பெரும் சிறப்புடைய இசைக் கலையானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது.

ஆலயங்களிலே தான் இசை, விழாக் களிலே தான் இசை என்பதல்ல; நடவுக் காலத்தில் வயல் வெளியிலும் ,தொட்டிலாடும் வீட்டுக்குள்ளும், நெல்குற்றும் வீட்டிலும், களத்து மேட்டிலும் எங்கும் இசை இசை இசை என்கிற நிலையே வளர்ந்து வந்திருக் கிறது.

## பாட்டுக்கொரு பாரதி

'பாட்டுக்கொரு புலவன்' என நாம் பாராட்டிடும் பாரதியே, எங்கெல்லாம் மணந்த இசையிலே நெஞ்சைப் பறிகொடுத்த தாகப் பாடுகிறார் பாருங்கள்:

**''கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்**
**காற்று மரங்களிடை காட்டும் இசைகளிலும்**
**ஆற்றுநீ ரோசை அருவி ஒலியினிலும்**
**நீலப் பெருங்கடல்எந் நேரமும்**
**தானிசைக்கும்**
**ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்**
**மானுடப் பெண்கள் வளருமொரு**
**காதலினால்**
**ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன்**
**வாரியிலும்**
**ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும்**
**நெல்லிடிக்கும்**
**கோற்றொடியார் குக்குவெனக்**
**கொஞ்சும் ஒலியினிலும்**
**சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த**
**பண்களிலும்**
**பண்ணை மடவார் பழகுபல**
**பாட்டினிலும்**
**வட்டமிட்டுப் பெணகள்**
**வளைக்கரங்கள் தாமொலிக்கக்**
**கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப்**
**பாட்டினிலும்**
**வேயின் குழலோடு வீணைமுதலாமனிதர்**
**வாயினிலும் கையாலும் வாசிக்கும்**
**பலகருவி**
**நாட்டினிலும் காட்டினிலும்**
**நாளெல்லாம் நன்றொலிக்கும்**
**பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்!**

பாட்டுத் தமிழ் எங்கெல்லாம் எப்படி யெல்லாம் போற்றிப் புகழத் தக்கதாக வளர்ந்து வளம் பெற்றிருக்கிறது பார்த்தீர் களா!

தமிழிசை எனப் பார்க்கின்ற போது சிறந்த தமிழ்க் கவிஞர்களாகத் திகழ்ந்து அண்மைக்காலத்தே வாழ்ந்து நம் நெஞ்சில் நீங்காத நினைவாக நிலைத்துவிட்டவர் களையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

தண்டபாணி சுவாமிகள் முத்து தாண்டவர், மாயூரம் -வேத நாயகம்பிள்ளை, முத்து சாமி கவிராயர், மதுரகவி பாஸ்கரதாஸ், அருணாசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, செய் குத்தம்பி பாவலர், நாமக்கல் வே. இராம லிங்கம்பிள்ளை, இலக்குமண பிள்ளை, சுப் பிரமணிய பாரதியார், தண்டபாணி தேசிகர், விபுலானந்த அடிகள், பாபநாசம் சிவன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், கம்ப தாசன் ஆகியோர் உட்பட சிறந்த பல சாகித்திய கர்த்தாக்கள், இசைப் பேரறிஞர்கள் நம்முடைய காலத்திலே வாழ்ந்து நல்ல தமிழிசை வளர்த்த பெருமைக்கு உரியவர்களாவார்கள்.

தமிழ் நாட்டுப் பாணி என்ற ஓர் அழகிய அனுபவபூர்வமான நல்ல தரம் நம்முடைய தமிழ் இசைக் கலையில் தொன்றுதொட்டு இருந்து வருவதை யாராலும் மறக்கவும் முடி யாது, மறுக்கவும் இயலாது.

இவ்வளவு சீரும் சிறப்பும் மிக்கதான தமிழிசையின் புகழ்காக்கவேண்டியும்,வளர்ச்சி கருதியும் 1943ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்ட தமிழிசை இயக்கமும், அதன் சார்பி லான தமிழிசைச் சங்கமும் நாம் நம் நினை வில் நிறுத்திடத் தக்கதாகும்.

இசைத்தமிழ் இன்னும் இன்னும் ஏற்றம் பெற முனைவோம்; முன்னேற்றம் காண் போம்!

# சொல்லுக்கும் பொருளுக்கும் திருமணம்!

திருவடியைத் தாமரையாகவும், இடை யைத் துடியாகவும், கழுத்தைக் கமுகாகவும், முகத்தைச் சந்திரனாகவும், கூந்தலை மேகமாக வும் உருவகம் செய்வது தமிழ் மரபு, இந்திய மரபு. இந்த உருவகங்கள் எல்லாம்—மேனாட்டு ஆங்கில மரபுக்கு ஒவ்வாதவை. இதைப்போலவே, அணுகு முறையிலும் பல முரண்பாடுகள் இருக் கின்றன.

வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்று தமிழர்கள் சொல்வார்கள்; மரத்தை வைத்துத்தான் பழத்திற்குப் பெயர் இடுவார்கள். ஆனால், ஆங்கிலேயர்களோ Plantain Tree, Jack-fruit Tree, Mango Tree என்று பழத்தை வைத்து மரத்திற்குப் பெயர் இடுவார்கள். இவ்வாறு வாழ்க்கைய்ய அணுகும் முறையிலே தமிழர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கின்றன. அவ்வளவு வேறுபாடுகளும், தமிழிலும் ஆங்கில மொழியிலும் நிழலாடுவதைப் பார்க்கிறோம்.

இந்த வேறுபாடுகளையெல்லாம் கருத்தில் வைத்துக்கொண்டு எச்சரிகையோடு மொழி பெயர்ப்பாளர்கள் தமிழாக்கம் செய்ய வேண்டும். உரிய பொருத்தங்களையெல்லாம் நுணுகி ஆய்ந்து, அதன் பின்னரே சொல்லுக்கும் பொருளுக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

—('சட்டச் சொல் அகராதி' என்னும் நூலில், ஜஸ்டிஸ் டாக்டர் எஸ். மகராஜன் அவர்கள்)

# தமிழ் வளர்ச்சியில் தலையாய பணிகள்

டாக்டர் மா. நன்னன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

ஒரு நாடு மாற்றானுக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் நேரத்தில் அடிமைத் தளை யில் இருந்து விடுதலை பெறுவதற்குரிய போராட்டங்களில் ஈடுபடும்போது உழைப்பும் அறிவும் முழுமையாகச் செலவிடப்படுவதால் மொழி, கலை, பண்பாடு முதலியனவற்றில் தேவையான ஊக்கம் செலுத்த முடியாமல் போகிறது. நாமும் இப்பொதுக் கொள்கைக் குப் புறம்பானவர் அல்லர். 200 ஆண்டுகளாக ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த தால் நம்முடைய மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட முடி யாதவர்களாய் அடிமைத் தளை அறுப்பதற்கு முழுமையாகப் பாடுபட வேண்டியவர்களாய், கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், வாயிருந்தும் ஊமையர் களாய் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

1947-ஆம் ஆண்டு நம்நாடு விடுதலை பெற்ற பின்னரே, நாம் நம்மைப் பற்றி முழு மையாக எண்ண முடிந்தது; எழுத முடிந்தது; பேச முடிந்தது. மாற்றான் நம்மை ஆண்ட காலத்தில் அவர்களின் மொழியாகிய ஆங்கி லத்தையே ஆட்சிமொழியாய்க் கொண்டு ஆள வேண்டிய அவலநிலை இருந்தது. அவர்களின் ஆட்சிக்குப் பின்னர், நாட்டை நாமே ஆண்டு கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. மொழி வழி மாநிலங்கள் பிரிந்த பின்னர், மாநில அரசுகள் தத்தம் மாநில மொழிகளிலேயே ஆட்சியை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டன. நாட்டு விடுதலைக்காகப் பாடு பட்ட பேராயக்கட்சி (காங்கிரசுக் கட்சி) நாடு விடுதலை பெறும் முன்னரே நம் தமிழகம் சென்னை மாநிலத்தில் அடங்கியிருந்தபோதே தன் அமைப்பைத் 'தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி' என்றுதான் அமைத்துக் கொண்டி ருந்தது என்பது நினைவு கூரத் தக்கது.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் புறக்கணிக் கப்பட்ட மொழி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி அளவிலும், கல்லூரி அளவிலும் பிற பாட ஆசிரியர்களுக்கு இணையாகக் கருதும் நிலை ஏற்படுத்தப்பட்டது. ஆட்சிமொழி செயற்படுத்தப்பட வேண்டுமானால் கல்லூரி களில் பயிற்று மொழி தமிழ்மொழியாகஇருக்க வேண்டும் என்னும் கொள்கை வலியுறுத்தப் பட்டுச் செயற்படுத்தப்பட்டது. கல்லூரி களில் தமிழுக்கும் பேராசிரியர் பணி யிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

தமிழ்மொழி, பண்டைச் சிறப்புகளோடு விளங்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் நிலையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவப் பெற்றது. இக்கழகத்தின் செயற்பாடுகளில் தமிழில் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணி யும் ஒன்றாக அமைந்தது. பத்துப் பகுதி களாகத் தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளி யிடப்பட்டது. குழந்தைகள் கலைக் களஞ்சி யம் தயாரிக்கும் பணியிலும் இது ஈடுபட்டது.

## தமிழ் ஆட்சிமொழி

ஒரு முதலாளியிடம் கணக்கப் பிள்ளை யாக இருந்து அவருக்கு உதவும் ஒருவர் அம் முதலாளிக்குத் தெரிந்த மொழியில் கணக்கு எழுதுவதுதான் நேரியதாகும். அவருக்குத் தெரியாத மொழியில் கணக்கு வைக்கப்பட் டால் அது அவரை ஏமாற்றுவதாகவே ஆகும்.

அரசு அலுவலர்களுக்கும் அரசுக்கும் முதலாளி பொது மக்களே. அவர்களின் கணக்குப் பிள்ளைகள் தான் அரசும் அதன் பணியாளர் களும். தமிழக மக்களாகிய முதலாளிகளுக்குத் தெரிந்த மொழி தமிழ்தான். ஆகவே அம் மொழியில் ஆட்சி செய்வதே நாணயமும் நேர்மையும் ஆகும். அவர்களுக்குத் தெரியாத ஆங்கிலத்திலோ, அன்றிப் பிறமொழிகளிலோ ஆட்சி நடைபெற்றால் அது அவர்களை ஏமாற்றுவதான நேர்மையற்ற செயலேயாகும். மக்களாட்சிக் கோட்பாடும் மக்க ளறிந்த மொழியில் ஆட்சி நடைபெறும் போதே நிறைவு பெறும். இதனையுளங் கொண்டே இந்திய நாடு மொழிவழி மாநிலங் களாகப் பகுக்கப்பட்டு அவ்வம் மாநில மக் களின் மொழிகள் ஆட்சி மொழிகளாக்கப்பட் டன. இதன் அடிப்படையில்தான், இந்திய அர சியலமைப்புச் சட்டத்தின் 345-ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளதற்கிணங்கத் தமிழ் நாட்டில், ஆட்சிமொழிச் சட்டத்தை 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் நிறை வேற்றியது. இது 1957-ஆம் ஆண்டு செயற் பாட்டிற்கு வந்தது.

## ஆட்சிமொழிக் குழு :

தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயற்படுத்துவதில் அரசுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கென ஆட்சிமொழித் திட்ட நிறைவேற்றக் குழு 1957-ஆம் ஆண்டு அர சால் அமைக்கப்பட்டது.

1956-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டத்தையொட்டி, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் 1959-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில், முதன் முறையாக அமைக் கப்பட்டது. தமிழ் வளர்ச்சி பற்றி ஆக்க

முறையிலான கருத்துக்களை அவ்வப்போது அரசுக்குப் பரிந்துரைப்பது இம் மன்றத்தின் முக்கிய பணியாகும்.

மாநிலம் முழுவதும் உள்ள அலுவலகங்களில் தமிழ் எவ்வாறு செயற்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நேரில் ஆய்வு செய்து அறிவுரை வழங்கவும் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தினைச் செயற்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு ஆவன செய்யவும் ஆட்சிமொழி அகராதியை வளப்படுத்தவும் தனி அலுவலர் ஒருவர் அமர்த்தப்பட்டார். பின்னர் 1965-முதல்,தலைமைச் செயலகப் பொதுத் துறையில் அலுவலால் அரசுச் செயலாளர் என்னும் நிலையில் தமிழ்வளர்ச்சி இயக்குநர் பதவி தோற்றுவிக்கப் பெற்றது.

ஆட்சிமொழிக் குழு அலுவலகம் என்னும் அமைப்பு 1971-ஆம் ஆண்டு மாற்றப்பட்டு தமிழ் வளர்ச்சித் துறை எனத் தனித் துறையாக அது தோற்றுவிக்கப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள அலுவலகங்கள் எல்லாவற்றையும் இயக்குநர் ஆய்வு நிகழ்த்துவது அரிதென அறிந்த அரசு தமிழ்நாடு முழுவதும் பத்து உதவி இயக்குநர்கள் (தனி அலுவலர்) பதவிகளைத் தோற்றுவித்தது. தமிழ் வளர்ச்சி இயக்குநர் துறைத் தலைமை அலுவலகங்களையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும் ஆய்வு செய்யும் நிலையிலும், உதவி இயக்குநர்கள் பிற அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து தமிழ்த் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணை புரியும் வகையிலும் வழிமுறைகள் வகுக்கப் பெற்றன.

**ஆட்சிமொழித் திட்டம் நிறைவேற்ற நிலைகள் :**

*14-1-1958* பொங்கல் திருநாளன்று தமிழில் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆட்சிமொழித் திட்டத்தின் பிரிவு 4-இன் கீழ் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன்படி தட்டச்சுப் பொறிகள் இல்லாத அரசு அலுவலகங்களில் அதாவது கையினால் கடிதங்களை எழுதி அனுப்பும் வேளாண் துறை முதலாக வருவாய்த் துறை ஈறாக உள்ள 19 துறை அலுவலகங்களில் இத்திட்டத்தைச் செயற்படுத்த ஆணைகள் முதலில் வெளியிடப் பெற்றன.

*1961-1963*-ஆம் ஆண்டு காலத்தில் இத் திட்டம் மாவட்ட அளவிலான அரசு அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. துறைத் தலைமை அலுவலகங்களைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட 4 நிலைகளிலான திட்டம் ஒன்று தீட்டப்பட்டது :

முதல் நிலை :—பொது மக்களுக்கு எழுதப்படும் எல்லாக் கடிதங்களிலும் தமிழ் பயன் படுத்தப்பட வேண்டும்.

இரண்டாம் நிலை :—சார்நிலை மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு எழுதப்படும் எல்லாக் கடிதங்களிலும் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும்.

மூன்றாம் நிலை :—பிற துறைகளுக்கு எழுதப்படும் கடிதங்களில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும்.

நான்காம் நிலை :—அரசு செயலகத் துறைகளுக்கு எழுதப்படும் கடிதங்களில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும்.

முதல்நிலை *1963*-ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைகள் முறையே 1965, 1969-ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. 1971-ஆம் ஆண்டு, நான்காம் நிலை நடைமுறைக்கு வந்தது. திட்டமிட்டபடி 1973-ஆம ஆண்டிலேயே எல்லா மட்டங்களிலும் தமிழ்மொழி ஆட்சி மொழியாகப் பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் போதிய தட்டச்சுப் பொறிகள் இன்மையாலும் தமிழ்நாட்டில் உள்ள பல இ. ஆ. ப., (ஐ.ஏ.எஸ்.) இ.கா.ப., (ஐ.பி.எஸ்.) அலுவலர்கள் ஆட்சிமொழியைச் செயற்படுத்தத் தக்க அளவு தமிழ்மொழியை முழுமையாக அறியாதவர்களாக இருப்பதாலும் இத்திட்டம் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படாத ஒன்றாக இருந்து வருகிறது. இப்போது தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைப் பெறவும் இ.ஆ.ப.,(ஐ.ஏ.எஸ்), இ.கா.ப.,(ஐ.பி.எஸ்.) ஆகியோர்க்கும் தமிழ் தெரியாத பிற அலுவலர்களுக்கும் போதிய பயிற்சியளிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன.

**மொழி பெயர்ப்புப் பணி :**

தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் வகையில் இவ்வியக்கத்தில் மொழி பெயர்ப்புப் பணிக்கென ஒரு பிரிவு செயலாற்றி வருகிறது. ஆட்சிச் சொல் அகராதியின் முதற் பதிப்பு 1957-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பு 1962-ஆம் ஆண்டிலும், மூன்றாம் பதிப்பு 1971-ஆம் ஆண்டிலும் வெளியிடப் பெற்றன. நான்காம் பதிப்பைத் தொகுக்கும் பணி இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது. ஆட்சிச் சொல் அகராதிக்கு மறுபதிப்பு வெளியிட முனையும்போது சேர்ப்பு, திருத்தம் ஆகியவை குறித்து உரியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளியிடப்பட இருக்கும் நான்காம் பதிப்பானது முந்தைய மூன்றாம் பதிப்புக்களின்றும் மாறுபாடான முறையில் வெளிவர உள்ளது. முந்தைய மூன்று பதிப்புகளிலும் சொற்கள், பொருள் தொடர்பு அடிப்படையில் தொகுக்கப்பட்டன நான்காம் பதிப்பில் சொற்கள் முற்றிலுமாக அகராதி அடிப்படையில் (Dictionary pattern) தொகுக்கப்பட்டுள்ளன. இதனால் அகராதியானது பயன்பாட்டிற்கு எளிதாக அமையும்.

## என் பேரை மாற்றி அழையுங்கள்!

இந்த நிமிஷத்தில் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்தில் பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் அறிவொளி சற்றே மங்கி இருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது; இந்த நிமிஷம் சத்தியம் இல்லை. நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால், என் பேரை மாற்றி அழையுங்கள்.

—சுதேசமித்திரன் பத்திரிகையில் பாரதியார் எழுதியது (1916)

## ஒருமைப்பாடு ஏற்பட....

தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங் கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலுங்கூடப் பல அறிஞர் இருந்தனர்-இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது. இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமானால், சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.

—காந்தியடிகள்

**சிறப்புச் சொல் துணையகராதி :**

ஆட்சிச் சொல்லகராதியில் பொதுவான ஆட்சிச் சொற்களே இடம் பெற்றுள்ளமையால் அந்தந்தத் துறையில் எடுத்தாளப்பெறும் சிறப்புச் சொற்களுக்குத் தமிழாக்கங்கள் அளிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது எனக் கண்டறியப்பட்டது. அம்முறையில் ஒவ்வொரு துறைக்கும் சிறப்புச் சொல் துணையகராதி ஒன்று தயாரித்து வெளியிடப் பெற்றது. சிறப்புச்சொல்துணையகராதிக்கான பட்டியல்கள் அந்தந்தத் துறைகளிடமிருந்து துறைகளின் வழக்கிலுள்ள, தமிழாக்கங்களுடன் பெறப்பட்டுத் துறைகளின் அலுவலர்களின் தொழில் நுணுக்கச் சொற்களின் பயன்பாடு தொடர்பாகக் கலந்துரையாடி இயக்கக மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர்களால் ஆய்ந்து, அறுதியிடப் பெறுகின்றன. அறுதியிடப் பெற்ற பட்டியல்கள் துறையின் ஏற்புக்குப் பின்னர் துணை அகராதிகளாக அச்சிடப் பெற்றுத் துறைகளுக்கு வழங்கப் பெறுகின்றன. இவ் வகராதிகள் காலந்தோறும் புதுக்கியும், சேர்த்தும் வெளியிடப் பெறுகின்றன.

**துறை நூல்கள் மற்றும் படிவங்கள் மொழி பெயர்ப்பு ;**

பல்வேறு துறைகளிலிருந்தும் படிவங்கள், பதிவேடுகள், அலுவலக நடைமுறை நூல்கள், தொகுப்புகள் போன்றவை பெறப்பட்டுத் தமிழ்வளர்ச்சி இயக்ககத்தால் மொழிபெயர்த்தனுப்பப்பட்டு வருகின்றன. 1976-ஆம் ஆண்டில் சட்ட ஆட்சிமொழி ஆணையம் (Official Language (Legislative) Commission) திருத்தி அமைக்கப்பட்டதனையடுத்து, சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புக் குறித்த பணியானது சட்ட ஆட்சிமொழி ஆணையத்திடம், ஒப்படைக்கப்பட்டது. பின்னர் துறைகளின் தேவைக்கேற்ப மொழி பெயர்ப்புகளை அளிக்க வேண்டியதன் காரணமாக மைய, மாநிலச் சட்டங்களின்கீழ் இயற்றப்பட்ட விதிகளை மொழி பெயர்க்கும் பணியானது தமிழ் வளர்ச்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

**சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் :**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்னும் பாரதியாரின் கருத்தை நிறைவேற்றும் வகையில் பிறமொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழ்மொழியிலும், தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களைப்பிற மொழிகளிலும் தக்காரைக் கொண்டு மொழி பெயர்க்கும் பணியும் இவ்வியக்ககச் சார்பில் நடைபெற்று வருகின்றது.

கீழ்க்கண்ட ஆறு நூல்கள் மொழி பெயர்ப்பில் அச்சிட்டு வெளிவரும் நிலையில் உள்ளன.

1. Prophet
2. Gnanaratham
3. Pathirupathu
4. Squirrel in the courtyard
5. Dance of Shiva
6. 100 Poems of Soviet Literature.

**ஊக்கத் திட்டங்கள் : (Incentive Schemes)**

*1.* அரசுச் செயலகம், *2.* அரசுத் துறைகள், *3.* சென்னை மற்றும் மதுரை மாநகராட்சி, *4.* நகராட்சிகள் மற்றும் நகரியங்கள், *5.* ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி நகரியக் குழுக்கள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களைச் சிறந்த வரைவுகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தமிழில் எழுதுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் பணப்பரிசுத் திட்டம் (cash award schemes) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்பரிசு ரூ.500, இரண்டாம் பரிசு ரூ. 300, மூன்றாம் பரிசு ரூ. 200 என மேற்கண்ட ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழில் தேர்ச்சி பெற்றுள்ள தட்டச்சர்களுக்கும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கும் அவர்களது தேர்ச்சி நிலைக்கேற்ப ரூ. 20-லிருந்து ரூ. 125 வரை சிறப்புச் சம்பளம் (special pay) அளிக்கப்பட்டு வருகிறது. தமிழைச் சிறந்த முறையில் பயன்படுத்திய துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் மாவட்டப் பகுதிகளிலுள்ள மாவட்ட நிலை அலுவலகங்களுக்கும் ஆண்டுதோறும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**நிலவியல் பெயர்களுக்கு எழுத்துக் கூட்டல் வழங்கல் :**

மாற்றார் ஆட்சியின் ஆதிக்கத்துடன் வேற்றுமொழியின் ஆதிக்கமும் தொடர்ந்து பரவி, வட்டார மொழிகளைச் சிதைத்ததன் காரணமாக நிலவியல் (Geographical names) பெயர்கள் பல உருக்குலைந்தன. அவற்றைத் திருத்தியமைக்கும் வகையில் சரியான தமிழ் எழுத்துக் கூட்டலை வழங்கும் பணி தமிழ் வளர்ச்சித் துறையைச் சார்ந்தமைந்துள்ளது. அஞ்சல் நிலையங்களுக்கும், இருப்பூர்தி நிலையங்களுக்குமான பெயர்களுக்குரிய முறையான எழுத்துக் கூட்டல்களும் இவ்வியக்ககத்தால் அளிக்கப்பட்டு வருகின்றன.

(எ. கா.) ''கல்லார்'' என வழங்கப் பெற்ற ஊரின் பெயர் பொருத்தமற்றதாக இருந்தது. 'கல்லார்' எழுத்தறிவற்றோர் (Illiterate) எனப்பொருள் படும். 'கல்லாறு' என்பதே பொருத்தமாகும். அடையார் -Won't reach- அடையமாட்டார்கள் எனப் பொருள்படும் 'அடையாறு' எனத் திருத்தப் பெற்றது.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி
## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

| | | |
|---|---|---|
| Tiruchinopoly | திருச்சிராப்பள்ளி | Tiruchirapalli |
| Tanjore | தஞ்சாவூர் | Thanjavur |
| Porte Novo | பரங்கிப்பேட்டை | Parangipettai |
| Chinglepet | செங்கல்பட்டு | Chingalpattu |
| Mahabalipuram | மாமல்லபுரம் | Mamallapuram |
| Tinnanur | திருநின்றவூர் | Thiruninravur |
| Point Calimere | கோடிக்கரை | Kodikarai |
| Coleroon | கொள்ளிடம் | Kollidam |

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 1968-ஆம் ஆண்டில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னை மாநகரில் பெரும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இம்மாநாட்டினையொட்டி வான்புகழ் கொண்ட வள்ளுவன் தந்த திருக்குறளைப் பல்வேறு கோணங்களில் ஆய்வதற்குரிய நிலையில் சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சி இருக்கைகள் தோற்றுவிக்கப்பட்டன.

**சிறந்த நூல்களுக்குப் பரிசளிப்பு :**

தமிழில் சிறந்த நூல்களை வெளிக்கொணர வேண்டும் என்னும் சீரிய நோக்கத்தோடு ஆண்டுதோறும் வெளியிடப்படும் நூல்கள் இருபது பொருள்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு பொருளிலும் சிறந்த நூலினைத் தேர்ந்தெடுத்து முதற்பரிசாக

ரூபாய் இரண்டாயிரமும் இரண்டாம் பரிசாக மற்றொரு நூலுக்கு ரூபாய் ஆயிரமும் அளிக்கப் பெறுவதுடன் அத்தகைய நூலை வெளிக் கொணர்ந்த அச்சகத்தார்க்குச் சான்றிதழ் வழங்கும் பணியும் இவ்வியக்ககத்தால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி :**

தமிழ்மொழியில் சிறந்த நூல்களை யாத்து நூலினை வெளியிடும் பொருள் தோது இல்லாத நூலாசிரியர்களுக்கு அந்நூலை வெளியிடுவதற்காகும் செலவில் பாதியையோ ரூபாய் ஐயாயிரத்தையோ தந்து தமிழ் மொழியில் புதுநூல்கள் வெளிவருவதற்கு உறுதுணை புரிகிறது.

**வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு நிதியுதவி :**

தமிழ் வளர வேண்டுமானால் தமிழ் அறிஞர்கள் வளமாக வாழ முடியாவிட்டாலும், வறுமையின்றியேனும் வாழ வேண்டும் என்னும் நல்ல நோக்கோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்நிதியுதவி அறிவிக்கப்பட்டு இத்துறையின் சார்பில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வறுமையால் வாடும் தமிழறிஞர்கள் முப்பதின்மர்க்கு திங்கள் தோறும் ரூபாய் 250 வீதம் இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதியளிக்கப்பட்டு வருகிறது.

பாவேந்தர் பாரதிதாசனார் நினைவாகத் தமிழகக் கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 10,000, தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் நினைவாகப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று ரூ. 10,000 வழங்கி வரும் பணியினையும் தமிழக அரசின் சார்பில் இத்துறை மேற்கொண்டுள்ளது.

**400 அல்ல**

புறநானூறு என்னும் நூல் நானூறு பாடல்களைக் கொண்டது என்றுதான் பலரும் எண்ணி வருகிறார்கள். உண்மையில் அந்நூலில் 398 பாடல்கள்தான் உள்ளன. 267-வது பாடலும் 268-வது பாடலும் கிடைக்கவில்லை.

**398**

**பிற மாநிலங்களுக்கு நிதியுதவி :**

இந்தியத் திருநாட்டில் பல்வேறு மாநிலங்களிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளைத் தோற்றுவித்துத் தமிழ்மொழியைப் பரப்புவதோடு இருபது பல்கலைக் கழகங்களுக்கு ஆண்டுதோறும் தமிழக அரசு நிதியுதவி அளித்துப் பட்டய வகுப்புகளும், சான்றிதழ் வகுப்புகளும் நடத்தப் பெற ஆவன செய்யப்பட்டு வருகிறது.

**தமிழ்நாட்டு வரலாறு எழுதும் குழு :**

தமிழ் வரலாற்றினை முறையாகவும், முழுமையாகவும், அறிந்தாலன்றி அந்நாட்டு மக்களின் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை முழுமையாக அறிந்துகொள்ள இயலாது. எனவே, தொல்பழங்காலம் தொட்டு இன்று வரையில் உள்ள தமிழக வரலாற்றினை முறையாக எழுதி வெளியிட வேண்டும் என்னும் நல்ல நோக்குடன் தமிழ்நாடு வரலாறு எழுதும் குழு ஒன்று இவ்வியக்ககத்தில் அமைக்கப் பெற்றுச் செயலாற்றிக் கொண்டு வருகிறது. அது 'தொல் பழங்காலம்' என்னும் தொகுதியை வெளியிட்டிருக்கிறது. சங்க காலம் என்னும் பகுதி இரு மடலங்களாக மிக விரைவில் வெளிவர அது உழைத்துக் கொண்டிருக்கிறது.

**தமிழ்நூல் விவர அட்டவணை :**

தமிழில் வெளியிடப்படும் நூல்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட பின்னர் ஆவணக் காப்பகத்தில் பதிவு செய்யப்பட்ட காலமுறை அடிப்படையில் கட்டுக் கட்டாக கட்டிப் பேணப்படுகின்றன. ஆனால் அக்கட்டுகளில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியான நூல்கள் இலக்கியம், இலக்கணம், சோதிடம், கதை, வரலாறு, மருத்துவம் போன்ற பொருள் பாகுபாடின்றி, கால அடிப்படையிலேயே உள்ளன. எந்தக் கட்டில் எந்த நூல் உள்ளது என்று ஆராய்ச்சியாளர்களால் அறிய முடிவதில்லை. எனவே அவை ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுவதில்லை. அவற்றை இவ்வியக்ககம் பெற்றுப் பொருள் அடிப்படையில் பாகுபாடு செய்து அச்சிட்டுத் தமிழ் நூல் விவர அட்டவணை என்னும் பெயரில் வெளியிட்டு வருகிறது.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்

ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

■ **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

■ **கிராம ஏற்புத் திட்டம்:**

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

■ **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

■ **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

## எழுத்துச் சீர்திருத்தம் :

ஒரு மொழி பேசுவோரின் எழுத்தறிவு அந்த மொழியில் ஆளப்படும் எழுத்து வடிவத்தினைப் பெரிதும் சார்ந்திருக்கின்றது என்ற உண்மையை எவரும் மறந்து விடலாகாது. இயற்கையோடு இயைந்து எளிமையாகப் பொருள் விளங்கும் வகையில் ஒலி அமைப்பினைக் கொண்டிராதமொழி நாளடைவில் இறந்து விடுகின்றது. ஒலி நுட்பத்துக்கேற்ற வகையில் எளிய வரி வடிவத்தினைப் பெற்றிராத எழுத்து முறையும் காலப் போக்கில் மக்களால் கைவிடப்படுகின்றது. இலத்தீன், கிரீக், சமக்கிருதம் போன்ற மொழிகள் இன்று வழக்கு வீழ்ந்துள்ளன. எண்ணிக்கையில் குறைந்து எழுதுவதற்கும், அச்சு, தட்டச்சு செய்வதற்கும் மிகவும் எளிமையாக இருக்கும் வரி வடிவங்களைக் கொண்ட உரோமன் எழுத்து முறையை இன்று உலக நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்று முன்னேற்றம் எய்தி வருகின்றன.

தமிழ்மொழியிலுங்கூட மூல எழுத்தொலிகள்-

எழுத்தெனப் படுவ
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப (தொல்-எழுத்து)

என்று சொல்லப்பட்டாலும் நடைமுறையில் 247 வரி வடிவங்களை ஒருவர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காலத்திற்குக் காலம் நம் தமிழ் எழுத்துருவங்கள் மாற்றங்கள் பெற்று வந்துள்ளன.

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்த வீரமா முனிவரின் பார்வை அன்று தலையில் புள்ளியைத் தாங்கிக் கொண்டிருந்த எ, ஒ, மீது படிந்தது. வீரமாமுனிவர் தமிழ் மண்ணில் அடியெடுத்து வைக்கும் வரையில் தமிழர்களின் எழுத்து முறையில் 'எகர, ஏகார, ஒகர, ஓகார வடிவங்களிடையே வேற்றுமை காணவும் வழியில்லாத ஒரு தெளிவற்ற நிலையே நீடித்தது.

மெய்யெழுத்துக்களை அவற்றின்தலையில் காணும் புள்ளிகளைக் கொண்டு அகர உயிர்மெய் எழுத்திலிருந்து அடையாளம் கண்டு கொள்வது போன்று எகர, ஒகர, உயிர்க் குறில்களையும், அவற்றின் தலையில் உள்ள புள்ளிகளைக் கொண்டு, புள்ளியில்லாமல் எழுதப்பட்டு வந்த, எகார, ஒகாரநெடில் வடிவங்களினின்று பிரித்தறிதல் வேண்டும்.

எ ஒ ... நெடில்

எ் ஒ் ... குறில்

குறில் வளர்ந்து நெடிலாவதுதான் தமிழ் நெறி. ஆனால், குமரனைக் குழந்தையாக்குவது போன்று நெடில் வடிவங்களுடன் புள்ளி சேர்த்துக் குறில் வடிவங்களை அமைப்பது தமிழ் நெறிக்குப் புறம்பானது என்பதனை உணர்ந்தார் வீரமாமுனிவர். அவர் எகர ஒகரத்தில் தலைச் சுழிய மாற்றி, எகார, ஒகார உருவங்களுக்கு முறையே கீழ்க்கோடும் சுழியும் சேர்த்து எ. ஏ., ஒ. ஓ. என எழுதும் முறையை உருவாக்கி— உயிர் எழுத்துக்களுக்குப் புள்ளியிட்டு வந்த கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

வீரமாமுனிவர் வழியிலே பெரியார் செய்துள்ள எழுத்துச் சீர்திருத்தம் மேலும் ஒரு படி உயர்ந்ததாகும். ஒட்டிக் கொண்டிருந்த எழுத்துக்களைப் பிரித்து எழுத வகை செய்தார் பெரியார். பெரியாரின் அத்தகைய எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழ்நாடு அரசு, ஏற்று நடைமுறைப்படுத்தும் வகையில் பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது ஆணையிட்டது.

தந்தை பெரியார் அவர்களின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஏதோ அச்சு, தட்டச்சு, தொலையச்சு போன்ற பொறிகளை மனத்திற்கொண்டு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்து முழுமையானதாகாது. தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்தை அடித் தளமாகக் கொண்டு வளர்ந்து வரும் அறிவியலுக்கும் ஆட்சிமொழி செயலாக்கத்திற்கும், மொழி வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் மேலும் சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஒரு குழு இவ்வியக்கத்தின் சார்பில் உள்ளது.

பொதுவாக இத்துறை தமிழக அரசின், 'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்' என்னும் கொள்கையை முழுமையாக நிறைவேற்றிப் பொது மக்களுக்கும் அலுவலர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்க முயல்வதுடன் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பல்வேறு வகையில் தொண்டாற்றி வருகிறது.

---

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
ஆரியம் போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—'மனோன்மணீயம்'
பெ. சுந்தரம் பிள்ளை.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

* * *

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா.

* * *

சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.

* * *

தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்.

—மகாகவி பாரதியார்

# பழந்தமிழ் இலக்கியங்கள்







**நூல் பெயர்**

1. எட்டுத்தொகை
2. புற நானூறு
3. பதிற்றுப் பத்து
4. பரிபாடல்
5. அக நானூறு
6. நற்றிணை
7. குறுந்தொகை
8. ஐங்குறுநூறு
9. கலித்தொகை
10. திருமுருகாற்றுப்படை
11. பொருநராற்றுப்படை
12. சிறுபாணாற்றுப்படை
13. பெரும்பாணாற்றுப்படை
14. முல்லைப்பாட்டு
15. மதுரைக்'காஞ்சி
16. நெடுநல்வாடை
17. குறிஞ்சிப்பாட்டு
18. பட்டினப்பாலை
19. மலைபடுகடாம்
20. திருக்குறள்
21. சிலப்பதிகாரம்
22. மணிமேகலை
23. நாலடியார்
24. நான்மணிக்கடிகை
25. இனியவை நாற்பது
26. இன்னா நாற்பது
27. கார் நாற்பது
28. களவழி நாற்பது
29. ஐந்திணை ஐம்பது
30. திணைமொழியைம்பது
31. ஐந்திணையெழுபது
32. திணைமாலைநூற்றைம்பது
33. திரிகடுகம்
34. ஆசாரக்கோவை
35. பழமொழி
36. சிறுபஞ்சமூலம்
37. இன்னிலை
38. முதுமொழிக்காஞ்சி
39. ஏலாதி
40. குண்டலகேசி
41. சித்தாந்தத் தொகை
42. திருப்பதிகம்
43. விம்பசாரக் கதை
44. வளையாபதி
45. பெருங்கதை
46. நீலகேசி
47. சூளாமணி
48. உதயணகுமார காவியம்
49. யசோதர காவியம்
50. சீவகசிந்தாமணி
51. நரி விருத்தம்
52. மேருமந்தரபுராணம்
53. திருமந்திரம்

**ஆசிரியர்**

400 புலவர்கள்
பல புலவர்கள்
—
—
—
175 புலவர்கள்
204 புலவர்கள்
5 புலவர்கள்
—
நக்கீரர்
முடத்தாமக்கண்ணியார்
நல்லூர் நத்தத்தனார்
கடியலூர் உருத்திரங் கண்ணனார்
பொன் வணிகனார் மகனார் நப்பூதனார்
மாங்குடி மருதனார்
மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார்.
கபிலர்
கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
பெருங்கௌசிகனார்
திருவள்ளுவர்
இளங்கோவடிகள்
கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
சைனமுனிவர்
விளம்பிநாகனார்
பூதஞ்சேந்தனார்
கபிலர்
மதுரைக் கண்ணங் கூத்தனார்
பொய்கையார்
மாறன் பொறையனார்
கண்ணஞ்சேந்தனார்
மூவாதியார்
கணிமேதாவியார்
நல்லாதனார்
பெருவாயின் முள்ளியார்
முன்றுறையரையனார்
காரியாசான்
பொய்கையார்
மதுரைக்கூடலூர் கிழார்
கணிமேதையார்
—
—
—
—
—
கொங்குவேள்
—
தோலாமொழித்தேவர்
—
—
—
திருத்தக்கதேவர்
வாமனாசாரியார்
திருமூலர்





# தமிழரசு

தமிழ்நாடு அரசின்
திங்களிருமுறை ஏடு

# 1981 நாட்காட்டி

**ஜனவரி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**பிப்ரவரி**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| × | × | × | × | × | × | × |

**மார்ச்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | × | × | × | × |

**ஏப்ரல்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | × | × |

**மே**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 31 | × | × | × | × | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**ஜூன்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | × | × | × | × |

**ஜூலை**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | × |

**ஆகஸ்ட்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | × | × | × | × | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**செப்டம்பர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | × | × | × |

**அக்டோபர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**நவம்பர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | × | × | × | × | × |

**டிசம்பர்**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| × | × | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | × | × |

# இந்தியப் பல்கலைக் கழகங்களில் தமிழ் வளர்ச்சி

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்

இயக்குநர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்:

திரை கடல் ஓடிய தமிழர்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கங்கையையும் கடாரத்தையும் கொண்ட தமிழர்கள் உலகம் முழுவதும் சென்று வாணிபம் நடத்தி மொழியையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அதனுடைய எச்சங்களாக இன்று இலங்கையிலும், மலேயாவிலும், ஃபிஜியிலும், மொரிசியசிலும், அதே போன்று யூனியன் போன்ற பகுதிகளிலும் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறே உலகம் முழுவதும் பரந்த தமிழர்கள் தமிழகத்தில் இருந்து இந்தியா முழுவதும் பரந்து இருப்பதில் வியப்பு இல்லை.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று வழங்கப்பெற்ற தமிழ் நிலப் பகுதியில் சிறந்து ஒளிர்ந்த தமிழ்மொழி உலகெலாம் பரவியது. தமிழின் பெருமையை உணர்ந்த பிறநாட்டவரும் அதனைக் கற்றுத் தேர்ச்சி பெற்று புலமை எய்தியமையை வரலாறு வகையுறத் தெரிவித்துவருகிறது. ஒரு காலத்தில் இந்தியத் துணைக் கண்டம் முழுதும் தமிழ்மொழி பரவியிருந்தது என ஆராய்ச்சியாளர் கொண்டிருக்கும் கருத்துக்கு இன்றும் அரணாகத் திகழ்கிறது, பிறமாநிலங்களின் பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி பயிற்றுவிக்கப் பெறும் இனிய செய்தி.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ்க் கல்வியும் வளர்ந்து வருகின்றது. சுமார் 10ஆம் நூற்றாண்டிற்கு முன்பு தென்மாநிலங்கள் அனைத்திலும் தமிழ்மொழி மிகுதியாகப் பரந்து இருந்தது. 1956-இல் மொழி வழி மாகாணம் பிரிக்கப்பட்டபின்பு தமிழர்கள் சிறு பான்மையினர் என்ற நிலையில் எல்லா மாநிலங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள். குமரியில் இருந்து இமயம் வரை தமிழ்க் கல்வி வளர்ந்துவருவதைப் பார்க்கின்றோம்.

தமிழகத்தில் இருக்கின்ற பல்கலைக் கழகங்களில் தமிழில் வளர்ச்சி இருப்பது இயல்புதான். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகம் போன்றே தொடங்கப்பட்ட பல்கலைக் கழகம். அங்கு தமிழ்த் துறையில் பல பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே போன்றுதான் சென்னைப் பல்கலைக் கழகமும் மதுரைப் பல்கலைக் கழகமும் இயங்கி வருகின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த் துறை உண்டு.

அண்டை மாநிலங்களான கேரள மாநிலத்தில் தமிழ் வளர்ச்சி மிகுதியாக அமைந்துள்ளது. முதல் வகுப்பு முதல் பி.எச்.டி. பட்டம் வாங்கும் அளவுக்கு தமிழ்க் கல்வி உண்டு. பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கின்றார்கள். தமிழுக்கும் தனிப் பள்ளிகள் உள்ளன.

பல்கலைக் கழக நிலையில் சிறப்புத் தமிழ் புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு, முதுகலை வகுப்புகள் ஆகியவை அமைகின்றன. கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக வையங்கார் ,வையாபுரிப்பிள்ளை போன்றோர் இருந்து தமிழ் வளர்த்த துறை. அங்கு இப்போது முதுகலை வகுப்பும் எம்.ஃபில் வகுப்பும், டாக்டர் பட்டம் பெறுவதற்கும் வேண்டிய வசதிகள் இருக்கின்றன. ஏறத்தாழ 30 பேருக்குமேல் அங்கு டாக்டர் பட்டம் பெற்று இருக்கிறார்கள்.

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் சங்க இலக்கியங்கள் அனைத்திற்கும் 'சொல் அடைவு' தயாரிக்கப்பட்டு பல சொல் அடைவுகள் வெளிவந்துள்ளன. பல முதுகலை வகுப்புக்குரிய ஆய்வு ஏடுகளும் வெளிவந்து உள்ளன. சான்றாக புற

தமிழினைப் போற்றுதும் தாய்தமிழ் போற்றுதும்
தாயைச் சேய்பேணல் தலையறநம் மெல்லவர்க்குந்
தாய்தமிழே யாமாத லால்

தென்மொழி போற்றுதும் தீந்தமிழ் போற்றுதும்
தாயிற் சிறந்தம்மம் தானாம் வாழ்நாளெல்லாம்
ஆய்சுவை யோடளித்த லால்

தொன்மொழி போற்றுதும் சொற்றமிழ் போற்றுதும்
போனகமாய்த் தாரகமாய் போக்கியமாய் நாமார
வானமுதின் மேலினிந்த லால்

—நாவலர் சோமசுந்தர பாரதியார்

# நஞ்சை, புஞ்சை இரு நில விவசாயத்திற்கும் ஏற்றது.

## டிஸக் கலப்பை

உங்கள் உழவுத் தொழிலை நீங்கள்
உட்கார்ந்தபடியே செய்ய உதவும்.
30 அங்குல அகலமும் 8 அங்குல ஆழமும்
உழக்கூடியது.

புவனு



**மினிடில்லர்**
நான்கு டிஸ்க்குகள்
இணைக்கப்பட்டது

விவரங்களுக்கு:

**புவனு அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன்**

72, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

S.R.A.A.

நானூறு, அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களுக்குரிய சொல் அடைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதே போன்று பாலை பாடிய இளங்கோ, தமிழில் அம்மானைப் பாடல்கள், 20ல் சிறுகதைகள், தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. இது அங்கு நடைபெறும் தமிழ் வளர்ச்சியைக் காட்டுகின்றன. பிற மாநிலங்களில் இருக்கின்ற தமிழ்த்துறைகளில் முதல் நிலைத் துறையாக இதைக் கொள்ளலாம்.

கேரள மாநிலத்தில் கள்ளிக்கோட்டைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் சித்தூர் அரசினர் கல்லூரியில் தமிழ் முதுகலை வகுப்பு நடைபெற்று வருகிறது. அதோடு புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு ஆகியவற்றில் சிறப்புத் தமிழ் உண்டு. ஒரு காலத்தில் சித்தூர், பாலக்காடு போன்ற பகுதிகள் தமிழகத்தைத்தான் சார்ந்து இருந்தன. இப்போது தான் அவை கேரள மாநிலத்தில் உள்ளன. தமிழ்க் கல்விக்குரிய எல்லா வசதிகளும் அங்கு இருக்கின்றன. அங்கும் ஆய்வு செய்வதற்குரிய வாய்ப்புகளும் உள்ளன.

மைசூர் மாநிலத்தில் ஏற்கனவே பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வி இருந்து வருகிறது. மைசூர் பல்கலைக் கழகத்தைக் காட்டிலும் பெங்களூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்விக்குரிய சூழ்நிலை மிகுதியாக அமைந்து உள்ளன. அங்கு புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு மாணவர்கள் ஆயிரம் பேருக்கு மேல் படித்து வருகின்றார்கள். ஆனால் முதுகலை வகுப்பு அங்கு இல்லை. தமிழில் ஆய்வு செய்வதற்குரிய சூழ்நிலை அங்கு தற்போது இல்லை.இவை வரும் என நம்புகிறோம்.

மைசூர் நகரத்தில் 'இந்திய மொழிகளின் மைய நிறுவனம்' அமைந்து உள்ளது (சென்ட்ரல் இன்சிடியூட் ஆஃப் இண்டியன் லாங்வேஜஸ்). இந்நிறுவனத்தில் இந்திய மொழிகள் அனைத்தும் கற்பிக்கப்படுகின்றன. தாய் மொழி அல்லாதவர்கள் அனைவருக்கும் அங்கே தமிழ் கற்பித்து வருகிறார்கள். அங்கே தமிழ் வளர்வதற்கு உரிய நல்ல சூழ்நிலை அமைந்துள்ளது. மைசூர் மாநிலத்தில் தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் பயில நல்ல வாய்ப்பு உள்ளது. கோலாரில் உரிகமில் முதுநிலைக் கல்லூரி ஒன்று அமைந்து உள்ளது. அதுபோக பெங்களூரில் அரசாங்கக் கல்லூரிகள், நிஜலிங்கப்பா கல்லூரி, கிறித்துவக் கல்லூரி, தூய பிலோமினா கல்லூரி போன்ற 24 கல்லூரிகளில் தமிழ் படிப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஏற்கனவே கூறியபடி அங்கே பி. எஸ்ஸி, பி.காம்., போன்ற வகுப்புகளில் தமிழ் கற்பிக்கப்படுகின்றன.

தார்வார் கர்நாடக மாநிலத்தில் எம்.ஏ. கன்னடம் படிப்போரும் மொழி இயல் துறை, நாட்டுப்புற இயல் துறை படிப்போரும் தமிழ் கற்பதற்குரிய சூழ்நிலை அமைந்துள்ளது. அதே போன்று மைசூரில் உள்ள கன்னடத்துறையில் தமிழ் கற்பதற்குரியவாய்ப்பு உண்டு. தமிழ் கற்பிக்கின்றார்கள். இது போன்று பிற மாநிலங்களில் உள்ள தமிழ்த் துறைகள் அந்தந்த மாநிலமொழிகளோடு தமிழ் மொழியை இணைத்துப் பார்ப்பதற்கும், இலக்கியங்களை ஒப்பீடு செய்வதற்கும் நல்ல வாய்ப்பு உண்டு. அதை அங்குள்ள தமிழர்கள் செய்வார்களேயானால் மிகுந்த பயனாக அமையும்.

ஆந்திர மாநிலத்தில் தமிழ்க் கல்விக்கு நிரம்ப வாய்ப்புகள் உண்டு. அடுத்து இருக்கின்ற திருப்பதியில் அமைந்துள்ளது - திருவேங்கடவன் பல்கலைக் கழகம். அப்பல்கலைக் கழகத்தில் முதுகலை, பிஎச். டி. பட்டத்திற்குரிய வாய்ப்புகள் அமைந்துள்ளன. நல்ல பேராசிரியர்களைக் கொண்டு செயல் படுகின்ற வேங்கடவன் பல்கலைக் கழகம் தமிழுக்கு நல்ல தொண்டு செய்து வருகிறது. அத்துடன் ஆண்டிற்கு ஒரு முறை சிறந்த கருத்தரங்கு நடத்தி வருகின்றது. பல மாநிலங்களில் இருக்கின்ற தமிழ் அறிஞர்களை அழைத்து அதன் வாயிலாக அங்கு கற்கின்ற முதுகலை மாணாக்கருக்குப் பயன்படும் வகையில் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. பல தமிழ் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் சித்தூர், புத்தூர், நகரி போன்ற இடங்களில் உள்ள அரசினர் கல்லூரிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

ஆந்திர மாநிலத்தில் ஹைதராபாத்தில் அமைந்துள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலை கற்பதற்கும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்வதற்கும் உரிய சூழ்நிலை அமைந்துள்ளது. 10 ஆண்டுகளாக தமிழ் முதுகலை வகுப்பு நடத்தி வருகிறார்கள்.

வால்டரிலும், ஆந்திரா பல்கலைக் கழகத்திலும் தற்போது தமிழ் கற்பிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஏறத்தாழ 10 இடங்களுக்குமேல் தென் இந்திய மொழிப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. அதனை மூன்று நிலைகளில் பிரித்துக் கொள்கிறார்கள். ஓர் ஆண்டு, சர்டிபிகேட் வகுப்பு எனவும், இரண்டு ஆண்டு கற்பதை டிப்ளமோ வகுப்பாகவும், மூன்று ,நான்கு ஆண்டுகள் கற்கின்ற கல்வியினை உயர்நிலை வகுப்பாகவும் கொண்டு அவற்றிற்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் பல பகுதிகளில் தமிழ்க் கல்வி அமைந்துள்ளது பாராட்டத்தக்கது.

அலகாபாத் பல்கலைக் கழகத்தில் இந்தித் துறை

## சிற்றிலக்கிய வகை எத்தனை?

தமிழ் இலக்கியத்தில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்) வழக்கில் உள்ளன என்று சொல்லப்படுகிறது; ஆனால் பாட்டியல் நூல்கள் ஒவ்வொன்றும் இக்கருத்தில் மாறுபட்டு நிற்கின்றன.பன்னிரு பாட்டியல், பிரபந்தங்கள் 62 என்றும், வெண்பாப் பாட்டியல் 53 என்றும், நவநீதப் பாட்டியல் 45 என்றும்,பிரபந்த மரபியல் 63 என்றும், சிதம்பரப் பாட்டியல் 59 என்றும், இலக்கண விளக்கப் பாட்டியல் 64 என்றும், தொன்னூல் விளக்க நூற்பாப்பகுதி 35 என்றும்; உரைப்பகுதி 56 ஆக மொத்தம் 91 என்றும், முத்துவீரியம் 90 என்றும், பிரபந்த தீபிகை 77 என்றும் சுவாமிநாதம் 37 என்றும், பிரபந்த தீபம் 97 என்றும் தெரிவிக்கின்றன.

யுடன் தமிழ்ப்பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அங்கும் சர்டிபிகேட் வகுப்புகளும், டிப்ளமோ வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இந்தி எம்.ஏ. பயிலும் மாணவர்கள் தமிழை விருப்பப் பாடமாகப் படிப்பதற்கு உரிய சூழ்நிலை அங்கு அமைந்துள்ளது.

பனாரஸ் இந்தியப் பல்கலைக் கழகத்தில் இந்தி மொழித்துறையில் தமிழ்ப் பகுதியும் ஒன்றாக அமைந்துள்ளது. அங்கு பி.ஏ., பி.எஸ்ஸி. பயிலுவோர் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிக்கிறார்கள். தத்துவத்துறைக்குப் பெயர்போன அப்பல்கலைக் கழகத்தில் தமிழ்நாட்டில் இருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைத்த சைவ சித்தாந்தச் சொற்பொழிவு செய்யப்படுவதும் உண்டு. அப்பல்கலைக் கழகத்தில் சமயக் கல்வியும் தத்துவக் கல்வியும் தமிழ் நிலையில் வளர்ந்து வருகிறது என்றும் கொள்ளலாம்.

லக்னோ பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்கு இந்தித் துறையுடன் அமைந்த தமிழ்ப் பகுதி உள்ளது. அதில் முதல் நிலை, இரண்டாம் நிலை நடைபெற்று வருகின்றன. இளங்கலை, முதுகலை தமிழ் வகுப்புகள் நடத்த வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவில் மிகுதியாகக் கற்றவர்கள் வாழ்கின்ற கல்கத்தா நகரில் உள்ள கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தனித்து அமைந்துள்ளது அங்கு இளங்கலை, புகுமுக வகுப்பு போன்ற வகுப்புகளில் தமிழ் கற்பிக்கின்றார்கள். பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் தமிழ் கற்பித்துவருவது குறிப்பிடத்தக்கது

அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் 1969-இல் தமிழ்த்துறை தொடங்கப் பட்டது இப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதியும் பிற இந்திய மொழிப் பகுதியும் இந்தித் துறையுடன் இணைக்கப்பட்டு உள்ளன. தமிழில் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இளங்கலை சிறப்பு வகுப்பில் தமிழ் பயில வாய்ப்பு உண்டு. முது கலை பயிலும் இந்தி மாணவர்கள் தமிழை விருப்பப்பாடமாக எடுத்துப் படிக்கின்றனர். அதற்குரிய பாடத்திட்டங்களும் வகுக்கப்பட்டு உள்ளன.

ஆக்ரா பல்கலைக் கழகத்தில் 'கன்ஹையா முன்ஷி இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தி ஸ்டடீஸ் அண்ட் லிங்குஸ்டிக்ஸ்' என்ற இந்தி நிறுவனத்தில் தமிழ் கற்பிக்கப் படுகின்றது. தமிழில் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடத்தப் படுகின்றன. இந்தி முதுகலை வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் மொழி இயலில் முதுகலை வகுப்புப் படிக்கின்ற மாணவர்களும் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துப் படிக்கின்றனர்.

> தமிழ் நம் ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்துவிட்ட மொழி; நாம்தான் அதை மறந்திருந்தோமே தவிர தமிழ் நம்மை மறக்கவில்லை.
>
> —பேரறிஞர் அண்ணா

பாட்டியாலாவில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் மொழி இயல் துறையை ஒட்டி இணைந்த தமிழ்ப் பகுதி அமைந்துள்ளது. எம்.ஏ. மொழி இயல் பயிலும் மாணவர்கள் திராவிட மொழியிலும் தமிழ் மொழியிலும் கற்றுவருகிறார்கள்.

பஞ்சாப் மாநிலத்தின் தலைநகராகிய சண்டிகாரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தென் இந்திய மொழித்துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. அங்கும் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இரண்டாவது மொழியாக இளங்கலை வகுப்பில் தமிழ் கற்க வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவின் தலைநகராகிய புதுடில்லியில் தமிழ் கற்கப் பல கல்லூரிகளும் கழகங்களும் அமைந்துள்ளன. டில்லிப் பல்கலைக் கழகத்தில் 1959-ல் தமிழ்த்துறை ஏற்படுத்தப்பட்டது. இளங்கலை வகுப்பில் தமிழ் பாடமாக அமைந்துள்ளது. பிறமொழியினருக்கு தமிழ் பயிற்றுவிக்க ஓர் ஆண்டு சர்டிபிகேட் வகுப்பும் தொடங்கப்பட்டது. முதுகலை இந்தி படிக்கின்ற மாணவர்கள் தமிழ் படிப்பதற்குரிய வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 1978-ல் முதுகலை வகுப்பு டில்லி பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டது. அது தொடர்ந்து நடந்து வருகிறது. டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்வதற்குரிய நிலை அங்கு அமைந்துள்ளது.

மலேசியத் தமிழ் இலக்கியங்கள் ஒரு சிறப்புப் பாடமாக அப்பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டுவருகிறது. பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதற்குரிய வாய்ப்புகள் அமைந்துள்ளன. அதனால் மிராண்டா கல்லூரி, லேடி ஸ்ரீராம் கல்லூரி போன்ற மகளிருக்கான கல்லூரிகளில் இளங்கலை வகுப்பில் இரண்டாவது பாடமாக தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. இக்கல்லூரிகளில் நிரம்பத் தமிழ் மாணவர்கள் தமிழ் கற்று வருகின்றனர். தயாள்சிங் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீவெங்கடேசுவரா கல்லூரி என்ற தென் இந்தியக் கல்லூரியில் 1961 முதல் இளங்கலை வகுப்பில் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. முதல் வகுப்பு முதல் டாக்டர் பட்டம் வரை நம் இந்தியத் தலைநகராகிய டில்லியில் தமிழ்ப் படிப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அமைந்துள்ளன.

அஸ்ஸாம் மாநிலத்தில் கௌஹாத்திப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி ஒன்று தனியாக அமைந்துள்ளது. அங்கு இரண்டாவது மொழியாகத் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது.

தனித்த சிறந்த பல்கலைக் கழகமாக அமைகின்ற 'சாந்திநிகேதன்' பல்கலைக் கழகத்தில் இந்தித் துறையுடன் தமிழ்ப் பகுதி இணைந்து • செயல்பட்டு வருகிறது. இங்கும் சர்டிபிகேட் டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் தனி மாநிலமாக அமைந்துள்ள புதுச்சேரி மாநிலத்திலும் காரைக்காலிலும் தமிழர்களே வாழ்கின்ற காரணத்தால் முதல் வகுப்பு முதல் முதுகலை வகுப்பு வரை தமிழ் கற்பிப்பதற்குரிய எல்லாச் சூழ்நிலைகளும் அமைந்துள்ளது.

மாஹேயில் உள்ள மகாத்மா காந்தி அரசினர் கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்பு, இளநிலை வகுப்பு ஆகியவற்றில் தமிழ் கற்பிக்கப்படுகிறது.

இந்தியா முழுவதிலும் பல பல்கலைக் கழகங்களும் தமிழ்க் கல்வி நடப்பதற்கும் மொழி வளர்ச்சி அடைவதற்கும் தமிழக அரசு பெரும் காரணமாக அமைகிறது. தமிழ் கற்பிக்கிற பிற பல்கலைக் கழகங்களுக்கு தமிழக அரசு ஆண்டொன்றுக்கு 15 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து வருகிறது. இது மிகவும் பாராட்டத்தக்கதொன்று.

திசையெலாம் பரவிய செழுந்தமிழ் இந்திய அரங்கில் பல்வேறு மாநிலங்களின் பல்கலைக் கழகங்களில் இடம்பெற்றுச் சிறந்தோங்குவது தமிழுக்கும் - தமிழ்நாட்டுக்கும் பெருமைதரும் செய்தியாகும். இந்திய நாட்டின் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இனிய தமிழ் இடம்பெறும் காலம் விரைவில் மலர்வதாக!

# மேன்மைத் தமிழ் வளர்த்த மேல்நாட்டு அறிஞர்கள்

## வீரமா முனிவர்

புலவர் தமிழ்ப்பித்தன்

இத்தாலி நாட்டில் உள்ள வெனிஸ் நகரில் கண்டல் போபெஸ்கி - எலிசபெத் பெஸ்கி என்னும் தம்பதியருக்கு 1680ல், மகனாகப்பிறந்தார் கான்ஸ்டென்டைன் ஜோசப் பெஸ்கி. இளமை முதலே கல்வியில் ஆர்வம் கொண்டு திகழ்ந்த அவர் ஏசுநாதரின் அறிவுரைகளை நன்கு படித்து ஆராய்ந்தார். அந்த உரைகளைப் பிறநாட்டு மக்களுக்கும் தெரிவிக்க விரும்பினார்; பிற நாடுகளில் சமயப்பணி புரியவும் அவருக்கு விருப்பம் ஏற்பட்டது.

இத்தாலி நாட்டு இலக்கியங்கள், உள நூல் யாவற்றையும் கற்றுத்தேர்ந்தார். பிரெஞ்சு, கிரீக்கு, எபிரேயம், போர்ச்சுகீசியம் ஆகிய மொழிகளையும் பயின்றார். 1710ல் தமது நாட்டை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். முதலில் கோவாவை அடைந்தார்; பின்னர் கேரளம் சென்று தமிழகம் வந்தார். தமிழகத்தில், தஞ்சை, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் எல்லாம் தங்கியிருந்து சமயப்பணி செய்தார். அக்காலத்தில் தமிழ்மொழி அவரைக் கவர்ந்தது. சுப்ரதீபக் கவிராயரிடத்தில் இருபது ஆண்டுகள் தமிழ் கற்றார். தெலுங்கு, வடமொழி ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்தார்.

தமிழின் அழகிலும் அருமையிலும் நெஞ்சம் பறிகொடுத்த பெஸ்கி, தமிழில் நூல்கள் எழுதும் அளவுக்கு வன்மை பெறத் தொடங்கினார்.

கம்பராமாயணம், சீவக சிந்தாமணி, திருக்குறள் ஆகிய இலக்கியங்களை ஊன்றிக் கற்ற அவர் ஆகிர்த மேரி சொல்லிய சூசையப்பர் வரலாற்றைத் தமிழில் காவியமாக்க முனைந்தார். அதுதான் 'தேம்பாவணி' ஆகும். இந்நூல் 36 படலங்களையும் 3615 விருத்தப் பாக்களையும் கொண்டது; பெருங்காப்பியத் தகுதிகள் அனைத்தும் பெற்றது. தமிழ் மரபு வழுவாது செல்வது, ஏசுநாதரின் வரலாற்றையும் கிறித்தவ சமயக் கொள்கையையும் எடுத்து இயம்புவது; பெஸ்கி அவர்களது பெரும் புலமைக்குச் சான்றாகத் திகழ்வது.

இந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அவர் அரங்கேற்றிய போது, சங்கப் புலவர்கள் அகமகிழ்ந்து, இவரது தமிழாற்றலை வியந்து சமய தத்துவத்தைப் பாராட்டியதுடன் வீரமாமுனிவர் என்னும் பட்டத்தையும் இவருக்கு வழங்கினர். அன்று முதல் இயற்பெயர் மறைந்து வீரமாமுனிவர் என்னும்பட்டப் பெயரே சிறந்து விளங்குகிறது.

கொள்ளிட நதியின் வடகரையில் ஏலாக்குறிச்சி எனும் ஊரில் மேரியம்மையின் ஆலயத்தை அமைத்து, அதனை அடைக்கல மாதா என்று அழைத்தார். அவ்விடத்திற்கு திருக்காவலூர் என்னும் பெயர் சூட்டினார். அடைக்கலமாதாவின் மீது பல்வேறு பாக்கள் புனைந்தார். அடைக்கல நாயகி வெண்கலிப்பா, அடைக்கல மாலை, திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை யழுங்கல் அந்தாதி என்னும் நூல்களை யாத்தார். போர்ச்சுக்கீசிய நங்கையரான கித்தேரி அம்மாள் சமயத்துறையில் ஆற்றிய தொண்டினை அறிந்த வீரமாமுனிவர் அவர் மீது 'கித்தேரியம்மன் அம்மானை' என்னும் நூலைப்பாடினார்.

தமிழ்மொழி, மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிமையாக இருக்கவேண்டும் என்று எண்ணிய முனிவர் உரைநடையை அறிமுகப்படுத்தினார். வேத ஒழுக்கம், வேதியர் ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களை எழுதினார். நகைச் சுவையும் அறிவூட்டலும் ததும்பும் வகையில் ''பரமார்த்த குரு கதை'' என்னும் நூலை எழுதினார்.

அகராதி என்னும் அமைப்பு அக்காலத்தில் தமிழில் இல்லை. நிகண்டு என்னும் பெயரில் செய்யுள்களின் வடிவில் தான் அகராதி இலங்கி வந்தது. அதனை எளிமையாக்கி பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அதிகாரங்களைக் கொண்ட சதுரகராதி உருவாக்கினார். இன்று வெளியிடப்படும் அகராதிகளுக்கெல்லாம் இந்தச் சதுரகராதிதான் தாய்!

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணமுடைய ''தொன்னூல் விளக்கம், என்னும் நூலை உருவாக்கினார்.

ஒன்பதினாயிரம் தமிழ்ச்சொற்களுக்குப் பொருள் விளக்கம் உள்ள, தமிழ் - இலத்தீன் அகராதியையும் நான்காயிரம் போர்ச்சுக்கீசியச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் உள்ள போர்ச்சுக்கீசியம்-தமிழ்-இலத்தீன் அகராதியையும் அவர் உருவாக்கினார்.

திருக்காவலூரில் தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவித் தாமே ஆசிரியராக இருந்து, கிறித்தவ சமய அறிஞர்களுக்குத் தமிழ் கற்றுத் தந்தார்.

திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் லத்தீன்

மொழியில் பெயர்த்தார். இலக்கிய வழக்கு, உலக வழக்கு ஆகியவற்றின் வேற்றுமை குறித்தும் லத்தீன் மொழியில் எழுதினார்.

தமிழ் எழுத்து வழக்கில் புதிய மாற்றத்தைச் செய்தவர் வீரமாமுனிவரே ஆவர். தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்த எ,ஒ என்னும் எழுத்துக்களுக்குப் புள்ளியிடப் பெறின் அவை குறிலாகும் என்னும் பழைய வழக்கை மாற்றி ஏ, ஓ என்னும் நெட்டெழுத்துக்களை வழக்கிற்குக் கொண்டு வந்தார். அவை, புலவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டு, இன்றும் வழக்கில் இருந்து வருகிறது.

## கால்டுவெல்

ஐரோப்பாவில் உள்ள அயர்லாந்து நாட்டில் கி.பி. 1815ல் தோன்றியவர் கால்டுவெல்; பள்ளியில் சேர்ந்த நாள் முதல் கல்வியில் கருத்தூன்றிய அவர், பதினாறு வயதிற்குள் ஆங்கில இலக்கிய நூல் பலவற்றைப் படித்து அறிவு பெற்றார். தமது தந்தையின் விருப்பப்படி ஓவியக்கல்லூரியில் சேர்ந்து ஓவியக்கலையையும் கால்டுவெல் கற்று வந்தார்.

தமது இருபதாம் வயதில் லண்டன் சமயத்தொண்டர் சங்கத்தில் அங்கம்பெற்று, கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சமய நூல்களையும் ஐரோப்பிய மொழிகளில் உருவான நூல்களையும் கற்று, இரண்டாண்டுகளுக்குப் பின்னர் இளங்கலைத் தேர்வில் முதன்மையுறத் தேறிப் பரிசு பெற்றார்.

தமிழ்நாட்டு வரலாற்றை மாணவப் பருவத்திலேயே நூல்களின் வாயிலாக ஓரளவு அறிந்து வைத்திருந்த கால்டுவெல் - தமிழ் நாட்டில் தங்கி சமயப் பணிபுரிய விரும்பினார். லண்டன் சமயத் தொண்டுக் கழகத்தினரும் அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். புறப்படும்போது தமது அன்னையார் நோய்வாய்ப்பட்டிருந்தார். எனினும் கடமையாற்றுவதற்காக அவர் 1838ல் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தார்.

ட்ரூ என்னும் பாதிரியாரின் இல்லத்தில் அவர் தங்கினார். பாதிரியார் ஆங்கிலேயர் எனினும் தமிழ் மொழி குறித்து நன்கு அறிந்து வைத்திருந்தார். தமிழ் தென்னிந்திய மொழிகளில் மிகவும் பழமையானது; இலக்கிய வளம் உடையது; ஆய்வுக்குரிய அரிய தன்மை படைத்தது'' என்று கால்டுவெல்லிடம் அவர் கூறவே, தமிழைப் பிழையறப் படித்து ஆராய வேண்டும் என்னும் ஆர்வம் கால்டுவெல்லுக்கு ஏற்பட்டது.

சிதம்பரம் தஞ்சை, திருச்சி, திருவரங்கம், நீலகிரி, ஆகிய ஊர்களுக்குக்கெல்லாம் சென்றார். பின்னர் கோவை, மதுரை, ஆகிய ஊர்களின் வழியாக நெல்லை மாவட்டம் சென்று, இடையான் குடியில் தங்கி கல்விப்பணியும் சமயப்பணியும் புரிந்தார்.

கிறிஸ்துவ வேத நூல்களான பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றைத்தமிழிலேபெயர்த்தார்;

அவர் கல்லூரியில் பயின்ற காலத்தில் அவரது பேராசிரியர் சர் டேனியல் சான்போர்டு — ஐரோப்பிய தொன் மொழிகளான கிரேக்கம் - லத்தீன், ஜெர்

மன் மொழி முதலியவற்றின் ஒப்பீடுகளை ஒப்பிலக்கண வாயிலாக உணர்த்தினார். அன்று முதல், தாமும் ஓர் ஒப்பிலக்கண நூலைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கால்டுவெல்லுக்கு இருந்துவந்தது.

தமிழகத்திற்கு வந்த பின்னர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகளைக் கற்பதற்கு ஏற்பட்ட வாய்ப்பைத் தக்க விதத்திலே பயன்படுத்தி இந் நான்கு மொழிகளுக்குள்ளும் இருக்கும் ஒப்பியல்புகளை ஆராய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை உருவாக்கினார்.

திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்—அவர் வாழ்ந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் நாம்—என்பதைப் பேச்சினால் அல்ல—செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.
—பேரறிஞர் அண்ணா

'வட மொழியிலிருந்து தான் தமிழ் தோன்றியது'என்று நெடுங்காலமாகச் சொல்லப்பட்டுவந்த கருத்தை அடித்து நொறுக்கும் வகையில், ''திராவிட இனமொழிகள் தனித்தியங்கிவருபவை; வடமொழிக்கும் இவற்றிற்கும் உறவு முற்றிலும் கிடையாது'' எனத் தெளிவுபடுத்திய இந்நூல்,மொழிநூல் அறிஞர்களுக்கும் பெரும் வழி காட்டியாக திகழ்கிறது.

இவ்வாராய்ச்சி நூலை உருவாக்கியதற்காக, கிளாஸ்கோ பல்கலைக் கழகம், கால்டுவெல் அவர்களுக்கு டாக்டர் என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியது. தமிழ் மக்கள், 'தமிழ்த் தாயின் தவப்புதல்வர்' என்றும் 'தமிழ்ப் பாதுகாவலர்' என்றும் அவரைச் சிறப்பித்தார்கள். நற்கருணைத் தியான மாலை, தாமரைத் தடாகம் என்னும் நூல்களையும் அவர் எழுதினார்.

நெல்லை மாவட்டத்தின் வரலாற்றை எழுதி, சென்னை அரசிடமிருந்து 1000 ரூபாய் பரிசு பெற்றார். அந்நூல் 1881ல் வெளியிடப்பட்டது.

தமிழ்மொழியின் வேர்ச்சொற்களை மிகவும் ஆய்வு செய்தார். Rice என்ற ஆங்கிலச் சொல், தமிழ்ச் சொல்லான அரிசி என்பதன் திரிபே என்றும், ஹிப்ரு மொழியில் காணப்படும் 'துகி' என்னும் சொல் தமிழில் உள்ள 'தோகை' என்பதன் சிதைவே என்றும் ஆய்ந்து கூறினர்.

புதை பொருள் ஆய்வுத்திறம் இவருக்கு இருந்தது, பாண்டிய நாட்டின் பழங்காலத் துறைமுகமான கொற்கை, இடைக்காலத் துறைமுகமான காயல் முதலியவற்றை ஆய்வுத்திறனுடன் விளக்கிக்காட்டினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 22ஆம் ஆண்டில் (1879) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கால்டுவெல் ஆற்றிய சொற்பொழிவு, அவர் ஒரு தமிழ்த் தொண்டர் என்பதை வலியுறுத்தியது. தூய தமிழ்த் தொண்டரான கால்டுவெல் 'இந்தியாவிலேயே உயிர் துறப்பேன்' என்று சூளுரைத்தார். அதன்படி கொடைக்கானலில் உயிர் துறந்தார். அவரது தமிழ்த்தொண்டு இன்றும் அவரை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

# ஜி. யு. போப்

இங்கிலாந்து நாட்டின் வெஸ்லியன் திருச்சபையைச் சார்ந்த ஜான்போப்பு, கேதரின் யுக்னோ தம்பதியருக்கு எட்வர்டு தீவில் 1820ல் பிறந்தார் ஜியார்ஜ் யுக்ளோ என்று வழங்கப்பெற்ற ஜி. யு. போப்.

இளமையிலேயே சுறுசுறுப்பு, ஊக்கம், உழைப்பு, விடாமுயற்சி முதலிய நற்பண்புகளுடன் திகழ்ந்த போப் கல்வியில் மிகுந்த நாட்டம் கொண்டார். சமய நூல்களை விரும்பிக் கற்றார். புதிய ஏற்பாடு - கிரேக்க மொழியில் இருந்தமையால் அதைக்கற்பதற்காக அம்மொழியைப் பயின்றார். தமிழ்மொழியின் சிறப்பைக் கேள்விப்பட்ட போப், தமிழகத்திற்கு வந்து தொண்டு செய்ய விரும்பினார். அதனால் தமிழ் மொழியையும் நன்கு கற்றார். பின்னர் வட மொழியையும் பயின்றார்.

வெஸ்லியன் குழுவின் சார்பில், சமய ஊழியராக 1839ல் தமிழகத்திற்கு வந்து சேர்ந்தார். திருநெல்வேலியில் உள்ள சாயர் புரத்தை முதன் முதலாக அடைந்தார்; தஞ்சை, பெங்களூர் ஆகிய நகரங்களில் சமயப்பணியும் ஆசிரியப் பணியும் புரிந்தார் மகாவித்வான் இராமானுஜ கவிராயர் அவர்களிடம் தமிழ் கற்றார்; வேத சாஸ்திரி என்ற பட்டமும் பெற்றார்.

சாயர் புரத்தில் சமயக் கல்லூரி ஒன்றினைத் துவக்கி-கல்வி, உணவு, உறையுள் ஆகிய மூன்றையும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கினார். தமிழ் இலக்கியம், கிரேக்க மொழி, இலத்தீன், எபிரேயம், ஆங்கில இலக்கியம், கணிதம், தர்க்க தத்துவம், வரலாறு ஆகிய பாடங்கள் அங்கே கற்பிக்கப்பட்டன. இவற்றில் பலவற்றை போப்பே கற்பித்தார்.

பள்ளிப் பிள்ளைகட்கு எளிய முறையில் தமிழ் இலக்கண உண்மைகளைக் கற்பிக்கும் எண்ணத்துடன் மூன்று இலக்கண நூல்களை -வினா விடை முறையில் எழுதி வெளியிட்டார்.

மேனாட்டார் தமிழ் பயில்வதற்கு ஏற்ற முறையில் தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் அகராதி ஒன்றினைத் தயாரித்தார்.

தமிழ்ச் செய்யுட்களைத் தொகுத்து 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்னும் நூலை வெளியிட்டார்.

அவரது சமயப்பற்று - மறை நூலாராய்ச்சி ஆகியவற்றைப் பாராட்டி-காண்டர்பரி சமய குரு 'மறை நூல் அறிஞர்' என்னும் பட்டத்தை 1884ல் போப் அவர்களுக்குவழங்கினார். அன்றுமுதல் டாக்டர் போப் ஐயர் என்று வழங்கப்பட்டார்.

திருக்குறளை உலகறியச் செய்த பெருமை போப் அவர்களையே சேரும். நாற்பதாண்டுகளாக அந்நூலைப் படித்தார். பல தமிழ் நூல்களின் துணையாலும் அதனை உணர்ந்தார். எல்லாக் குறட்பாக்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பல அருங் குறிப்புகளையும் இணைத்தார். பன்முறையும் படித்துச் சுவைத்ததற்குரிய முகவுரையை வரைந்தார் 1886ல் இதனை வெளியிட்டார்.

குறளுக்கு அடுத்தபடியாக நாலடியாரை விரும்பிய போப், அதனை உலக அறிஞர் படித்துப் பயன் பெற வேண்டும் என்னும் உணர்வுடன் மொழி பெயர்த்து 1893ல் வெளியிட்டார்.

நாலடியாரின் முகவுரையில் அவர் குறிப்பிட்டுள்ள கருத்து போற்றுதற்குரியது. அது வருமாறு:

"தமிழ் இலக்கியங்களை இம்முறையில் வெளியிடுவதால் நன்மை விளையுமென்று நான் உறுதியாய் நம்புகிறேன். நாலடியாரைப் படிக்குங்கால் பல அரிய உண்மைகள் வெளியாகின்றன. தமிழ் மக்கள் ஒழுக்கத்தில் விருப்புடையவர்கள்; உண்மை அன்புள்ளவர்கள்; உயர்ந்த நோக்குடையவர்கள். இத்தகையவர்க்கு நற்காலம் தோன்றும் என்பது எனது நம்பிக்கை. திருக்குறளும் நாலடியாரும் தமிழர்களுக்கு முதன்மையை அளித்துள்ளன."

திருவாசகத்தில் உள்ளம் பறிகொடுத்த போப் அவர்கள் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1900 ஆண்டு எப்ரல் 24ஆம் நாளில் வெளியிட்டார். இந்நூல் போப் அவர்களின் 80 வது வயதில் வெளியிடப்பட்டது என்னும் பெருமைபெற்றது. இதன் மூலமாக சைவ சித்தாந்த நெறிகளை மேனாட்டவர் அறிந்து கொள்ள வழி பிறந்தது. புறநானூறு, புறப்பொருள்வெண்பாமாலை ஆகிய நூல்களின் செய்யுட்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததுடன் மணிமேகலைக் கதையை ஆங்கில உரைநடையில் எழுதினார்.

தேமதுரத் தமிழோசையை உலகம் எல்லாம் பரவச்செய்த போப் அவர்களின் தொண்டினைப் பாராட்டி, இங்கிலாந்தில் இருந்த ராயல் ஏஷியாடிக் குழு 1906ல் அவருக்குப் பொற்பதக்கம் வழங்கிச் சிறப்பித்தது.

தான் இறந்த பின்னர் தனது கல்லறையில் ஒரு தமிழ் மாணவன் என்ற சொற்றொடர் பொறிக்கப்பட வேண்டும் என்று கூறிச் சென்றார். When ever I die, A Student of Tamil' will be inscribed on my monument.

என்ற விருப்பத்தை தமது நண்பர் ஜே.எம். நல்லசாமி என்பவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார் என்றால் செந்தமிழில் அவருக்கிருந்த அளவிட இயலாத பற்று தெற்றென விளங்குகிறது அல்லவா?

# இரேனியஸ்

ஜெர்மனி நாட்டைச்சேர்ந்த இரேனியுஸ் 1970ல் ரஷ்யாவில் பிறந்தார். இவரது முழுப்பெயர் சார்லஸ் தியோபிளஸ் எட்வர்டு இரேனியுஸ் ஆகும்

தமது 22வது வயதில் கிறித்தவ சங்கத்தில் சேர்ந்து சென்னைக்கு வந்து சமயத் தொண்டாற்றினார். மகாவித்வான் முகவை ராமானுஜ கவிராயரிடத்தில் தமிழ் கற்றார். பைபிளின் புதிய ஏற்பாட்டைத் தமிழில் பெயர்த்தார்.

வேத உதாரணத் திரட்டு என்னும் நூல் ஒன்றினை உரைநடையில் எழுதினார். தமிழில் சொற்பொழிவாற்றவும் எழுதவும் வல்ல இவரை ஜி.யு. போப் அவர்கள் மிகவும் பாராட்டியிருக்கிறார்.

## சீகன்பால்கு

ஜெர்மன் நாட்டில் புல்ஸ்நித்ஸ் என்ற நகரில் 1683ல் பிறந்த பார்த்தலோமியா சீகன் பால்கு ஹாலிப் நகரில் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி கற்றார்.

அக்காலத்தில் தமிழகத்திலுள்ள தரங்கம்பாடியில் டென்மார்க்குக் காரர்கள் வணிகம் செய்து வந்தனர். அப்பகுதியில் கிறித்துவ மத போதனை செய்வதற்காக நான்காம் பிரடெரிக் மன்னனின் ஆணைப்படி 1705ல் புறப்பட்டு வந்தார் சீகன்பால்கு.

தரங்கம்பாடியில் சிறு கிராமத்தில் திண்ணைப்பள்ளியில் தரையில் அமர்ந்து அரிச்சுவடி கற்றார். பின்னர் ஓலைச் சுவடிகளைப் பயின்றார்.

வருவாய் வாரியத்தில் செயலாளராகப் பணியாற்றினார். சென்னை மாவட்ட ஆட்சியாளராகப் பத்தாண்டுகள் பணி புரிந்த இவர், வடமொழியையும் தென் மொழியையும் விரும்பிக் கற்றார். இராமச்சந்திர கவிராயர் அவர்களிடமும் சாமிநாத பிள்ளை அவர்களிடமும் தமிழை நன்கு கற்றுக்கொண்டார்.

திருக்குறளுக்குச் சிறந்த விரிவுரை எழுதும் முயற்சியில் ஈடுபட்டார். அது முற்றுப்பெறாது போய்விட்டது. என்றாலும் அந்நூலில் அவர் தமது கருத்துக்கேற்பச் சில இடங்களில் உரை கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களினின்றும் தக்க இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்.

அவர் சேகரித்து வைத்த ஏட்டுச்சுவடிகளின் அருமை அறியாத சமையலறை ஊழியன் ஒருவன் அவற்றைக் கொண்டு பல மாதங்கள் அடுப்பெரித்ததாகச் சொல்லப் பெறுகிறது.

## ராபர்ட் டி நோபிலி

இத்தாலி நாட்டில் தஸ்கனி மாநிலத்தில் உயர் குடும்பத்தில் 1577ல் தோன்றியவர் ராபர்ட் டி நோபிலி.

நேபிள்ஸ் நகரில் சமயக் கல்வி பெற்ற இவர் 1606ல் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார்.

தமிழ் மொழி, வட மொழி இரண்டையும் நன்கு கற்று, அம்மொழிகளில் நூல்களை எழுதும் வல்லமை பெற்றார்

இயற்கையிலே கருத்தாங்கி
இனிமையிலே வடிவெடுத்து
செயற்கைகடந் தியலிசையில்
செய்நடமே! வாழியரோ
பயிற்சிநிலப் பயிர்களெலாம்
பசுமையுற ஒளிவழியே
உயிர்ப்பருளும் திறம்வாய்ந்த
உயர்தமிழ்த்தாய் வாழியரோ.

—திரு. வி. க.

கைக்கிளை ஈறாக் கட்டிய நரம்பிற்
கலந்துநின் றின்னிசை எழுப்பி
மெய்க்கிளை நட்புப் பகையிணை தெரித்த
மெல்லியல் இணையடி பணிவாம்.

புக்கிளை யாத புலமையின் ஊற்றாய்
பொருந்தினர்க் காரமிழ் தாகி
எக்கிளை ஞரினும் மிக்கஅன் பளிக்கும்
இருந்தமிழ் அணங்கினை உவந்தே.

—விபுலானந்தர்.

ஜெர்மன் நாட்டிலிருந்து அச்சு இயந்திரத்தையும் தமிழில் அச்சு எழுத்துக்களையும் செய்து, அவற்றுடன் காகிதத்தையும் அனுப்புமாறு ஏற்பாடு செய்தார். அவ்வியந்திரத்தைக் கொண்டு கிறித்தவ சமய உண்மைகளை வெளியிட்டு, பொது மக்களுக்கு வழங்கினார்.

தமிழ் - இலத்தீன் இலக்கணத்தையும், தமிழ்-இலத்தீன் அகராதியையும் அச்சிற் பதிப்பித்தார்.

முதன் முதலில் பொதுமக்களுக்குத் தமிழ் மொழியில் நூல்களை அச்சிட்டு வழங்கிய பெருமை சீகன்பால்கு அவர்களையேசேரும்.

## எல்லீஸ்

ஆங்கிலநாட்டில் பிறந்தவர் பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ். இவர் 1796ல் இந்தியாவில் பணி செய்வதற்கு வந்தார். சென்னையில்

சென்னை அரசாங்கக் கல்விச் சங்கம் என்னும் அமைப்பு ஒன்றினை உருவாக்கினார். அதற்கு வேண்டிய பொருளுதவிகள் செய்தார்.

வீரமாமுனிவர் இயற்றிய நூல்களை எல்லாம் தேடுவதற்கு ஏற்பாடு செய்தார்.

பழம் சுவடிகளைத் தேடிச் சேகரிப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தர். அநேக சுவடிகளைச் சேகரித்து வைத்திருந்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தைக் காண மிக விருப்புடன் சென்றார். பின்னர் தாயுமானவர் அடக்கமான இடத்தைக் காண்பதற்கு இராமநாதபுரம் சென்றார். தாயுமானார் சமாதி முன்னர் நின்று ''இன்றைக்கிருப்போரை நாளைக் கிங்கிருப்பார் என்றெண்ணவோ திடமில்லையே'' என்ற தாயுமானாரின் பாடலை நெஞ்சுருகப் பாடினார். எதிர்பாராத விதத்தில் அன்றைய தினமே மதுரையில் மறைவெய்தினார்.

இவர் மதுரையில் தங்கி சமயப் பணிகள் புரிந்தார். பின்னர், சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சிற்றூர்களுக்கெல்லாம் சென்று சமயச் சொற்பொழிவாற்றி வந்தார்.

ஞானோபதேசம், மந்திர மாலை, ஆத்தும நிர்ணயம், தூஷணதிக்காரம், சத்தியவேத லட்சணம், சுகுண நிவாரணம், பரம சூட்சுமாபிப்ராயம், கடவுணியம், புனர்ஜென்மம் ஆட்சேபம்; நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி, சேசுநாதர் சரித்திரம், தவசுச் சதம், ஞான தீபிகை, நீதிச்சொல், அநித்ய நித்ய வித்யாசம், பிரபஞ்ச விரோத வித்தியாசம், தமிழ்-போர்ச்சுக்கீசு அகராதி என 18 நூல்களை இயற்றினார்.

தமது பெயரை தத்துவப் போதகர் என்றும் மாற்றிவைத்துக்கொண்ட ராபர்ட் டிநோபிலி இறுதிக் காலத்தில் சென்னை சாந்தோமில், 1656 பிப்ரவரியில் மறைவு எய்தினார்.

# நாளும் வளர்ந்திடும்

# நாடகத் தமிழ்!

## ஏ.எல்.ராஜேந்திரன்

நாட்டியத்தோடு, கதையும் பாட்டும் இணைந்து வளர்ந்தபொழுது நாடகம் அல்லது கூத்து மலர்ந்தது. இதைக் கதை தழுவிய கூத்து என்பார்கள்.

கூத்து என்பது அகக் கூத்து, புறக்கூத்து என ஒருவகை; சாந்திக் கூத்து, விநோதக் கூத்து என்பது மற்றொரு வகை. இவை ஒவ்வொன்றும் பல்வேறு வகை உறுப்புக்களை உடையதாக இருந்தன. இவற்றை வேத்தியல் பொதுவியல் என்றும் வகைப்படுத்துவதுண்டு. வேந்தனது அவையில் நடிப்பதற்குரிய தகுதியும் கலைச் சிறப்பும் வாய்ந்தது வேத்தியல், பாமரமக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஆடப்பட்ட ஆடல்களும் சமயச் சடங்குகளோடு இணைந்த கூத்துக்களும் பொதுவியல்.

வரிக் கூத்துக்களும், அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மற்கும்பம், துடி, சடையம், பேடு, பாவை, மரக்கால் என்கிற் பதினோரு பாடல்களும் இத்தகையனவே.

நாடகத்தமிழ், இயலும் இசையும் கலந்த இனிய தமிழாகும். 'நாடகம்' என்ற சொல்லே தமிழல்ல என்பர் சிலர்; அது தவறு. அச்சொல் தமிழ்ச் சொல்லே யாகும்.

நாடு அகம் எனப்பிரித்து, அகம் நாடு என்பதே நாடு அகம் என மாறிற்று எனலாம். அகம் பெரிதும் நாடுவதே நாடகம். நாட்டகம் என்ற சொல்லே நாடகம் ஆயிற்று என்பார் கருத்தும் ஏற்கத்தக்கதாகவே இருக்கிறது. ஏனெனில் ஒரு நாட்டின் கலை, அரசியல், பண்பாடு, சமுதாயம், நாகரிகம் ஆகியவற்றை நாடகம் நமக்குக் காட்டுகின்றது. எனவே அது நாட்டின் அகமாக உயிராக விளங்குகிறது என்ற கருத்தில் அவர்கள் அப்படிச் சொல்லக்கூடும்.

**நாடகத்தின் பழமை!**

மனித இனத்தோடு பெரிதும் தொடர்பும், ஈடுபாடும் உடையதே நாடகமாகும்.

நாடகத்தில் நடிப்பும் மொழியும் நாடகத்தின் இரண்டு பக்கங்களாக விளங்கும். நாடகத்திற்காகப் பயன்படுத்தப்படும் தமிழே நாடகத் தமிழ்! நாடகத்திலே நடிப்பவர்கள் பேச்சும் பாட்டும் மொழியை அடிப்படையாகக் கொண்டவை. அவர்கள் பாவம் தோன்றும்படி நடித்தாக வேண்டும். அவர்களுடைய ஒவ்வொரு அங்கமும் ஏற்றுக் கொண்டிருக்கும் வேடத்திற்குத் தகுந்த மெய்ப்பாடுகளை உடையதாக அமைந்து செயல்பட வேண்டும்.

பேச்சு, மனம், அங்கங்கள் ஆகிய மூன்று கரணங்களும் சேர்ந்து இயங்கினால்தான் நாடகம் நன்கு அமையும்.

தொல்காப்பியர் காலத்தில் நாடகம் மிகுதியான ஆட்சி பெற்றிருந்தது. நாடகம், கூத்தர், பாணர் ஆகியோர் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்' (990)

'கண்ணினும் செவியினும் திண்ணிதின்
உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்
குரைத்தே (1221)

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
(1037)

—இவை தொல்காப்பிய எடுத்துக் காட்டுகளாகும். இதிலிருந்து அவர் காலத்தின் முன்பே நாடகம் நல்லவிதமிருந்தது தெரியவரும்.

'கூத்தாட்டு அவைக் குழாத் தற்றே' என்று வள்ளுவரும் குறிப்பிடுவதால் அந்நாளிலும் நாடகத்தமிழ் பெற்றிருந்த ஏற்றம் நமக்குப் புலனாகும்.

இடைச்சங்கத்து நூல்களாகக் கருதப்படும் மாபுராணம், பூதபுராணம் என்பவையிரண்டும் நாடக இலக்கண நூல்களாகச் சொல்லப்படுகின்றன.

## பெருங்காப்பியங்களில் நாடகம்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் தலைசிறந்த நாடகக் காப்பியமாகத் திகழ்கின்றது. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதை கூத்து, நடனம் பற்றிய பல செய்திகளைக் குறிப்பிடுகின்றது.

'ஊரகத் தாகி உளைமாண் பூண்ட
தேரகத் தோடும் தெருவுமுகம்நோக்கி
கோடல் வேண்டும் ஆடரங் கதுவே!

—என்று அரங்கம் எப்படி அமைந்திட வேண்டுமென இலக்கணமே கூறுகிறது சிலப்பதிகாரம்.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்-பரதம், அகத்தியர் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் எனப்பல நாடக இலக்கண நூல்களைக் குறிப்பிடுகின்றார்.

இசைநுணுக்கம், இந்திரகாவியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் போன்ற இசைநாடக நூற்களும் இருந்திருக்கின்றன.

சங்க இலக்கியப் பாடல்கள் பலவும் நாடகப் பாங்குடனேயே திகழ்கின்றன.



'வேத்தியல் பொதுவியல் என்றிரு திறந்தும்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்'
'நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்'

—என வேத்தியல், பொதுவியல் என்ற இருவகைக் கூத்து பற்றியும் ,நாடகக் காப்பிய நூலாய்வோர் பற்றியும் மற்றொரு பெருங் காப்பியமான மணிமேகலை சொல்லுகிறது.

'நாடகத்தால் உன்அடியார் போல் நடித்து

இறைவனே அந்நாளில் கூத்தனாக்கப்பட்டு-'கூத்தபிரான்' என அழைக்கப்பட்டான். கூத்தர், பாணர், பொருநர், விறலியர், தோடியர் என நாடகமாந்தர்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் கண்ணுளர், கண்ணுளாளர் என்றும் பெயர் பெற்றனர்.

பல்லவர் காலத்தில் 'மத்த விலாசப் பிரகசனம்' என்ற சமஸ்கிருத நாடகம் புகழ் பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது.

## சோழர்களால் நாடகப் பெருமை

பிற்காலச் சோழர் காலத்தில் ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் போன்றோர் நாடகக் கலைஞர்கட்கு மானியமே வழங்கியுள்ளனர். அந்நாளில் நாடகக் கலை பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆலயங்களிலெல்லாம் அவர்கள் காலத்தில் நாடகங்கள் நடிக்கப்பட்டதற்கான கல்வெட்டுச் சான்றுகளே நிறைய இருக்கின்றன. ராஜராஜசோழனின் பெருமை விளக்கும் 'பூம்புலியூர் நாடகம்' 'ராஜ ராஜேஸ்வர நாடகம்' ஆகியவை விஜய ராஜேந்திர ஆசிரியர் என்பவரால் தயாரிக்கப்பட்டு அந்நாளில் நடத்தப்பட்டன.

14 ஆம் நூற்றாண்டின் பின் 'குறவஞ்சிப் பள்ளு' போன்ற நாடகங்கள் பிரசித்தி பெற்றன. திரிகூட ராசப்பக் கவிராயரின் 'குற்றாலக் குறவஞ்சி' பெரும்புகழ் பெற்றது. முக்கூடற் பள்ளு' சிறப்புப் பெற்றது.

17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அருணாசலக்கவிராயர் எழுதிய இராமாயண நாடகம், அசோமுகி நாடகம், இராமச்சந்திரக் கவிராயர் இயற்றிய 'பாரத விலாசம்' கோபால கிருஷ்ணபாரதி எழுதிய 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை' 'இயற்கை', 'நாயனார் கீர்த்தனை' ஆகியவை பிரபலம் பெற்றன.

அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் திருக்கச்சூர் நொண்டி நாடகம், பழனி நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம் ஆகியவை பெயர் பெற்றன.

இதன்பின் பாட்டும் வசனமுமான தெருக்கூத்துக்கள், நாட்டு மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றன.

18ஆம் நூற்றாண்டில், அந்த வகையில் மாரிமுத்துப் பிள்ள்ளையால் இயற்றப்பட்ட 'அநீதி நாடகம்' சிறப்படைந்தது. 1857ல் நடிக்கப்பட்ட 'டம்பாச்சாரி விலாசம்' கூத்து முறையில் எழுதப்பட்ட முதல் சமூக நடகமாகப் புகழ்பெற்றது.

1891ல் லார்டு லிட்டன் எழுதிய ரகசிய வழி என்னும் கதையைத் தழுவி 'மனோன்மணியம்' என்ற கவிதை நாடகம் வடித்த

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 18ஆம் நூற்றாண்டைய நாடக ஆசிரியர்களிலேயே சிறந்தவரெனக் கூறிப்பிடப்படுகிறார். அந்த நூற்றாண்டிலேதான் ராவ் பகதூர் பம்மல் சம்பந்த முதலியாரின் 'சுகுண விலாசம்' நாடகம் நடத்தப்பெற்றது.

தமிழ் நாடகங்களைப் புராண இதிகாச நாடகங்கள், சமுதாய சீர்திருத்த நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், தனிநிலை நாடகங்கள் என வகைப்படுத்தலாம்.

## இருபதாம் நூற்றாண்டு ஏற்றம்!

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் மேனாட்டாரைப் பின்பற்றி நவீன நாடகங்கள் தமிழில் உருப்பெற்றன. 19-ஆம் நூற்றாண்டிலே மட்டும் ஏறத்தாழ 500 நாடகங்கள் தமிழிலே நடத்தப்பட்டு அவற்றில் நூறு நாடகங்களாவது புத்தகங்களாக வெளியாயின.

19ஆம் நூற்றாண்டில் -மதுரை வீரன், நல்லதங்காள், பவளக்கொடி போன்ற நாடோடி கற்பனை நாடகங்களும், இராமாயண - பாரதக் கதைகள் போன்ற புராண இதிகாச நாடகங்களும், தேசிங்குராஜன் போன்ற வரலாற்று நாடகங்களும், டம்பாச்சாரி விலாசம் போன்ற சமூக நாடகங்களும், அப்பாசு, அல்லி பாதுஷா, ஞானதச்சன், ஞானசௌந்தரி போன்ற நகைச்சுவை நாடகங்களும் வளம்பெற்று வரப்பெற்று வரவேற்கப்பட்டன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் நாடக உலகிற்குப் பெருந்தொண்டாற்றியவர் சங்கரதாஸ் சுவாமிகளாவார். நாடகங்களைத் தயாரித்ததோடு நில்லாமல் தக்க பயிற்சியளித்து தரமான நடிகர்களையும் அவர் உருவாக்கினார்.

அல்லி அர்ஜுனா, பவளக்கொடி, சதி அனுசூயா, சுலோசனா சதி, சிறுத்தொண்டர், மிருச்சிகடி, பிரகலாதா, அபிமன்யூ சுந்தரி, சீமந்தனி முதலான ஏறத்தாழ இருபது நாடகங்கள் சங்கரதாஸ் சுவாமிகளால் தயாரித்து அரங்கேற்றப்பட்டன.

பரிதிமாற் கலைஞர் எனச் சிறப்பிக்கப்பட்ட பேராசிரியர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் நாடகத்திற்கென 'நாடக இயல்' என்பதோர் இலக்கண நூலே எழுதினார். அதுமட்டுமல்ல; அவ்விலக்கணத்திற்கு இலக்கியம்போல் ரூபாவதி கலாவதி, மானவிஜயம் ஆகிய நாடகங்களையும் எழுதினார்.

முத்துசாமி கவிராயர்-விபீஷண சரணாகதி, பீஷ்மர் சபதம், ஞான சவுந்தரி, தயாநிதி, கண்ணாயிரம், லோபி, இராமாயணம் ஆகிய ஏழு நாடகங்களை உருவாக்கினார்.

ஆயினும், தமிழ் நாடகத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர் ராவ்பகதூர் பம்மல் சம்பந்த முதலியாரேயாவர். எண்ணற்ற வசன நாடகங்களை எழுதி தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்த இவர், மனோகரா, சபாபதி வேதாள உலகம், காதல் கண்கள், பொன் விலங்கு போன்ற நாடகங்களைத் தயாரித்து வழங்கிப் பெருமை கொண்டவர்.

**கவிதை.....**

**கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து—இலக்கியம் வளர்ந்து—அதை மக்கள் உணருகின்ற நேரத்தில் தான் தோன்றும்.**

**எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக—கவிதையாக அது திகழும்.**

**—பேரறிஞர் அண்ணா**

மேடையில் தானே தோன்றி நடிக்கவும் செய்த பம்மல் சம்பந்த முதலியார், சத்தியமூர்த்தி, ஆர்.கே. சண்முகஞ்செட்டியார், சர்.சி.பி. இராமசாமி ஐயர் போன்றோரையும் நாடகங்களில் நடிக்கச் செய்து நடிப்போரைக் கூத்தாடிகள் என இகழப்பட்ட நிலையின்றி மாற்றினார்.

சதாவதானம் கிருஷ்ணசாமி பாவலர் கதரின் வெற்றி, தேசியக்கொடி, பம்பாய் மெயில் ஆகிய அரிய நாடகங்களை எழுதி மக்கள் நெஞ்சில் நாட்டுப் பற்றினைத் தூவினார்.

வீரபாண்டியக் கட்டபொம்மன் வரலாறான முதல் முழக்கம், இதயத்தில் நாம் ஆகிய நாடகங்களை எழுதிப் பெயர் பெற்றார் ரா. வெங்கடாசலம்.

நல்ல தமிழ் நாடகங்களால் நாட்டு மக்கள் இதயத்திலே பகுத்தறிவுக் கொள்கைகளை, சீர்திருத்தக் கருத்துக்களை விதைக்கலாம் என்பதைத் தம்து இணையற்ற எழுத்தாற்றலால் உணர்த்தினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். வேலைக்காரி, ஓர் இரவு போன்ற அவரது படைப்புகள் நாடக உலகில் புதுத்திருப்பத்தை உண்டாக்கின.

இன்னும் தமிழ் நாடக உலகில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெருமையாளர்களாக சாதனையாளர்களாக—ஏகை சிவசண்முகம் பிள்ளை, உடுமலை முத்துசாமி கவிராயர், வேலுநாயர், குடந்தை வீராசாமி வாத்தியார், பேராசிரியர் மறைமலை அடிகளார், சி. கன்னையா நாயுடு, எம். கந்தசாமி முதலியார், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், விஸ்வநாததாஸ், முழுக்க முழுக்கப் பெண்களையே வைத்து நாடகக் கம்பெனி நடத்திய கும்பகோணம் பாலாமணி அம்மையார், எஸ். ஜி. கிட்டப்பா, கே.பி. சுந்தராம்பாள், மதுரை மாரியப்ப சுவாமிகள், எம்.கே. தியாகராஜ பாகவதர் எஸ்.வி. சுப்பையா பாகவதர், ஜி. இராமநாதன், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, டி.கே. சண்முகம், எஸ். டி. சுந்தரம் எம்.ஆர். ராதா ஆகியோர் அருஞ் சாதனைகளை நாடக உலகில் புரிந்தார்கள்.

இயலும் இசையும் இணைந்து காண்போர்தம் கண்ணையும் கருத்தையும் கவரும் தன்மையுடையதான நாடகக்கலை தொன்று தொட்டுச் சீரும் சிறப்புமாக வளர்ந்தே வந்திருக்கிறது. இந்த அரிய கலையினை மென்மேலும் மேன்மைபெறச் செய்வது நமது கடமையாகும்.

# தமிழ்க் கல்லூரிகள்

பேராசிரியர் கு. சிவமணி

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்க் கல்வியைப் பெரிய அளவில் போற்றிப் புரப்பாரும் இல்லை; பேணிக் கொள்வாரும் இல்லை. ஆங்கிலப் பாதிரியாராகத் தமிழகத்துக்கு வந்த டாக்டர் ஜி. யு. போப், அரை நூற்றாண்டுக் காலத் தமிழ்த் தொண்டிற்குப் பிறகு இங்கிலாந்து திரும்பும் போது ''தமிழ் மாணவராக''ச் சென்றார். ''தமிழ்ப் புலமையே வறுமைக்கு நேரான வழி'' என்பது தமிழ்க் கல்வி வளராமைக்கு அவர் கண்ட காரணம்.

நமது இந்திய அரசாங்கமோ, பல்கலைக் கழகங்களோ தமிழிலக்கியத்தின் மதிப்பை 'முழுமையாக அங்கீகரிக்கவில்லை; எனவே, தென்னிந்தியப் பேரிலக்கிய ஆராய்ச்சியில் தங்கள் வாழ்க்கையைக் கழிப்பவர்கள் நீருக் கடியில் முத்துக்களைத் தேடிப்பெறும் மனிதரைப் போல் காட்சியளிக்கின்றார்கள்'' என்று அவர் கவலையுடன் கூறிய கருத்தும், பாராட்டும் அவர் காலத்தில் நிலவிய தமிழ்க் கல்வி நிலையைக் காட்டுவன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்கூடக் கல்லூரிகளில் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படவில்லை:

''கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
.. .. .. ..
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
.. .. ..
அன்ன யாவும் அறிந்திலார் பாரதத்து
ஆங்கிலம் பயில் பள்ளியுள் போகுநர்'' என்று

சொல்லும் பாரதியின் சுயசரிதை,

செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது
தீது எனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன,
நலமோர் எட்டுணையும் கண்டிலேன்இதை
நாற்பதாயிரம் கோவிலில் சொல்லுவேன்''

என்று அன்றைய கல்லூரிக் கல்வியைப் பற்றி முடிவு கட்டுகிறது.

''தமிழிலே என்ன இருக்கின்றது?'' என்று எள்ளி நகையாடியோர் எழுப்பிய வினாவில் தான், இன்றுள்ள தமிழ்க் கல்லூரிகளின் ஆணி வேர் கால் கொண்டது. இந்த வினாவுக்குப் பழந்தமிழ்ப் புலவர்கள் தங்கள் தொண்டுமூலமாக விடையிறுக்க முயன்றனர். பழுத்த மரம் நாடிச் செல்லும் பறவைகள் போல், அழுத்தமுறக் கற்ற புலவர்கள்பால் ஆர்வம் கொண்ட தமிழர்கள் சென்று, தங்கள் தமிழ்க் கல்வியை வளர்த்துக் கொண்டனர். தனிப் பட்டோரின் முயற்சியாலும் ஆர்வத்தாலும் தமிழ்க் கல்வி தளர்நடையிட்டு வளரத் தொடங்கியது.

ஆங்காங்கே இருந்த தமிழ்ப் பெரும் புலவர்கள், தேர்ந்தெடுத்துக்கொண்ட சில இலக்கியங்களிலே சிறப்பறிவு பெற்றிருந்தனர். சிலர் இலக்கணத்தில் வல்லவராயினர்; சிலர் இலக்கியத்தில் சிறந்திருந்தனர். சிலர், இராமாயணம், பாரதம் இவற்றைச் சொல்லுவதில் தனித்திறம் பெற்றிருந்தனர். சிலர் சங்க நூல்களில் நுண்மாண் நுழைபுலம் கொண்டிருந்தனர். பெரும்பாலோர் பிற்காலச் சிற்றிலக்கியங்களிலும், மற்றும் பலர் புராணங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர்; தாம் பெற்றிருந்த சிறப்பறிவுக்கேற்ப, இலக்கணப் புலவர் என்றும், இலக்கிய ஆசிரியர், புராணச் சொற்பொழிவாளர் என்றும் பெயர் குறிக்கப்பட்டனர். எனவே, தமிழ் பயிலும் ஆர்வங்கொண்டவர்கள் ஒருவரிடத்தே மட்டும், தமிழை முழுமையாகக் கற்க இயலவில்லை; ஒருவரே பல ஆசிரியர்களையும் அடுத்துக் கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

திருமடங்களின் ஆதீனத் தலைவர்களில் பலர் சிறந்த ஆசிரியர்களாக அமைந்து தமிழ் இலக்கிய இலக்கண சமய நூல்களைக் கற்பித்து வந்திருக்கின்றனர்: திருப்பாதிரிப் புலியூர், திருக்கோவிலூர் ஆதினத் தலைவராக அமர்ந்திருந்த அருள் திரு ஞானியார்அடிகள் ஆற்றல் வாய்ந்த சொல்லேருழவராகவும், ஞானாசிரியராகவும் அமைந்திருந்ததோடு மட்டுமின்றி இன்றுள்ள பல பேராசிரியர்களுக்குத் தமிழ் கற்பித்த பெருஞ் சிறப்பு மிக்கவர்கள்.

ஒருவரே பலரிடம் சென்று பாடங்கேட்டுப் புலமை பெறுவது என்பது எல்லார்க்கும் எளிமையாக இருக்கவில்லை; காலமும் பொருளும் ஆர்வமும் உடையார்க்கே அது அமையும். தமிழ்க் கல்வியை எல்லோரும் பெறுவதற்கான வழிவகைகளைக் காண்பதில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தமிழ்ப் புரவலர்கள் கருத்துச் செலுத்தினர். கருத்துக்குச் செயல் வடிவம் கொடுத்து நடைமுறைப்படுத்தியதில் தலைமையானவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித் துரைத் தேவரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் த. வே. உமாமகேசுவரரும் ஆவர். இவர்கள் புலவர்களாகவும், புரவலர்களாகவும்

''தமிழ் 'தம்' என்ற சொல்லடியுடன் 'இழ்' என்ற வேர்ச் சொல்லின் இணைப்பு ஆகும். 'இழ்' என்பது தமிழர் இனமும் மொழியும் பண்பும் குறிக்கும்''.

தமிழ் இலக்கிய வானில் திருக்குறள் ஒரு கதிரவன்.

மணிமேகலை ஒரு பால் நிலா வெறிக்கும் தண்மதியம்.

சிலப்பதிகாரம் பன்மணி ஒளி வீசும் ஒரு வானவில்.

சங்க இலக்கியப் பாடல்கள் யாவும் சேணில் நிலவும் ஒளிக் கோளங்களாகிய விண்மணிகள்.

—பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்.

## தமிழ்த்தாய் வணக்கம் !

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத் (து)
இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்துஓர் என்வ
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்.

வில்லிபுத்தூரார் மைந்தர் வரந்தருவார்.

அமைந்து தமிழ்க் கல்விக்கு வழி வகுத்தனர்; தமிழ்க் கல்லூரிகளைத் தோற்றுவித்தனர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் செந்தமிழ்க் கல்லூரியும், கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவின்போது கரந்தைப் புலவர் கல்லூரியும் உருவாயின. தஞ்சை மராட்டிய மன்னர் சரபோஜியின் அறக் கட்டளையிலிருந்து வடமொழிக் கல்விக்காகவே நடைபெற்று வந்த திருவையாற்று அரசர் கல்லூரியில், தமிழவேள், த. வே. உமாமகேசுவரரின் தளராத பெரு முயற்சியினால் தமிழ் புகுந்தது. தருமையாதீனத்தார் தருமபுரத்தில் கீழ்த்திசைமொழிக் கல்லூரியையும், திருப்பனந்தாள் திருமடத்தினர் திருப்பனந்தாளில் செந்தமிழ்க் கல்லூரியையும், பேரூர் திருமடத்தினர் பேரூரில் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியையும், மயிலம் திருமடத்தினர் மயிலத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியையும் ஏற்படுத்தித் தமிழ்க் கல்விக்கு வழிவகுத்தனர். நகரத்தாரின் பேரார்வத்தினாலும் ஆதரவினாலும் மேலைச் சிவபுரியில் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி கால் கொண்டது. தனிப்பட்டவர்களின் முயற்சியினால், நாகப்பட்டினத்தில் கனகசபை தமிழ்க் கல்லூரியும், காரைக்குடியில் இராமசாமி தமிழ்க் கல்லூரியும் சென்னையில் (மணலி) செந்தமிழ்க் கல்லூரியும், மோகரினூல் ஒரு தமிழ்க் கல்லூரியும் தோன்றின. இக்கல்லூரிகள் அனைத்தும்சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களால் 'இணைப்புக் கல்லூரிகள்' என்னும்நிலையில் ஏற்புடைமை கொண்டவை. பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களையும், விதிமுறைகளையும் பின்பற்றி மாணவர்க்குத் தமிழ்க் கல்வி அளிப்பவை.

இவையேயன்றி, தனிப்பட்ட முறையில் தமிழ்த் தேர்வு எழுதுபவர்களுக்கு ஊக்கமளித்து நெறிப்படுத்தும் நிலையில், தமிழகம் எங்கும்பல்வேறு இடங்களிலுள்ள தமிழ்க்கல்வி நிலையங்கள், பல்வேறு கழகங்களாகவும், சங்கங்களாகவும், மன்றங்களாகவும் கால்கொண்டு பயன் கருதாத் தொண்டு புரிந்து வருகின்றன.

இதைப் போன்ற முயற்சிக்கு வழிவகுத்து அடிநாளில் வித்திட்ட பேராசிரியர் நமச்சிவாய முதலியாரின் தொண்டும், தொலை நோக்கும் போற்றத்தகுந்தவை.

தனித்தமிழ்க் கல்வி மட்டுமே அளித்து 'புலவர்' 'வித்துவான்' பட்டச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு இதுகாறும் துணைபுரிந்த தமிழ்க் கல்லூரிகள், 'பி.லிட்' என்றும் பட்டப் படிப்புக்கும் வழி வகுத்து, ஏனைய பட்டதாரிகளுடன் ஒத்த சிறப்பினைப் பெறும் தகுதியையுடைய தமிழ் மாணவர்களை உருவாக்கி வருகின்றன.

தொடக்க நாளில் தனிப்பட்ட தமிழ்ப் புலவர்களின் முயற்சியில் கால்கொண்டு, தமிழ்ப் புரவலர்களின் ஊக்கத்தால் வளர்ந்து பல்கலைக் கழக ஏற்புடைமை கொண்ட கல்லூரிகளாக நிலைபெற்றுப் பட்டப் படிப்பினை அளிக்கும் வகையில் வரலாற்றுப் பின்னணி கொண்ட தமிழ்க் கல்விக்காக, அண்மையில் மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டித் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமையவிருக்கும் செய்தியையறிந்து—

''தமிழுக்கும் அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்''

என்னும் பாவேந்தர் பாரதிதாசனது பாட்டை உள்ளம் முணுமுணுக்கின்றது; தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கும் பெரும் பணியை மேற்கொண்டுள்ள தமிழக அரசையும் வாழ்த்திப் போற்றுகின்றது.

தமிழ்க் கல்வியால் விளையும் பயன்களை பற்றிப் பாவேந்தர் பாரதிதாசனார்—

''இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலைஎய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம்வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும்; வீரம் வரும்''

என்று பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.

தமிழுக்கு உரிய மதிப்பளிக்கவில்லை பல்கலைக் கழகங்கள் என்று ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் டாக்டர் ஜி.யு. போப்கொண்ட கவலை நீங்கி, தமிழுக்காகவே பல்கலைக் கழகம் தோன்றுகின்றது என்பதை அறிய ஒவ்வொரு தமிழரின் தலை நிமிர்கின்றது; உள்ளம் பூரிப்படைகின்றது; உரியன செய்வாரை வாழ்த்துகின்றது.

# உரை நடை பலவிதம்...

ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்னர் தமிழ் இலக்கியத்தில் உரை நடை வளர்ச்சி பெறத் தொடங்கியது. தமிழ்ச் சான்றோர் பலர், தமது சிறப்பான உரை நடையினால் தமிழன்னைக்கு அழகூட்டினார்கள்; இங்கே சில சான்றோரின் உரை நடைப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை எழுதியவர்கள் யாவர் என உங்களால் ஊகிக்க முடிகிறதா?

**1. த**ண்டமிழ் நாட்டு மக்களிடத்தும் பண்டைக் காலத்துச் சிறந்து விளங்கிய தீவீரச்செயல்களுள் ஏறு தழுவுதல் என்பதும் ஒன்றாகும். இது அக் காலத்து ஒரு விழாவாகவே கொண்டாடப்பட்டு வந்துள்ளது. பாரத காலத்துக் கண்ணபிரான் நப்பின்னையாரை ஏழு ஏறுகளைத் தழுவி மணந் திருப்பதனையும், சங்க நூல்களில் இவ்வேறு தழுவுதல் கூறப்பட்டிருப்பதனையும் நோக்கின் இதன் பழமை ஒருவாறு விளங்கும்.

**2. ம**னம் பற்றற்று நின்று எந்தப் பொருளையும் ஆராய்ந்து விளக்குவது அறிவியல். ஒரு பொருளில் விருப்பு அல்லது வெறுப்புக் கொண்டு மனம் ஈடுபட்டு உணர்த்துவது கலை. மனித உடம்பே ஆயினும் மனமே ஆயினும் பற்றற்ற நிலையில் நின்று அவற்றை ஆராய்ந்து விளக்குவது அறிவியல். மண்ணே ஆயினும் கல்லே ஆயினும் அவற்றில் மனம் பற்றிநின்று ஈடுபட்டு, உணர்ந்து கூறுவது கலை. அதனால்தான் உடலியல், உளவியல் என்பனவும் அறிவியலில் சேர்கின்ற நிலையையும் விண்மீன்களையும் தீட்டும் ஓவியங்களும் பாடும் பாடல்களும் கலை ஆகின்றன.

**3. அ**ழகு உயிர்கட்குப் புரிந்துவரும் உறுதுணையை என்னென்றுரைப்பது? அழகோ புலன் கட்குப் பொருளாகாது. அஃது உயிர்கட்குப் புரிந்துவரும் துணையோ, அளவில் அடங்காதது. அழகு புலன்கட்குப் பொருளாகிறதில்லை. ஆனால் அது புலன்கட்கு விருந்தாகிறது. அழகிய தோய்ந்த புலன்கள் உரமிழந்து உலர்ந்து போகும். புலன் கெட்ட உயிர்கட்கு வாழ்வேது? உணர்ச்சியேது? இன்பமேது? இன்ப நுகர்ச்சிக்கு வாயாக உள்ள புலன்கள் அழகில் படிந்த வண்ணமிருத்தல் வேண்டும். அப் படிவால் புலன்கள் பருகும் விருந்தமிழ்தம் உடலையும் உயிரையும் ஓம்புவதாகும்.

**4. 'திரு'** என்ற சொல் தொன்று தொட்டு நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் மக்கள் மொழியாகத் தமிழில் இருந்து வருகிறது. திருப்பதி, திருவண்ணாமலை, திருவானைக்கா எனத் தெய்வத் தலங்களின் முன்னும், திருக்குறள், திருக்கோவையார் எனச் சிறப்புடைய நூல்களின் முன்னும், திருநாவுக்கரையர், திருமங்கையாழ்வார் எனப் பெரியோர் பெயர்களின்' முன்னும் 'திரு' என்பது சேர்ந்து வருவது அறியத்தக்கது. இவற்றிலுள்ள 'திரு' என்பதற்குப் பதிலாக 'ஸ்ரீ' என்பதைச் சேர்த்தால் விபரீதமாக முடியும்.

**5. கா**தல் மனையாளும் கணவனும் கருத்திசைந்து நடத்தும் அறமே இல்லறம் எனப்படும். அத்தகைய இல்லறத்திலும் நல்லறம் வேறொன்றுமில்லை. பெண்மையைப் பேணாத நாடு என்றும் பெருமையுறமாட்டாது; இல்லறத்தைப் போற்றாத நாடும் எந்நாளும் ஏற்றமுறமாட்டாது.

யாழ்ப்பாணம் இலங்கையின் தொன்னகரம், தமிழர் வாழும் நன்னகரம் தமிழ்நாட்டிலே கலைமணம் கமழும் துறைமுக நகரங்கள் சில உண்டு; அவற்றுள்ளே தலைசிறந்தது மாமல்லபுரம். அங்குள்ள பாறையெல்லாம் பழங்கதை சொல்லும். கல்லெல்லாம் கலை வண்ணம் காட்டும்.

**6. ப**ண்டைத் தமிழ்ப் பெரியோர் பெண்களை அவர் இயல்பாலே-பண்பாலே- இரக்கத்தாலே— பொறுமையாலே -பிறர் நலம் பேணி, தந்நலமறக்கும் பெருமையாலே ஆண்களைவிடச் சிறந்தவர் என்பதை உணர்ந்து, அவர்தம் இயல்பை விளக்கி 'நல்லார்' என்றே பெயர் தந்து பெருமிதமுற்றார் என்பதை நினைத்தால், பெண்களை ஆண்களும் மதிப்பார்; ஆண்களைப் பெண்களும் பேணிட இன்னு மிக அன்பு கூர்வார். அந்நிலையுற்றபின் வாழ்வில் சரிசமமான சம்பூர்ண இன்பமும் ஆக்கமும் இருபாலரும் ஒத்தெய்தி மாண்புறுவதில் ஐயமென்ன?

**7. சொ**ற்கள் எல்லாவற்றையும் பழந்தமிழ் நூல்களினின்றும் ஆய்ந்து பொறுக்கி, எவ்வெச்சொல்

எவ்வெக்காலத்து நூலிற்றோன்றிற்றென்று கணிப்பின் தமிழ்மொழியின் காலம் இனிது நாட்டப்படும். ஒரு பொருளைச் சுட்டுதற்குப் பல சொற்கள் காணப்பட்டும் அத்துணையே பற்றித் தமிழ் மிகப் பழைய மொழியாமென்று கூறுதல் குற்றம் ஆமாறில்லை என்க.

8. அரண்மனை மாடியிலே அம்ச தூளிகா மஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடையவேண்டி அங்குச் சென்ற ஆணழகன் அகழியின் ஆழத்துக்கோ-அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால் யாங்ஙனம் அம்மங்கையைப் பெற முடியும்! இலட்சியமென்னும் எழிலுடையாளைப் பெற்று இன்புற எண்ணுவோரில் பலர் அகழிக்கு அஞ்சி, புறத்தே நின்று புகைபடு மனமுடன் போரிட்டுகொண்டோ புலம்பியோ கிடப்பர். ஒரு சிலருக்கோ உழவுக்கேற்ற விளைவு என்னும் மொழி வழி நடக்கும் அறிவாற்றல் உண்டு. அவர் தமைச் சலிப்பு அண்டாது; சாகசத்துக்கு அவர் பலியாகார். போலியைக் கண்டு ஏமாறார். புல்லரின் புன்மொழி கேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத் தூக்கி எறிந்துவிட்டு, போர்ப் புகின் யார்க்கும் இது நேரல் முறையே என்பது தெரிந்து, புலியுடன் போரிடுகையில் கிலி எனும் வலிகொளல் கூடாது என்பதறிந்து உயிர்கெடும் வரை நெடு வரைபோல் போரிடுவர் வீரர்.

9. எழுத்து சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டுக் கிலமுற்றிருந்த இந்நூலுரையின் பழைய பிரதிகள் பலவற்றையும் பலகால் ஒப்புநோக்கி இடையறாது பரிசோதனை செய்து வந்த பொழுது, கவிகளின் சுத்த வடிவத்தையும் உரையின் சுத்த வடிவத்தையும் கண்டு பிடித்தற்கும், உரையினுள் விசேடவுரையின்னது பொழிப்புரையின்னதென்று பிரித்தறிதற்கும், மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்து கோடற்கும், பொழிப்புரையை மூலத்தோடும் இயைத்துப் பார்த்தற்கும் ,பிழையைப் பிழையென்று நிச்சயித்துப் பிரகரித்தற்கும், பொருள் கோடற்கும் எடுத்துக்கொண்ட முயற்சியும் அடைந்த வருத்தமும் பல.

10. ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக்கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா?

11. அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர, காம்போஜ என்னும்படியான ஐம்பத்தாறு தேசங்களில் வங்க நாடு இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. வங்கத்துக்கு நமது முன்னோர்கள் எதற்காக இரண்டாவது ஸ்தானத்தைக் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை ஒரு காலத்தில் வங்கநாடு இரண்டாகப் பிரிக்கப்படப் போகிறது என்பதை ஞான திருஷ்டியினால் அறிந்து ஐம்பத்தாறு தேசங்களில் வங்க தேசத்தை இரண்டாவதாகச் செய்தார்களோ என்னவோ?

12. மனித வர்க்கத்தை அண்டி வாழும் பிராணிகளான நாய், பூனை, காக்கை, குருவி முதலியவற்றினிடம் பண்பட்டவர்கள் நடந்துகொள்ளும் முறை வேறு; பண்படாதவர்களின் போக்கு வேறு. இந்தப் பிராணிகளின் உடலுக்குள் கிடக்கும் சூட்சும உணர்ச்சிகளையும் அவற்றின் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் அன்பையும், பண்பட்டவன் எளிதில் காண்பான். அந்தப் பிராணிகளைப் பார்க்கும் போது அவைகளின் உடலில் சிறைப்பட்டுக் கிடக்கும் அந்தராத்மாவைப் பார்ப்பான். இதை இன்னும் விரித்தால் வேதாந்தமாகப் போகும்.

**விடைகள்**

1. கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை
2. மு. வரதராசனார்.
3. திரு வி. க.
4. ந. மு. வேங்கடசாமி நாட்டார்
5. ரா. பி. சேதுப்பிள்ளை
6. நாவலர் சோமசுந்தர பாரதியார்
7. மறைமலையடிகள்
8. பேரறிஞர் அண்ணா
9. உ. வே. சா.
10. தந்தை பெரியார்
11. கல்கி
12. ராஜாஜி

# மொழித் திறன் வளர்ப்போம்! முடிவிலா புகழ் குவிப்போம்!

— மாமூலன்

மொழி மனித வாழ்க்கைக்கு மிகத் தேவையான ஒன்று. மொழி கருத்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள உதவுகிறது. மொழி பண்பாட்டை உணர்த்தும் கருவியாகவும் கருத்தை உருவாக்கவும் அறிந்து கொள்ளவும் உதவும் கருவியாகவும், எண்ணங்களைப் பேச்சிலும் எழுத்திலும் வெளியிடும் கருவியாகவும், எண்ணங்களை இலக்கியச் சுவை உணர உதவும் கருவியாகவும் பயன்படுகிறது. எனவே மொழி கற்றல் இன்றியமையாத ஒன்றாகிவிடுகிறது. இந்திய மாநிலங்களில் பெரும்பான்மையோர் பேசும் மொழியே அம்மாநிலங்களின் ஆட்சி மொழியாகவும், அலுவலகங்களில் பயன்படுத்தும் மொழியாகவும் அமையும். இக்காலத்தில் அம்மொழிகளில் பலவித மொழித்திறமைகளை வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்கும் திறன், பேசும் திறன், படிக்கும் திறன், எழுதும் திறன் ஆகியவற்றில் மாணவர் திறமை பெறவேண்டும். மற்றவர் பேசுவதைச் சிரமமில்லாமலும் தெளிவாகவும் கேட்டுப் புரிந்துகொள்ளும் முறை முதலில் அமையவேண்டும். சொந்தமாகக் கருத்துக்களை மற்றவர்களிடம் கூறிப் புரிய வைப்பதற்குத் தேவையான திறமை பின்னர் அமையும். மற்றவர்கள் எழுதி வைத்துள்ளவற்றை வேண்டிய வேகத்தோடு வாய்விட்டும் மனதிற்குள்ளும் படித்துப் புரிந்து கொள்ளும் திறமை மூன்றாவதாக அமையும். சொந்தக் கருத்துக்களை நல்ல மொழியில் எழுதி வெளிப்படுத்தும் திறமை நான்காவதாகப் பெறப்படும். இத்துடன் இலக்கியங்களைச் சுவைப்பதற்கான திறமையும் மாணவர்கள் பெற வேண்டும்.

தாய்மொழிப் பாடத்தின் தலையாய நோக்கங்களில் ஒன்று மொழியினைத் திறமையாகப் பேசப் பயிற்றுவித்தலாகும். பேசும் திறனை வளர்க்கவேண்டுமாயின் ஆசிரியர் மாணவரைப் பேசச் செய்தே பயிற்றுவித்தல் வேண்டும்.

சொற்களை ஒலிக்கும் போது குரல் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி மாணவர்கள் தம் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளைப் பிறருக்கு உணர்த்த முடியும். அச்சம், வெகுளி, உவகை போன்ற வெவ்வேறு உணர்ச்சிகளைக் குரல் வேறுபாட்டால் உணர்த்தலாம். கட்டளையிடுதல், வேண்டுதல் என்பனவற்றிற்குள்ள வேறுபாட்டையும் குரலால் உணர்த்தலாம். சொற்களை அழுத்தமாக ஒலிப்பதன் மூலம் வலியுறுத்திக் கூறவேண்டிய கருத்துக்களை உணர்த்தலாம். சொற்களைத் திருத்தமாகவும் ஒலித்தல் வேண்டும். மழலைச் சொற்களையும், கொச்சைச் சொற்களையும் நீக்கித் திருத்தமாகப் பேசப் பயிற்சி தேவை. சொல்லவேண்டிய கருத்தைத் தெளிவாகவும் விரைவாகவும் கூறுதல் நல்லது. எனவே, முன்னுக்குப் பின் முரண்பாடின்றித் தெளிவாகப் பேசவும் தயங்கித்தயங்கி ஒவ்வொரு சொல்லாகப் பேசாமல் விரைவாகவும் பேசவும் பயிற்சி இன்றியமையாததாகும். விரைவாகப் பேசும் போது பொருள்விளங்கும்படியாகத் தகுந்த இடங்களில் நிறுத்தி மூச்சுவாங்கவும் ஏற்ற பயிற்சியளித்தல் வேண்டும். எளிமையாகவும், தன்னினைப் பின்றியும், இயல்பாகவும் பேசுவதற்குப் பயின்ற வாய்மொழிப் பயிற்சி வாய்ப்புத் தருகிறது. ‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’ என்ற மூதுரையில் இருந்து பயிற்சியினால்தான் மொழியை நன்றாகப் பேசலாம் என்ற கருத்தை உணரலாம்.

வெலிங்டன் சீமாட்டிக் கல்லூரியில் நடைபெற்ற பணிமனை,



டாக்டர். எம்.எஸ. திருமலை

பேசும்போது, பழமொழிகளையும், உவமைகளையும், மரபுத் தொடர்புகளையும் உபயோகித்துப் பேசுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். வாக்கியங்களைக் கோவையாக்கும் திறனை வளர்க்க வேண்டும். மாணவர்களின் வயதுக்கேற்றவாறும் மன வளர்ச்சிக்கேற்றவாறும், மொழி வளர்ச்சிக்கேற்றவாறும் மாணவர்களிடம் சமூகம் என்ன எதிர்பார்க்கிறது என்பதற்கு ஏற்றவாறும், பாடத் திட்டத்தின் தேவைக்கு ஏற்றவாறும் வாக்கியக் கோவைகளைப் பயன்புடுத்தும்படி மாணவர்கள் திறமையை வளர்க்க வேண்டும். மொழி வகுப்பில் கேள்வி-பதில் முறையைத் தொடர்ந்து பின்பற்றினால் கருத்துக்களைப் பேச்சுவடிவில் தெரிவிக்கிற திறமை எளிதில் வளரும்.

உரையாடல் வகுப்பு மூலம் கூச்சம், கொச்சைப் பேச்சு இவற்றை நீக்கலாம். எளிய பாடல்கள் மூலமாகவும் வாய் மொழிப் பயிற்சி அளிக்கலாம். தொடக்கப் பள்ளிகளில் படம் பார்த்துக் கதை சொல்லும் முறையைப் பின்பற்றி அளிக்கலாம். நாள்தோறும் காலையில் வகுப்பில் செய்தித்தாளிலிருந்து செய்திகளைக் கூறச்செய்யலாம். தெரிந்த கதைகளை வகுப்பில் கூறச் செய்யலாம். சிறுவர் மன்றங்கள் அமைத்து மாணவர்களுக்கிடையே பேச்சுத்திறனை வளர்க்கலாம். மாணவர்களை நாடகங்களில் பேசி நடிக்கச் செய்யலாம்.

படிக்கும் திறன் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். தொலைவில் உள்ளவர் கருத்தையும் காலத்திற்கு முற்பட்டவர் கருத்தையும் அறிந்துகொள்ள இத்திறனே பயன்படுகிறது. படிப்பது இரண்டு வகைப்படும். உரக்க படிப்பது ஒரு வகை; மனத்திற்குள் படிப்பது மற்றொரு வகை. உரக்க படிப்பதால் உச்சரிப்பைச் சீர்செய்து கொள்ளலாம். பேச்சுமொழி உச்சரிப்புக்கும் படிப்பு உச்சரிப்புக்கும் சில வேற்றுமைகள் உண்டு. இவற்றை உணர்ந்து கற்பிக்க வேண்டும். உரக்க படிப்பது என்பது எழுத்துக்கும் ஒலிக்குமுள்ள தொடர்பைத் தெளிவாகக் கற்றுத் தருவதோடு நின்றுவிடவில்லை; சொற்களை உச்சரிப்பது வாக்கிய இசையைச் சரியாகப் பயன்படுத்துவது, செய்யுளை படிப்பதற்கான இசை நயத்தைத் தெரிந்து கொள்வது. நிறுத்தற்குறிகளுக்கு ஏற்ப நிறுத்தியும் தொடர்ந்தும் ஏற்றியும் இறக்கியும் — படிப்பது ஆகிய எல்லாம் உரக்க படிக்கும்படி மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். உரக்க படிக்கக் கற்றுத்தரும்போது ஆசிரியரே மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமையவேண்டும்.

மாணவர்களைப் பாட சம்பந்தப்பட்ட வேறு நல்ல நூல்களைப் படிக்கும்படி தூண்ட வேண்டும். அகராதி, கலைக்களஞ்சியம் ஆகிய புத்தகங்களிலுள்ள பொருளடக்கம் (content) குறிப்பகராதி (index) முதலியவற்றைப் பயன்படுத்தும் பழக்கத்தை வளர்த்தல் வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்றபடி அமைகிற நூல்களை வாங்கிப் பள்ளி நூலகத்தில் வைக்க வேண்டும். ஒவ்வொரு நூலும் பொதுவாக எந்த வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பதற்குக் கொடுக்கப்படும் என்ற குறிப்பையும் இடவேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் குறிக்கப்பட்டுள்ள நூற்களில் எவை முதலிலும் எவை தொடர்ந்து பின்னரும் கொடுக்கப்பட வேண்டும் என்ற குறிப்புகளையும் அமைத்துக் கொள்வது நல்லது.

எழுதும் திறன் ஓர் ஆக்கத்திறனாகும். எழுதும்போதும் பேசும்போதும் மனத்தில் எழும் கருத்துகளை மாணவர்கள் மொழி வடிவத்திற்கு மாற்ற வேண்டியிருக்கிறது. கருத்துகளை மொழி வடிவில் மாற்றும் பணியில் மாணவர்கள் வெற்றி பெறவேண்டுமெனில் மொழிக் கூறுகளைக் கையாளுவதில் மாணவர்களுக்கு நல்ல வல்லமை இருக்கவேண்டும்.

எழுதும் திறனை வளர்ப்பதற்காக ஆசிரியர்கள் மாணவர்களைப் பார்த்தெழுதும்படிச் செய்ய வேண்டும். பின்னர் மாணவர்களே சொந்தமாக எழுதுவதற்குப் பயிற்சி தரவேண்டும். பார்த்தெழுதும் பயிற்சி சொற்களின் ஒலிகளுக்கும் அவற்றை எழுதப் பயன்படும் எழுத்துக்களுக்கும் இடையே உள்ள தொடர்பை மனத்திற் பதியச் செய்யும். பார்த்தெழுதும் பயிற்சி கீழ் வகுப்பு மாணவர்களுக்கு கட்டாயமாக அளிக்கப்பட வேண்டிய பயிற்சியாகும். ஒவ்வொரு பாடத்திலும் எழுத்துப் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். இவ்வெழுத்துப் பயிற்சிகள் எழுத்துக்களையும், வார்த்தைகளையும், வாக்கியங்களையும் பல்வேறு மொழி அமைப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும்.

டாக்டர் இராஜாராம்

இத்தகைய பயிற்சிகளைத் தமிழாசிரியர்கள் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு தமிழாசிரியர்களுக்கு அஞ்சல்வழி வானொலி வழித் தமிழ்ப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பணியினை மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் தமிழ்நாட்டுக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைத்து இந்திய வானொலி நிலையம் ஆகியவற்றின் உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

இப்பணியின் ஓர் அங்கமாகச் சென்னையில் தமிழாசிரியர்களுக்கான ஓர் பணிமனை, வெலிங்டன் சீமாட்டிக் கல்லூரியில் நடைபெற்றது.

இப்பணிமனையில் தமிழாசிரியர்களான திருவாளர்கள் சி. சிவப்பிரகாசம் இ.கோமதி நாயகம், கு.க. சம்பத், வெ. நாராயணன், கா. திருநாவுக்கரசு, ஆ. திருவாரூரன், க. துரியானந்தம், அ. முனிரத்தினம், சீ. சூரியமூர்த்தி, முத்து வாவாசி. வீ. இராசமாணிக்கம் (தாமரைக் கண்ணன்) ச. இரத்தினவேலு, ஆ. வீரராகவன், துரை. எழிலன், ந. கௌதமன், ஆ. இராசதுரை, திருமதி முத்து சிதம்பரன், திருமதி மு.தனலட்சுமி ஆகியோர் பங்கேற்றனர்.

இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்(கு)
இன்பம் தரும்படி வாய்த்தநல் லமுது.
கனியைப் பிழிந்திட்ட சாறு — எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு.

* * *

தமிழுக்கும் அமுதென்று பேர்— அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

—பாவேந்தர் பாரதிதாசன்.

கருத்தாளர்களாக, இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தைச் சேர்ந்த துணை இயக்குநர் திரு டாக்டர் எம்.எஸ். திருமலை, திரு டாக்டர் இராஜாராம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் திரு யு. கனபதி, மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஆர். கே. நாகு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் கடிகாசலம், மாநிலத் தமிழாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் இரா.சண்முகம் ஆகியோர் பங்கேற்று நடத்தினர். சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தைச் சேர்ந்த கல்வி ஒலிபரப்பாளர்களும் பங்கேற்றனர்.

மொழித்திறன் அடிப்படையில் தமிழ்ப் பாடங்களைக் கற்பித்தல், மொழியைக் கற்பிப்பதற்கான புதிய உத்திகளைக் கூறுதல். பாடப்பொருள் தொடர்புடைய புதிய செய்திகளைத் தொகுத்துக் கூறுதல், வானொலி மூலம் மொழி கற்பித்தலின் சில உத்திகளை மாதிரியாகக் காட்டுவது போன்ற பணிகளை இப்பணி மனையில் மேற்கொண்டனர்.

இப்பணி மனையில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் அனைவரும் இதன் பயனை விளக்கிக் குறிப்பிட்டார்கள்:

''இதுபோன்ற பணிமனையால் பலருடைய சிந்தனைகளும் ஒரே தொகுப்பாக உருவாக வாய்ப்பு உள்ளது. எங்களுக்கு ஆராய்ச்சி மனப்பான்மையைத் தோற்றுவிக்கிறது. பாடம் நடத்துவதில் ஒரு புதிய முறையை-மாணவர்கள் விரும்பும் வகையில் எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்துகிறது. பாடம் கற்பிக்கும் முறையில் ஒப்புமை முறையையும் ஆசிரியர்களால் உருவாக்க முடியும். அனைத்துக்கும் மேலாக மொழித் திறனை வளர்த்துக் கொள்ள முடியும். வருங்காலத் தலைமுறையினரை மொழித் திறன் மிக்கவர்களாக ஆக்கிட அடிப்படைப் பயிற்சியை இங்கு பெறுகிறோம்.''

இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் துணை இயக்குநரான டாக்டர் எம்.எஸ். திருமலை அவர்கள் குறிப்பிட்டதாவது:

மொழித் திறனை வளர்க்க நாங்கள் மேற்கொள்ளும் பணியினை மிகுந்த அளவில் கேரள மாநிலத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். முதலில் 1500 ஆசிரியர்களுக்கு மொழித் திறன் வளர்ச்சிக்கான பயிற்சியை அளிக்கத் திட்டமிட்டுள்ளோம். நாங்கள் தயாரித்துள்ள பயிற்று மொழி பாடத் திட்ட நூல்களை எல்லா தமிழாசிரியர்களும் விரும்பிக் கேட்கிறார்கள். பயிற்றுப் பாடத் தொகுதி நூல்கள் எல்லாருக்கும் கிடைக்க மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். தமிழ்மொழித்திறன் வளர்ச்சிக்கு எந்தெந்த வகையில் எங்கள் நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமோ, அந்தந்த வகையில் உதவிட நாங்கள் முன்வருவோம்.''

இப்பணிமனையை முன்நின்று நடத்திய இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் இராஜாராம் சொன்னார்:

எட்டு, ஒன்பது, பத்து வகுப்புகளுக்குரிய பாடத் திட்டத்திலிருந்து பயிற்றுப் பாடங்களைத் தயாரிக்கின்றோம். இப்பணிமனையிலேயே பாடங்கள் தயாரிக்கின்றோம்.

பயிற்றுப் பாடங்களோடு வானொலிக் கல்விப் பாடங்களைத் தயாரிப்பதற்கு உரிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இப்பணிகளில் மொழித் திறன் வளர்வது குறித்து பங்கேற்கும் ஆசிரியர்களே ஒப்புதல் அளிக்கின்றனர். இதுவே எங்கள் முயற்சிக்கு ஊக்கமூட்டுவதாக அமைந்துள்ளது.

இப்பணி மனையில் பங்கு ஏற்கும் ஏனைய கருத்தாளர்களும் மொழித் திறன் வளர்க்கும் பணி முக்கியமான பணி, முதன்மையான பணி என்கிறார்கள்.

நந்தம் செந்தமிழ் மொழி நாளும் வளர நடைபெற்றுவரும் அரும்பணிகளில் ஒன்றாகும் மொழித் திறன் வளக்கும் பணி. இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் தமிழ் ஆர்வலர்களின் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள்!

# தமிழன்னை பிள்ளைத் தமிழ்

தமிழ் இலக்கிய வானத்தில் ஒளி வீசித் திகழும் சிற்றிலக்கிய வரிசையில் பிள்ளைப் பாட்டு என்று வழங்கப் பெறும் பிள்ளைத் தமிழ் சிறப்பிடம் பெறுகிறது.

தெய்வங்கள், மன்னர்கள், தலைவர்கள் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவர் களாகக் கொண்டு அவர்களைக் குழந்தைகளாக உருவகம் செய்து பிள்ளைத் தமிழ் பாடுதல் புலவர்களின் மரபு. இஃது ஆண் பாற் பிள்ளைத் தமிழ், பெண் பாற் பிள்ளைத் தமிழ் என இரு வகைப்படுகிறது. குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தொன்றாம் திங்கள் வரை, பத்துப் பருவமாகப் பிரித்து, பருவத் துக்குப் பத்துப் பாடல் பாடுகிறார்கள் புலவர்கள்.

தமிழ் மொழியில் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைத் தமிழ் மலர்கள் காணப் பெறுகின்றன. ஒட்டக் கூத்தர் யாத்த ''குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்'' தான் இந்த வகையில் ஆதி நூல் எனத் தெரிகிறது. குமரகுருபரர் பாடிய 'மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்,' பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' போன்றவை புகழ்பெற்று விளங்குகின்றன.

பல்வேறு பிள்ளைத் தமிழ் பாடப் பெற்றிருப்பினும் இந்நாள்வரை, எந்தப் புலவரும் தமிழ்த் தாய்க்குப் பிள்ளைத் தமிழ் பாடவில்லை என்பது வியப்புக்குரிய செய்தியாகத் திகழ்கிறது.

எனவே, மதுரையில் நடைபெறும் 5-வது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக, தமிழ்த் தாயின் மீது பிள்ளைத் தமிழ் பாடப் பெறுதல் வேண்டும் என்று பெரிதும் விரும்பினோம். அதன் வெளிப்பாடே இங்கு காணப் பெறும், 'தமிழன்னை பிள்ளைத் தமிழ்' என்னும் தொகுப்பு!

ஒவ்வொரு பருவத்தையும் ஒவ்வொரு கவிஞரைக் கொண்டு பாடச் செய்துள் ளோம். அத்துடன் பருவத்துக்குப் பத்துப் பாடல் என்னும் நிலையையும் மாற்றி யுள்ளோம் — இட நெருக்கடி காரணமாக! மற்றும், காப்புப் பகுதியின் மரபையும் மாற்றியுள்ளோம். குழந்தையை, விநாயகர், திருமால், சிவபெருமான், முருகன் போன்ற தெய்வங்கள் காக்கவே என்று புலவர்கள் பாடுவது மரபு. இந்த மரபை மாற்றிய பெருமை பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு உண்டு; தமது சேக்கிழார் பிள்ளைத் தமிழில், சேக்கிழாரின் தொண்டர் புராணத்துப் பாட்டுடைத் தலைவர்களாகிய நாயன்மார்களையே காப்புக் கடவுளர்களாக்கினார் அவர். அந்தப் புது மரபையொட்டி இங்கே தமிழன்னையின் காப்புக் கடவுளாராக மறைமலையடிகளார் பாடப் பெற்றிருக்கிறார்.

தமிழன்னைக்குத் தக்கதொரு தொண்டினை இந்தப் பிள்ளைத் தமிழின் வாயிலாக நாங்கள் செய்திருக்கிறோம் என்று மனமகிழ்வு கொள்கிறோம். இது, தமிழ் இலக்கியச் சுவைஞர்களுக்கும், 'தமிழரசு' வாசக நண்பர்களுக்கும் சுவை நல்கும் என்று நம்புகிறோம்; சுவை நல்கினால், எங்கள் முயற்சியில் நாங்கள் வெற்றி பெற்றவர்கள் ஆவோம்!

# காப்புப் பருவம்

கலவைகள் விலகிடத் தனிமொழி உலவிடக்
கருதிய முதல்மகனாம்
கலைபல தெரிவுறு மறைமலை யடிகளைக்
கருதிவ ணங்கிடுவாம்.

குலமொழி அடிமுதல் தெளிவுறும் படிவளர்
கூர்மதிப் பாவாணர்
குளிர்மிகு மலரடி வழிதரும் எனமனம்
கொண்டுப ணிந்திடுவாம்;

உல்கினில் முதன்முதல் குலவிய புகழொடும்
உலவிய திருமகளாம்
உயர்தனி மொழியென அயலவர் புகன்றிட
ஒளிதரு செம்மகளாம்

அலைபல எதிரினும் நிலைபெறும் கலைமகள்
அமுதெனும் மொழியினளாம்
அழகிய கழகம் பழகிய தமிழ்மகள்
அணிநலம் புரந்திடவே.

(வேறு)

கற்பார் மனத்துணர்வை நற்பா படைத்துவளர்
கவிவாணர் அடிப்பூவையும்
கனலால் எரிந்துசிறை புகலால் மடிந்துமொழி
கருகாது வளர்த்தோரையும்

விற்போர் தொடுத்ததெனச் சொற்போர் நடத்திஉரம்
விளைவாக. உழைப்போரையும்
விதிரா மனத்துணர்விற் புதிதாய்த் தழைத்துவரும்
விழைவோடு தொழுதேத்துவாம்;

மற்போர் புரிந்துநம திப்பார் புரந்தவரின்
மடிமீது தவழ்ந்தமகளை
மருவார் பகைத்தருகில் வருவார் பதைத்துவிழ
மலைபோல நின்றமகளை

முப்பால் அருந்திநலம் தப்பா திருந்தவளை
முதலாக வந்தமகளை
முதிரா நலத்திளமை அதிரா தெடுத்துவரும்
மொழியாளைப் புரந்தருளவே!

**கவியரசு முடியரசன்**

# செங்கீரைப் பருவம்

கூடற் றமிழ்நகர்ப் புலவோரின் சங்கக்
கூட்டில் வளர்ந்த தேவி
கோதையாம் கயற்கண்ணித் திருமா தினுமூத்தோய்
கோதிலா வரங்கள் பெற்றோய்

தேடற் கரியதாம் செம்மைநூல் எல்லாமும்
தேடி யளித்த தேவி
தேவார முதலாய் தேம்பா வணிஈறாய்
தேசுடன் தந்த செல்வி!

பாடற் றமிழரசி பைந்தமிழ்த் தனியரசி
பாவலர் நெஞ்ச வீட்டில்
வாசம் புரியுநல் நேச விழியரசி
வாழ்வாங்கு வாழும் தாயே!

ஆடற் கலையரசி அமுத மொழியரசி
ஆடியருள் செங்கீ ரையே!
ஆலவாய் நகரினில் அரசோச்சி நின்றவள்
ஆடியருள் செங்கீ ரையே!

## புலவர் தமிழ்ப்பித்தன்

ஐம்பெருங் காப்பியம் அகப்புறப் பிரிவுகள்
ஆழமாய் வடித்துத் தந்தாய்
அணியியல் யாப்பியல் அனைத்துநீ செய்தாய்
அகிலத்தில் மின்னு கின்றாய்

பைம்பொழில் குலுங்கிடும் பனிமலர் போல்நிதம்
பாமலர் வழங்கு கின்றாய்
பாட்டியாம் ஔவையின் பாட்டினில் கலந்துநீ
பாருக்கு நீதி சொல்வாய்

கைம்மலர்க் குளிர்ச்சியாய், கண்மணித் திரட்சியாய்
காலமெலாம் ரட்சிக் கின்றாய்
கலம்பகம் தூது கவின்சிந்து பரணிஉலா
கணந்தோறும் வழங்கு கின்றாய்

ஐம்புலன் தீண்டிடும் அம்புயச் செல்விநீ
ஆடியருள் செங்கீ ரையே!
அஞ்சலி செய்வாரை அஞ்சேல் எனக்காப்பாய்,
ஆடியருள் செங்கீ ரையே!

# தாலப் பருவம்

## கவிஞர் சௌந்தரா கைலாசம்

பழமைக் கெல்லாம் பழமையெனப்
பாரில் விளங்கி நின்றாலும்
பருவ இளமை குன்றாமல்
பாட்டும் பயனும் தரும்தமிழே!

உழலும் மனித சமுதாயம்
உயர்ந்து திகழ நீதிநெறி
உணர்த்தும் தெய்வ வள்ளுவரை
உலகுக் களித்த அருந்தமிழே!

தொழுமோர் இராம காதையினைச்
சொல்லும் கவிதைத் தேனமுதம்
சொரிந்த கம்பர் தமைத்தந்து
சுடரும் எழிலார் செந்தமிழே!

பழமும் பாலும் கசந்துவிடப்
பண்ணும் இனிமை படைத்தொளிரும்
பண்புத் திருவே தாலேலோ!
பைந்தமி ழன்னாய் தாலேலோ!

தூண்டா விளக்கே சுடர்நிதியே
துன்பம் துடைக்கும் தூயவளே!
தோன்றாத் துணையே வான்நிலவே
தொன்மைத் தமிழே தேன்மழையே!

ஆண்டாள் மொழியில் வளர்ந்தவளே!
ஆழ்வார் இசையில் மலர்ந்தவளே!
அடியார் நால்வர் ஆரமதில்
அன்பின் வடிவாய்த் திகழ்ந்தவளே!

தீண்டா திருளை ஒழிப்பவளே
செம்மை நெறியை உரைப்பவளே
திகட்டா இனிமை நிறைப்பவளே!
தினமும் உயர்வில் களிப்பவளே!

ஈண்டார் மனமும் இருப்பவளே
இயலிசை கூத்தாய் இருப்பவளே!
இன்பத் தமிழே தாலேலோ
எம்முயி ரன்னாய் தாலேலோ!

பாரதி கவிதைத் தேரினிலே
பவனி சிறக்க வந்தாய்நீ
பயந்து கிடந்த மானிடனை
பாயும் புலியாய்ச் செய்தாய்நீ

பாரதி தாசன் வாய்மொழியில்
பட்டொளி வீசிச் சிரித்தாய்நீ!
பாவலன் தேவி கவியினிமை
பருகிப் பருகிக் களித்தாய்நீ

ஊரெதிர் கொண்டு வரவேற்கும்
உண்மைக் கவிஞர் பலபேரை
உலகம் உணரச் செய்தாய்நீ
உயர்வுத் தவிசும் தந்தாய்நீ

பூரண ஞானம் பொலிந்தாய்நீ
புத்தமு தாகிக் கலந்தாய்நீ
புவியின் முதலே தாலேலோ!
பூந்தமி ழன்னாய் தாலேலோ!

அண்ணனும் தம்பியும் பொருது களத்திடைக்
குருதி வழியாதே
அங்கொரு புலவர்தம் அறிவுரை செய்திடும்
அழகிய பண்பாடும்,
வண்ணமும் சந்தமும் வழங்கு புலவர்கள்
வறுமைக் கிடமானால்
வள்ளலர் அன்பொடு தரும்பரி சுக்குவை
வளந்தரு பண்பாடும்,
எண்ணமும் சிந்தையும் கோடி யொருபிழை
இழைத்து விடுமானால்
இருக்கும் உயிரினைக் கொடுத்து நிமிர்த்திடும்
இனிய பண்பாடும்
கொண்ட குடிக்கொரு வண்ணத் தலைவிநீ
கொட்டுக சப்பாணி!
குமரி எனப்புகழ் கொண்ட தமிழ்மகள்
கொட்டுக சப்பாணி!

சூரும் வீரும் ஆகிய பிள்ளைகள்
தொடர்ந்து விரைந்தோடித்
தொல்லை தரும்பகை இல்லை எனத்தொலை
துரத்தி விரட்டிடவும்,
ஆமு தாகிய பாடலில் வல்லவர்
யாழொடு குழலூதி
யாவரும் களித்திட வென்றி முரசினை
யார்த்து மகிழ்ந்திடவும்,
தேரினில் ஏறிநீ ஊர்வலம் வந்திடும்
திருப்பொலி காட்சிதனைத்
திரும்பவும் ஒருமுறை கண்டிட விழைந்தஎன்
சிந்தை களிகூரக்
கோரிய வரந்தரு வேனென மொழிந்துநீ
கொட்டுக சப்பாணி!
குமரி எனப்புகழ் கொண்ட தமிழ்மகள்
கொட்டுக சப்பாணி!

# சப்பாணிப் பருவம்

கவிஞர் நாரா. நாச்சியப்பன்



தலையிடை கடையெனத் தமிழ்வளர் அவையினைத்
தாரணி நன்றேத்த
தனிமொழி கனிமொழி தவமொழி உனைதினம்
தாசர்ம கிழ்ந்தேத்த

கலைபல நலமுற கனவுகள் நிறைவுற
காலமும் வென்றோங்க
கவினுறும் உலகினில் கவிமனம் செறிவுற
காவியம் நின்றார்க்க

அலைதிரள் கடல்களும் அலர்ந்தெழு மலர்களும்
ஆறுகள் குன்றோடும்
அருவிகள் பறவைகள் அடவிகள் அனையவும்
ஆயிரம் பண்பாட

சிலைகயல் புலிஎனக் கொடியுடை வடிவினை
சேர்த்தருள் நன்முத்தம்!
சிதையினில் கிடந்தவர் கொடைநலம் விளக்கினை
சேர்த்தருள் நன்முத்தம்!

(வேறு)

உலக முற்றும் ஒலித்து நிற்கும்
உயர்ந்த எங்கள் அரசியே
உரிய மன்றில் நிலவி அன்பின்
உணர்வு நல்கும் தலைவியே

இலகு செய்யுட் கனிகள் கொய்து
இனிமை பெய்யும் சரசியே
இளைய மக்கள் பலரைப் பெற்ற
இதய கன்னி இறைவியே!

பழகும் உன்றன் மழலைச் சொல்லில்
விளையும் இன்பம் பெருகுமே
பணிந்து நின்னை வணங்கு மன்பர்
மனங்கள் என்றும் உருகுமே!

அழகு மங்கை அரிய நங்கை
அமுத முத்தம் தருகவே!
அறிவு கொஞ்சும் அருளின் விஞ்சும்
அமுத முத்தம் தருகவே!

# முத்தப் பருவம்

கவிஞர்
மதுரைவாணன்

# வருகைப் பருவம்

மூல முதலாம் உலகத்தில்
மூத்த மகளாய்ப் பிறந்தவளே
முற்றும் துறந்த முனிவர்களும்
விரும்பி நெஞ்சில் புகுந்தவளே!

ஆல வாயின் அரசவையில்
அரசர் மடியில் தவழ்ந்தாடி
அகமும் புறமும் எழில்வடிவாய்!
அன்பே அறிவே தினம் வளர்ந்தாய்!

கால நதியை நீகடந்தாய்
கம்பன் இளங்கோ நக்கீரன்
கவிதை ஆரம் சூட்டிடவே
காவிய மகளாய்ப் பொலிகின்றாய்!

ஏலார் குழலி இளங்குமரி
எங்கள் வாழ்வின் திருமகளே
இன்முகம் காட்டி வருகவே!
இன்னல் களைய வருகவே!

எந்தாய் தமிழே குலவிளக்கே
எண்டிசை போற்றும் திருக்குறளின்
இனிக்கும் முப்பால் தனையுண்ட
இளமை பொங்கும் இளம்பிடியே

சிந்தும் பாடல் தெய்வீகம்
தீம்பால் போலும் காவியங்கள்
திருமால் போற்றும் பிரபந்தம்
தெய்வ நிழலில் நீவளர்ந்தாய்

செந்நெல் மணிபோல் தலைவணங்கி
சிந்தை கவரும் பல்வடிவம்
சிறப்பாய் ஏற்றாய் தலைநிமிர்ந்தாய்
செகத்தில் இறவா நிலைபெற்றாய்!

சிந்தா மணியே! செந்தேனே!
சிலம்பும் மேகலை ஒலித்திடவே
சேவடி யெடுத்து வருகவே!
சிந்தை மகிழ வருகவே!

கவிஞர்
தமிழ்நேசன்

# அம்புலிப் பருவம்!

மாண்புமிகு
மேலவைத் துணைத்தலைவர்
புலவர்
புலமைப்பித்தன்

### சாமம்

ககனப் பரப்புளக் காரிருள் அகற்றிடக்
கற்றவன் நீயாதலால்
கத்துகடல் சூழ்உலகம் அத்தனையும் முத்தொளிக்
கவின்நிலா ஒளிகாலலால்
மகரப் பசுங்கொடிகள் வானத்தி னிற்சுற்றி
வட்டமிட் டோடிவரலால்
மதியென்றும் வையத்து நிதிஎன்றும் மாப்புலவர்
வாழ்த்தித் துதித்திடுதலால்
அகரத் தொடக்கமென உலகத் துதித்துதவி
ஆதியாய் மேனிற்றலால்
அங்கணிலம் எங்குமருள் பொங்கவரு திங்களென
ஆர்கவி உவக்க, மருள் நோய்
அகலப் பிறந்தெனதி னுயிரிற் கலந்தவளொ
டம்புலி ஆடவாவே.
அன்னையென மூத்துமொரு கன்னியென வாய்த்தவளொ
டம்புலீ ஆடவாவே !

### பேதம்

திங்களுக் கொருநாளில் தேய்ந்து முழுமதியாதல்
தேர்ந்துனைத் திங்கள் என்றார்.
தேயா திவன்யாண்டும் காயாது முப்பாலில்
தேர்ந்தே திறம்ப டைத்தாள்
செங்கதிர்ச் சூரியச் செட்டிபாற் பட்டகடன்
தீர்க்கவொரு மார்க்கமறியாய்
செல்வத் திருக்குறளை எல்லா மொழிக்குமிவள்
தேடிக் கொடை கொடுத்தாள்
மங்குவாய் ! மாறாத மாசுற்றி ரங்குவாய் !
வறியையாய் இரவில் நிற்பாய் !
மானம் புரந்திடவும் வானம் தணிந்திடவும்
மற்றவர்க் கிரவு தீர்த்தாள்
அங்கயற் கொடிதவழ சங்கமுத் தமிழ்மகிழ
அம்புலீ ஆடவாவே !
அன்னையென மூத்துமொரு கன்னியென வாய்த்தவளொ
டம்புலீ ஆடவாவே !!

### தானம்

காராடை கொண்டபெரி யாரோடு தொண்டுசெய்
காஞ்சித் தலைவனுக்கென்
காட்சிக்கு நேராக ஆட்சிக்கு வாவென்று
கனகமுடி சூட்டி வைத்தாள்.
பாராளும் வேந்தரும் பாராட்டி நின்றேத்தும்
பாட்டுக்கு வேந்தனாக
பட்டம் கொடுக்கஅனல் இட்டுப் புரட்சிசெயும்
பாவலன் ஒருவன் வந்தான்
தீராம திக்குறை தீர்ந்திடக் கருதியென்
தேவியைச் சரணடைந்தால்
தேனமிழ் தக்கடலில் ஞானமிழ் தம்பெறவும்
திருவுளம் செய்து காப்பாள்
ஆராய்வு செய்வோருக் கப்பாலும் நின்றவளொ
டம்புலீ ஆடவாவே
அன்னைஎன மூத்துமொரு கன்னியென வாய்த்தவளொ
டம்புலீ ஆடவாவே !

### தண்டம்

கார்கொண்ட வானத்தில் நீர்கொண்ட மேகத்துக்
கைக்கும் எட்டாது வையம்
காணவர வாய்த்ததொரு ஆணவ மெதற்குமகள்
கண்டுகொண் டுள்ளம் நைந்தால்
ஏர்கொண்ட செந்தமிழ் இளங்குருளை வீரர்கள்
இந்திஆ திக்கம் கண்டே
இதயம் துடிக்கஉடல் உதிரம் கொதிக்கநிலம்
அதிரச் சினந்தெ ழுந்து
போர்கண்ட வரலாறு நீயின் றறிந்திலை
போதாத காலம்; உன்றன்
புல்லுடல் எங்கணும் சல்லடைக் கண்களாய்ப்
புண்படா தறிவ றிந்தே
ஆர்கண்டு மேத்துமொரு சீர்கொண்ட அன்றிலுடன்
அம்புலீ ஆடவாவே !
அன்னையென மூத்துமொரு கன்னியென வாய்த்தவளொ
டம்புலீ ஆடவாவே !

# கழங்குப் பருவம்

புலவர்
நெல்லை ஆ.கணபதி

தோன்மைநீ! வண்மைநீ! மென்மைநீ! தன்மைநீ!
தூய்மைநீ! வாய்மை நீயே!
சொல்வளம் பொருள்வளம் இலக்கிய இலக்கணத்
தொடர்வளம் யாவும்நீயே!

பன்மைநீ! ஒருமைநீ! உயர்திணை! அஃறிணை!
பாகுபா(டு) உடையவள்நீ!
பைங்கொடி தென்தமிழ் பொதிகையின் தென்றலாய்ப்
பயில்பவள் செல்விநீயே!

வன்மைநீ! வைகையை நீந்தியே புதியதோர்
வரலாறு படைத்தவள்நீ!
''வள்ளுவம்'' எனும் நெறி உலகாள வைத்தநீ!
வாழ்வாங்கு வாழ்பவள்நீ!

நன்மைநீ! திண்மைநீ! இளமைநீ! இனிமைநீ!
நங்கைநீ! கழங்காடுவாய்!
நற்றமிழ் அரசிநீ! கன்னிநீ! கொலுவிருக்கும்
நாயகி கழங்காடுவாய்!

கல்தோன்றி மண்தோன்றாக் காலமே தோன்றிநீ
கடல் கொண்ட பின்னும் வாழ்ந்தாய்!
கற்புக்கோர் அணியெனும் கண்ணகி நாவினில்
கனலாக வீசிநின்றாய்!

சொல்தோன்று முன்புநீ! நாலும் இரண்டுமாய்ச்
சொல்லுக்கும் உறுதியானாய்!
சுவைமிகும் அகப்பொருள் புறப்பொருள் இலக்கணம்
சொல்லிநீ உயர்வு செய்தாய்!

இல்தோன்றும் பொருள்என விருந்தோம்பும் முறைகூறி
இது பண்பு என்றுரைத்தாய்!
எந்தவோர் மொழியிலும் இல்லாத ழகரத்தை
ஏற்றுநீ சிறப்படைந்தாய்!

புல்தோன்றும் பொழுதேநீ இயலிசை நாடகம்
போற்றினாய்! கழங்காடுவாய்!
புதுமைக்கும் புதுமையாய்ப் பழமைக்கும் பழமையாம்
புதல்விநீ! கழங்காடுவாய்!

# அம்மானைப் பருவம்

கவிஞர் தமிழ்முடி

ஐம்பெரும் பூதமும் ஒன்றாய்ச் சமைந்தே
ஆகிய உலகினிலே,
ஆதியில் மாந்தர் தோன்றிய இடமே
அருமைத் தமிழகமே!

அம்புவி தன்னில் யாவரும் முதலில்
அருந்தமிழ் பேசினரே!
அதனால் உலகின் முதன்மொழி என்றே
ஆய்வால் சிறந்தனையே !

எம்மொழி யோரும், தம்மொழி யிடத்தே
இல்லாத் தனிச்சிறப்பாய்
இலங்கிடு காப்பியம் நன்னூல் பலவும்
இனிதே பெற்றவளே!

அம்மையும் அப்பனும் துதிசெய் தமிழே!
ஆடுக அம்மனையே !
அத்தகு வித்தக முத்தமிழ் மொழியே!
ஆடுக அம்மனையே !

(வேறு)

பூவும், பிஞ்சும், காயினிலும்,
பொருந்தாச் சுவையும், வடிவழகும்,
பொலியும் இனிய கவியதுவே
புத்தம் புதிய வார்ப்பாகும் !

மேவும் பண்டை நாளினிலே
மிளிரா, ஒளிரா, அழகெல்லாம்
மேன்மைப் புதுமை இலக்கியமாய்
வார்த்தே வளரும் முத்தமிழே !

தாவும் நதிகள் கடல்சேர்ந்தே
தாமும் கடலாய் ஆவதுபோல்
தமிழால் பாடும் பொருளெல்லாம்
தமிழாய் ஆகிக் கூத்திடுமே !

ஆவின் பொருள்போல் உயர்தமிழே !
ஆர்ந்தே ஆடுக அம்மனையே !
அறிவும் அருளும் வளர்தமிழே !
அன்பாய் ஆடுக அம்மனையே !

# ஊசல் பருவம்

புலவர் இளஞ்செழியன்

அந்தி மேடை ஆரணங்கே!
அரங்கில் ஆடும் பூங்கொடியே!
அழகிய வாணி நீயலவோ?
அறிவில் உனக்கு நிகருளரோ?

நந்திக் கலம்பகம் பாடியவன்
நாக்கில் நடந்த தேவதையே!
நச்சுக் கலம்பகம் பாடுபவன்
நாக்கைச் சுடுவாய் நாயகியே!

சிந்தாமணியே! மேகலையே!
சித்திரக் கவிகள் சொல்பவளே!
சிந்தை அணுக்கள் ஒவ்வொன்றும்
சிலிர்க்க வைப்பாய் நீதானே!

உந்தி எழுந்தென் செந்தேனே,
உதைத்து எறிந்தே உன்பகையை,
ஊசல் ஆடுக தமிழ்ப்பாவாய்!
உயர உயர ஆடுகவே!

இமய வரம்பனின் ஒருபுதல்வன்
எடுத்து உன்னை வளர்த்திட்டான்
இன்னும் பற்பல புலவர்களும்
ஏந்தி உன்னை வளர்த்திட்டார்!

சமயப் பெரியார் உனைவளர்த்தார்
சமயம் போலவும் நீவளர்ந்தாய்!
சமணப் புலவர் உனைவளர்த்தார்
சங்கப் புலவரை நீவளர்த்தாய்!

நிமிர வளர்ந்த தமிழ்ப்பெண்ணே!
நீயேன் வளர்ந்தாய் நெடிதாக?
நிமிரா மொழிகள் உனக்கிங்கே
நெடுநாள் பகையாய் ஆனதன்றோ?

அமரத் தன்மை உனக்குண்டு!
ஆயினும், எங்கள் ஓவியமே,
அயர்தல் இன்றி விழிப்பாக
ஆடுக ஊசல் ஆடுகவே!

# புதுப் பொலிவு பெறும் நான்மாடக் கூடல்

மதுரையில் உருவாகியுள்ள புதிய சுற்றுலா விடுதி

அ. மருது

உலகத்தமிழ் மாநாட்டினையொட்டி மதுரை மாவட்டத்திற்கும் நகருக்கும் பல்வேறு வசதிகள் செய்யப்படுகின்றன.

| | இலட்சம் ரூபாய் |
|---|---|
| (1) அரசுச் சாலைகளை செப்பனிடவும் போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கவும் சாலையோரங்களில் நிழல்தரும் மரங்கள் நடவும் ஒதுக்கீடு செய்த தொகை | 41.44 |
| (2) நகரின் எல்லைக்குள் ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளுக்கும், அகலப்படுத்தப்பட்ட சாலைகளுக்கும் செலவின ஒதுக்கீடு | 78.00 |
| (3) திருப்பரங்குன்றம் கிரி சாலையின் சீரமைப்புப் பணிக்கான ஒதுக்கீடு | 3.00 |
| (4) அரசுச் சுற்றுலா மாளிகையிலும் பொதுப் பணித்துறையின் பராமரிப்பிலுள்ள வைகாசி இல்லத்திலும் புதிய தங்கும் அறைகள் கட்டியதற்கான ஒதுக்கீடு | 11.40 |
| (5) குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து குழாய் இணைப்புகள் வழங்கியதற்கான ஒதுக்கீடு | 63.94 |
| (6) மதுரை நகரின் எல்லிஸ் நகர். பகுதியில் 564 குடியிருப்பு இல்லங்களும் அருப்புக் கோட்டைச்சாலையில் 444 குடியிருப்பு இல்லங்களும் குடிசைமாற்றும். வாரியத்தின் மூலம் கட்டியதற்கான ஒதுக்கீடு | 105.13 |
| (7) மாரியம்மன் தெப்பக்குளம் அழகு படுத்தும் பணிக்கான ஒதுக்கீடு | 6.00 |
| (8) சுற்றுலா மாளிகையில், சுற்றுலா வாரியத்தின் மூலம் இரு படுக்கைகள் கொண்ட 53 தங்கும் அறைகள் கட்டுதற்கான ஒதுக்கீடு | 54.50 |
| (9) மாநகராட்சி விடுதியில் கூடுதல் தங்குமிடங்கள் அமைக்கவும் நகரின் பல பாகங்களில் கழிவறை வசதிகள் செய்யவும் நிழல்தரும் மரங்கள் அமைக்கவும், வண்டியூர் கண்மாயை அழகுபடுத்தவும் ஒதுக்கீடு செய்த தொகை | 50.11 |
| (10) மாநகராட்சி எல்லையில் புதிதாக 30 சாலைகள் சீரமைக்கவும், 43 முக்கிய இடங்களில் நடைபாதைகள் அமைக்கவும் ஒதுக்கீடு செய்துள்ள தொகை | 75.00 |
| (11) கூடுதல் மையப்பேருந்து நிலையம் அமைக்க ஒதுக்கீடு | 11.51 |
| (12) திருமலை நாயக்கர்மகாலில்ஒலி ஒளிக் காட்சி அமைக்க ஒதுக்கீடு | 25.00 |

மேற்கண்ட சீரமைப்புப் பணிகளால் எழில் மதுரை பொலிவுற்றுத் திகழும்; சாலைகளின் சீரமைப்பு, நடைபாதை அமைப்புகள்போக்குவரத்து வசதியைப் பெருக்கும்; புதிய மின் இணைப்புகள் வண்ணவிளக்குகள் கொண்டதாக அமையும். திருமலை நாயக்கர் மஹாலில் பொருத்தப்படவுள்ள ஒலி-ஒளிக்காட்சி மக்களுக்கு சிந்தனையைத் தூண்டும்பொழுதுபோக்காக இலங்கும்; புதிய கூடுதல் பேருந்து நிலையம் நகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தி மக்களின் வசதியைப் பெருக்கும்; விண்ணகரக் கோபுரங்கள் கொண்டிருந்த கூடல் மாநகரம் குடிசை மாற்றுவாரியக் கட்டிடங்களால் பொலிவுற்றுத் திகழும்; மாரியம்மன் தெப்பக்குளச் சீரமைப்புப்பணி வரலாற்றுப் பெருமையை உணர்த்தி நின்று மக்களுக்கு உவகைப் பொழுது காண வழிகோலும் வண்டியூர்க்கண்மாயின் சீரமைப்பு வைகையின் வடகரைக்கு எழிலூட்டிக் காண்போர் கருத்தைக் கவரும் காட்சிக் கருவூலமாக அமையும்; மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் குழாய் இணைப்புகளும் நிரந்தரக் குடிநீர் வசதியைப் பெருக்கும்: கூடுதல் தங்குமிடங்கள் சுற்றுலா-பயணிகளின் தேவையை நிறைவு செய்யும்

# தமிழைப் பற்றி..



'இனிமையு நீர்மையுந் தமிழென லாகும்' —பிங்கலம்

'தேனுறை தமிழ்' —கல்லாடம்

'தமிழ் தழீஇய சாயல்' —சீவகசிந்தாமணி

''......பாண்டியர் பாடு தமிழ் வளர்த்த
கூடலின் வடா அது.........''.
—ஆசிரியமாலை, புறத்திரட்டு

'கானார் மலயற் றருந்தவன் சொன்ன
கன்னித்தமிழ்' —யாப்பருங்கலம்

'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே'
—மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும் அருந்தமிழ்
வாச நுகர்ந்து மகிழ்வோமே

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

உலகத்தமிழ் மாநாட்டு விழாக்காண கூடும் மக்களுக்கு வேண்டிய சுகாதார வசதிகள் பல செய்யப்படும். தூய குடிநீர் வசதியும், மருத்துவ வசதியும் நகரெங்கும் தோற்றுவிக்கப் படும். பொது நிலைக்கருத்தரங்கமையும் ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஒரு சித்தவைத்திய மருந்தகமும், நான்கு படுக்கைகள் கொண்டவொரு மருத்துவமனையும் தற்காலிகமாக உருவாக்கப்படும். கண்காட்சி அமையும், 'தமுக்கம்' மைதானத்தில் ஒரு சித்த வைத்திய மருந்தகம் மக்களின் தேவைக்காக இயங்கும், வண்டியூர் தெப்பக்குளத்திற் கருகிலும், மேலமாசி தெற்குமாசி வீதி சந்திப்பிலும்; செயிண்ட்மேரி உயர்நிலைப் பள்ளியிலும்; வடக்கு மாசி வீதியிலும் முதலுதவிச் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

மக்களின் தேவையை நிறைவு செய்யும் விதத்தில் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்படும்: போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் நோக்கில் இரண்டு தற்காலிக நகர்ப் பேருந்து நிலையங்கள் தல்லாகுளம் கண்மாய்க்கருகிலொன்றும் நீதிமன்றக்கட்டிடங்களுக்குப் பின்னாலொன்றுமாக அமைக்கப்படும்.

மக்களின் உணவு வசதிக்காக பொது நிலைக் கருத்தரங்கு நடைபெறும் ரேஸ் கோர்ஸ் மைதானம், கண்காட்சி அமையும் தமுக்கம் மைதானம் ஆகியவற்றில் சிற்றுண் சாலைகள் : பருகு நீரகங்கள் பரவலா அமைக்கப்படும். இவ்வாறோடமையாது மக்களின் பிற வசதிக்கான ஆக்கப்பணிகளனைத்தும் மேற்கொள்ளப்படும்.

'உலகத்தமிழகம்' என்ற கருத்தமைந்த அரங்கம்; அமைத்து 'தமிழரின் வெளி நாட்டு வணிகத் தொடர்பை' விளக்க மதுரை காமராசர் பல்கலைக் கழகம் விழைவு தெரிவித்துள்ளது. தொல்பொருள் ஆய்வுத்துறையினர் நிறுவும் காட்சிக்கூடம் 'பண்டைக்காலப் போர்முறையையும் வீர விளையாட்டுக்களையும்' சித்தரிக்கும்; ஓவிய நுண்கலைக் குழுவினரின் அரங்கம் பண்டைய ஓவியச் சிறப்பை எடுத்தியம்பும் காட்சிக்கூடமாகும்; மக்கள் தொடர்புத்துறையினரின் காட்சிக்கூட நாளங்காடி, அல்லங்காடி அமைத்து நனி நாகரிகத்தில் திகழ்ந்த தமிழர் வரலாற்று முறையைக் கூறும். 'இலெமூரியாக்கண்டம்' குறித்த காட்சிக்கூடமும் 'பழந்தமிழ் நாட்டுக் கிராமங்கள்' அடங்கிய காட்சிக் கூடமும் 'ஐவகை நிலப்பரப்பு' அடங்கிய காட்சிக்கூடமும் அமைத்து தமிழகத்தின் தொன்மையை எடுத்துக்காட்ட வழி கோலப்பட்டுள்ளது. அறநிலையத்துறையினர் அமைக்கும் 'கோவில்வரலாற்றுக் காட்சிக்கூடம்' வியன்மிகு கோபுரங்கள் கட்டி வாழ்ந்த தமிழனின் பெருமையை உணர்த்துவனவாக இருக்கும்.


# தமிழரசு

## சந்தா விவரம்

ஓர் ஆண்டு ரூ: 12
அரை ஆண்டு ரூ: 6

**விவரங்களுக்கு : பொது நிருவாக மேலாளர், 'தமிழரசு' அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை—600 002.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.